ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ


| முழக்கம்-16 | பாஞ்சஜன்யம் ஆகஸ்ட் 2013-171 | ஒலி 8 |
| --- | --- | --- |


## உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.476/2012. தொடர்பான நிகழ்வுகள்

**உச்சநீதிமன்றத்தில் இந்துசமய அறநிலையத்துறை சட்டங்கள் அரசியல் சாஸன விதிகளுக்கு முரணானவை என்று தகுந்த காரணங்களை முன்வைத்து அந்தச் சட்டங்களை நீக்கிட வேண்டும் என்றதொரு வழக்கு ஸ்வாமி தயானந்த சரஸ்வதி மற்றும் சிலர் சார்பில் தொடுக்கப்பட்டுள்ளதைப் பற்றி பாஞ்சஜன்யம் இதழ் எண் 165இல் தெரிவித்திருந்தோம். ஹிந்துதர்ம ஆசார்ய சபையின் சார்பில் இந்த வழக்கு தொடர்பான உரிய வழிகாட்டுதலை பெறுவதற்காக 14.7.2013 அன்று ஓர் கருத்தரங்கு புதுதில்லியில் நடைபெற்றது. பாஞ்சஜன்யம் ஆசிரியருக்கு இந்தக் கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு கிடைக்கப் பெற்றபோதிலும், சில தவிர்க்க முடியாத காரணங்களால் 14.7.2013 அன்று நடைபெற்ற கருத்தரங்கில் ஆசிரியரால்**

பங்குகொள்ள இயலவில்லை. இந்தக் கருத்தரங்கின் நோக்கம் குறித்து தயானந்த சரஸ்வதி ஸ்வாமியிடமிருந்து கிடைக்கப் பெற்ற கடிதமும், கருத்தரங்கில் நடைபெற்ற கருத்துப் பரிமாற்றம் பற்றிய இந்து நாளிதழில் 15.7.2013 அன்று வெளிவந்த செய்தியும் கீழே தரப்பட்டுள்ளன.

Swami Dayananda Saraswati

June 12 2013

Dear Shri. Krishnamachari.

The Hindu Dharma Acharya Sabha is pleased to invite you to attend a meet of people drawn from the Halls of Law and Justice. This meet is scheduled to take place at the India International Centre, New Delhi, on Sunday July 14 2013 with expected attendance of 100 persons.

The topic of discussion will be "The Constitutional Propriety of the State Controlling Temple Administration". It must have come to your notice that we have filed a writ petition in the Supreme Court against the States of Andhra Pradesh, Pondicherry and Tamil Nadu. I list below certain questions that we have centered on this subject.

1. Does our constitution permit long term or indefinite control of temple governance by the Government?

2. Are there any flaws in the major judgments of the Supreme Court in the matter of Govt. running temples, which are places of worship and not merely public charitable entities? If so what are they?



3. Are there significant inconsistencies in major judgments of different Hight Courts in respect of Endowments Acts of various States? If so, what are they and how to reconcile them?

4. What were the reservations of Sir C.P. Ramaswamy Iyer Commission (the only national level Commission to deliberate so far on temple governance) on Govt. Control as opposed to Govt. Regulation on temple management? Have some of these concerns come true with total control of temples by State Governments?

5. Has the Endowment Act substituted misuse and non-transparency on the part of erstwhile Trustees by those of the Government in controlling Temples? Are there glaring examples? Is there accountability to the temple worshiping Hindu devotees of temple properties which are endowments and income, which are offerings to the deity by the devotees?

6. Can a model of governance by developed to leave regulatory authority in Government hands and governance in the hands of temple worshiping Hindus? How best accountability and transparency can be ensured in such a model?

7. What was the intent of our Constitution on Majority Rights in regard to religious matters? Has judicial interpretation denied them while upholding Minority Rights in respect of religious freedom?

8. Is there a need for reviving a guiding Central Legislation which was prepared long back and

allowed to lapse in the Central Legislature? If such a legislation is passed by the parliament will it impinge on the State's Constitutional authority regarding temples as places of worship? If yes, how can it be taken care of?

9. Are there good grounds to hold that State Bureaucracy is running temples as Government Departments? Without a close nexus between State Bureaucracy and politicians of the day, is it not possible to ensure good and accountable / transparent governanace of temples? If no, what about mosques and churches? Is there not inequity in dealing with temples on one hand and mosques and churches on the other? Does the Constitution allow this?

Your participation is valuable to us. The symposium starts with Registration at 9:30AM at the India International Center (Kamaladevi Hall) and conclede at 4:00PM including breaks. Lunch will be served at 1:00 PM. Eminent jurists and senior advocates are expected to speak and throw light on the subject on hand. Please do attend and strengthen our hands in bringing our temples out of the firm grips of the government.

With best wishes,

Swami Dayananda.

இந்தக் கருத்தரங்கில் விவாதிக்கப்பட்ட விஷயங்களைப் பற்றி ஹிந்து நாளிதழில் (15.7.2013) வெளிவந்த செய்தி.



# Govt. control of Hindu temples questioned

**July 15, 2013 , By Staff Reporter**

Jurists, advocates and other civil society leaders expressed concern over "illegal" government control of Hindu temples and analysed the constitutional rights of their administration and management at a symposium organised in the Capital on this issue on Sunday.

Swami Paramatmanandaji, secretary of the Hindu Dharma Acharya Sabha (HDAS), which organised the symposium, said HDAS had filed a writ petition in the Supreme Court challenging the constitutional validity of the different State Acts used for controlling temples. Supreme Court advocate Pinky Anand argued that provisions in the law for take over of temples by the government were invalid and not tenable.

T.R. Ramesh, president of Temple Worshippers Society, said thousands of temples having assets worth millions of dollars in States like Tamil Nadu, Andhra Pradesh and Pondicherry had been taken over by the government. "In spite of the fact that the Supreme Court in 1954 struck down the "illegal" provisions of the Madras Hindu Religious and Charitable Endowment Act 1951 related to the appointment of executive officers in temples, the same provisions were brought back by legislating the Tamil Nadu Hindu Religious and Charitable Endowment Act in 1959," he said.

Several speakers raised the bogey of "Hindu victimisation" and "discrimination" by the government,

members of judiciary and other institutions of the Indian State, while highlighting the need for equal rights to Hindus and minorities.

Former Chief Justice of Punjab and Haryana High Court Rama Jois argued that an 11-judge Supreme Court Bench had held that Article 30 of the Constitution did not confer any special privileges on minorities. “It is not a right, it is only a protection. No one category must receive preferential treatment.”

Former acting Chief Justice of Rajasthan High Court Vishnu Sadashiv Kokje argued that the issue of government control over temples cannot be solved in the Apex Court, so Hindus needed to take routes of agitation and pressure building. K.N. Bhat, the Supreme Court lawyer who represented Lord Ram in the Ram Jamnabhoomi case, cautioned that legal remedies were fraught with uncertainties.

Swami Dayananda Saraswathi, HDAS convenor, said Hindus should unite to take back control of the temples from the Government. This was the only way the Hindus can find the money to propagate the religion and withstand the onslaught of conversions by other religions.

கூடிய விரைவில் திருவரங்கத்தில் இந்த வழக்கு பற்றிய உண்மைகளை மக்களுக்குப் பொதுகூட்டம் எடுத்து ரைக்க உரிய ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம். ராஜஸ்தான் உயர்நீதி மன்ற முன்னாள் தலைமை நீதிபதி திரு. விஷ்ணு சதாசிவ கோக்ஜே அவர்கள் தெரிவித்துள்ளபடி, தமிழ் நாடெங்கும் மக்கள் இந்துசமய அறநிலையத்துறை சட்டத் திற்கு எதிரான தமது எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும். அப்போதுதான் நீதித்துறையும் சரியான தீர்ப்பை வழங்க



இயலும். இந்துக்களிடையே ஒற்றுமை இல்லை. ஆனால் எல்லாம் ‘தெய்வச் செயல்’ என்று கூறிக்கொண்டு அவரவர் வயிற்றுப்பிழைப்பைத் தேடி அலைகின்றனர். இந்தியா அடிமைப்பட்டிருந்தபோது மகாத்மாகாந்தி அனைத்துத் தரப்பு மக்களையும் சுதந்திர போராட்டத்தில் ஈடுபடும்படி அறை கூவல் விடுத்தார். வழக்கறிஞர்கள், உயர்பதவி வகித்தோர் பலர் தம் வேலைகளை உதரித்தள்ளி விட்டு சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்றனர். கல்லூரிகளில் படித்துக் கொண்டிருந்த மாணவர்கள் கல்லூரிகளுக்குச் செல்லாது இந்திய விடுதலைக்கு ஒன்றுகூடிப் பாடுபட்டனர். ஆன்மீக அடிமைக்கு ஆளாகியுள்ளோம். ஆனால் நம்மால் திருவரங்கம் கோயிலில் நடைபெறும் ஆகம விரோதச் செயல்களையும், ஆன்மீக விரோதச் செயல்களையும் தட்டிக் கேட்பதற்குக் கூடத் துணிவில்லை.

ஆனால் இந்த நிலைமை மாற வேண்டும். இன்னொரு சுதந்திரப் போராட்டக் கனலை உற்பத்தி செய்யவேண்டும். ஆன்மீக விடுதலைத் தீ எங்கும் பரவ வேண்டும். இதில் இறைவழிபாட்டில் ஈடுபட்டுள்ளோர் உரியமுறையில் பங்கு கொள்ள வேண்டும்.

மோக்ஷத்திற்குப்படிகட்ட வந்திருக்கிறோம். இதைப் பற்றியெல்லாம் நாங்கள் பேசுவது கூடாது என்று கூறுபவர் கள் சமுதாய விரோதிகள். திருக்கோயில்கள் எதிர் கொண்டுள்ள ஆபத்துக்கள் ஒன்றல்ல இரண்டல்ல. நிமிர்ந்து நில், துணிந்து செயல்படு, எல்லாப் பழியையும் தெய்வத்தின்மீது போடாதே. உன் கடமையென்ன என்று உணர்ந்து பார். தீர்த்தம், ப்ரஸாதம், ஸ்ரீசடாரி வாங்கிக் கொள்வதோடு உன் மங்களாசாஸன கடமை முடிந்து விடுவதில்லை. ‘‘உகந்தருளின நிலங்களை அநுஸந்தித்தால் ஊணும் உறக்கமுமின்றிக்கே இவருடைய யாத்ரையே நமக் கெல்லார்க்கும் யாத்ரையாக வேணும்’’ என்று பிள்ளை லோகாசார்யர் கூறியதை கடலோசை போல மேடையில் முழக்கமிடுவதோடு ஸ்ரீவைஷ்ணவனின் கடமை முடிந்து விடவில்லை. ❋❋❋

# ஐஞ்சீர்ச்சடங்கு - அதைச் செய்தற்குரிய அதிகாரிகள் யாவர்?

**2013ஆம் ஆண்டு ஜூன் (169) இதழில் வெளிவந்த ஐஞ்சீர்ச்சடங்கு - அதைச் செய்தற்குரிய அதிகாரிகள் யாவர் என்ற கட்டுரையின் தொடர்பாக தாம்பரம் கைங்கர்ய ஸ்ரீமான். வீரராகவ ராமானுஜதாஸன் அவர்கள் தம் கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

"சமாச்ரயணம் சர்வாதிகாரமன்று" என்ற புதுவை பெருமாள் ராமானுஜதாஸரின் கட்டுரையை வெளியிட்ட "ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ" அவர்களுக்கும், எழுதிய தாஸர் அவர்களுக்கும் எனது நன்றி. இது இக்கால கட்டத்தில் மிகவும் தேவையே. எனது அனுபவங்களை - இதன் பால் எழுந்தவைகளை இனிக் குறிப்பிடுகிறேன். மார்கழி மாதங்களில் சென்னை உப்பட்டுர் ஆழ்வார் செட்டி சாரிட்டீஸ் கட்டடத்தில் காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்யர் சுவாமிகளின் திருப்பாவை விளக்க உரைகள் நடைபெறும். அம்மாதத்தில் மூன்று நாட்கள் திருப்பாவை உரைகளை ஒத்திவைத்து அங்கு நடைபெறும் ஸ்ரீவைஷ்ணவ மகாநாட்டுக்குச் செல்வேன். அப்போது ஸ்ரீமான். வேணுகோபால் நாயக்கர் அவர்கள் (அட்வகேட்) அதன் செயலாளர் பொறுப்பில் இருந்தார்.

திருவேங்கடம் பிள்ளை, முல்லை ஜெகன்நாதம் பிள்ளை போன்றோரிடமும் அங்கு வரும் பெரம்பூர் திருநாராயணதாஸர் அவர்களிடம் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. ஓர் ஆண்டு புவனகிரி அழகிய மணவாளராமானுஜ ஏகாங்கி ஸ்வாமிகள் சரித்திரம் என்ற நூலை வாங்கி பின்னர் படிக்க நேர்ந்தது.



ஸ்ரீமான். வேணுகோபால நாயக்கர் அவர்கள் தனது பேச்சின் போது எம்பெருமானார் (இராமானுசர்) 74 சிம்மா சானாதிபதிகளை நியமிக்கும் போது பிராமணர்களை நியமித்தார்கள். பிராமணர் அல்லாதவர் ஒருவரையும் 74 சிம்மா சானாதிபதிகளுள் நியமிக்காது விட்டுவிட்டார்கள் என்று உரையாற்றினார். இதைக் கேட்டு என்போல்வார் சிலர் அதிர்ச்சி அடைந்து, இது எதில் கொண்டு விடுமோ என கவலை அடைந்தோம். செயலாளர் அவர்களை எதிர்த்தோ, கண்டித்தோ யாரும் பேச முடியாது. அடுத்த ஆண்டு ஸ்ரீவைஷ்ணவ மகா நாட்டின் போது ஸ்ரீரங்கம் ராஜகோபுரம் கட்டி, பூச்சு வேலைகள் நடைபெற்றுக்கொண்டு இருந்தபோது, திருமண் காப்பு மேல் இரண்டு நிலைகளில் வடகலையாக பதிக்கப்பட்டுள்ளதாக கேள்விப்பட்டதன் பேரில் இதைப்பற்றி ஒரு தீர்மானம் கொண்டுவர செயலாளரான வேணுகோபால் நாயக்கரை வேண்டினேன். அவர் அதற்கு மறுப்பு தெரிவித்ததோடல்லாமல், பிராமணர்களையும் பழி தூற்றினார். அதிலிருந்து அவரின் தொடர்பைத் தவிர்த்தேன். அவர் ஸ்வாமி அண்ணங்கராசார்யர் தவிர மற்ற பிராமண வித்வான்கள் எவரையும் மதிப்பதில்லை. தான் பஞ்சஸம்ஸ்காரம் பெற்ற ஆசூரி ஸ்வாமிகளிடமும் மரியாதை இன்றியே இருப்பார். ஓர் ஆண்டு வந்தவாசி ஸ்ரீ நாதமுனிகள் சபை-வைஷ்ணவ மகாநாட்டில் அவர் சொற்பொழிவு ஆற்றியபோது தலைமைவகித்த ஆசூரி ஸ்வாமிகளிடம் மரியாதை குறைவாக நடந்து கொண்டார்.

இதைக்கண்ட பாகவதர்கள் கொதித்தெழுந்து, அவரைப் பேசவிடாமல் தடுத்து விட்டனர். அப்போது அம்மகாநாட்டுக்கு வந்திருந்தவரும், ஸ்ரீநாயக்கர் பஞ்சஸம்ஸ்காரம் ஆசூரி ஸ்வாமியிடம் செய்துகொள்ள காரணமாயிருந்தவருமான ஆற்காடு சந்திரசேகர நாயக்கர் என்கிற ஸ்ரீமான். சீதாபதி ராமானுஜதாஸர் எழுந்து வேணுகோபால் நாயக்கர் அவர்களை கண்டித்து, ஆசூரி ஸ்வாமிகளிடம் மன்னிப்பு கேட்க வைத்த பிறகே, அவரின் பேச்சைத் தொடரச் செய்தார்கள். ஸ்ரீ புவனகிரி அழகிய மணவாள ராமானுஜ ஏகாங்கி ஸ்வாமியின் சரித்திரம், அவர் மருமகன் வித்வான் கோ. சுந்தரராஜ ஸ்வாமி எழுதியதிலிருந்து தெரிந்து கொண்டவை.

ஏகாங்கி ஸ்வாமிகள் முதலில் திருக்கோவலூர் எம்பெருமானார் ஜீயர் மடாதிபதியாக இருந்த ஸ்வாமியினிடமே சமாச்ரயணம் செய்துகொண்டார்கள். அவர்களிடம் இருந்தே திருவாழி, திருசங்கு சின்ன முத்திரைகளை வாங்கி இவர் மற்றவர்களுக்கு சமாச்ரயணம் செய்துவந்தார். பின்னாளில் தனது ஆசார்யனையே எதிரிட்டுள்ளார்கள்! ஸ்ரீவானமாமலை மடத்து 23வது பட்டம் ஜீயர் ஸ்வாமியிடம் மறுமுறை சமாச்ரயணம் பெற்றதாகவும் குறிப்பிடுகிறார்கள். இராமநாதபுரம் சமஸ்தான பண்டிதராயிருந்த ஸ்ரீ.உ.வே.ரா. ராகவ அய்யங்கார் ஸ்வாமி தலைமையில் சொற்பொழிவு ஆற்றிய ஏகாங்கிகள் - இவரின் கருத்தை ஸ்ரீ.உ.வே. ராகவ அய்யங்கார் ஏற்காததால், அதிலிருந்து பிராமணர்கள் தலைமையில் பேசுவதில்லை என்ற சபதமேற்றார்கள். "சமாச்சரயணம் சர்வாதிகாரம்" என்ற தலைப்பில் திருப்பாதிரிபுலியூரில் - மாஜி மேஜிஸ்டேட் ஸ்ரீவரதராஜ நாயுடு தலைமையில் ஸ்ரீஏகாங்கி ஸ்வாமி பேசினார். அதற்கு திருவயிந்திரபுரம் கச்சி கிடாம்பி பாஷ்யம் ராமானுஜாசார்யர் சில மறுப்புகளை கண்டனங்களாகத் தெரிவித்தார்.

அவற்றில் சில 1) தலைமை வகித்தவர் ஏகாங்கிகளின் சிஷ்யர்; அதனால் நேர்மையாக நடக்க இயலாது. 2) உபய வேதாந்தங்களில் வல்லவரே தலைமை வகிக்க தகுதியானவர் என்பதாகும். இவைகளை தள்ளி அரசியல் கட்சிகள் தீர்மானங்கள் நிறைவேற்றுவதைப்போல பாமரர்களின் பொதுக்கூட்டத்தில் "சமாச்சரயணம் சர்வாதிகாரம்" என்று தீர்மானம் நிறைவேற்றி ஜெயகோஷம் செய்து கொண்டனர். இதில் முக்கிய தீர்விற்கு வேண்டியதை விடுத்து பிராமணர்கள் முதலான வெறுப்பு ஒன்றையே கொண்டுள்ளனர் என்பது அவர்களின் நூலில் இருந்தே தெரிகிறது.

தனது முதல் ஆசார்யனான - தனக்கு சமாச்சரயணம் செய்த திருக்கோவலூர் ஜீயர் மடாதிபதி ஸ்வாமி முதற்கொண்டு எல்லா பிராமணர்களையும் எதிரியாகவே கொண்டுள்ளார்கள். இவர்களின் வழித் தோன்றல்களும், மற்ற சிஷ்யர்களும் நெற்றியில் திருமண் காப்பு அணிந்து ஸ்ரீசூர்ணம் இடுவதற்கு பதில் மஞ்சள் இட்டுக் கொள்கின்றனர். திருமணச் சடங்கு



களையும் பிராமணர்களை அழைக்காமல் தாங்களே நடத்திக் கொள்கிறார்கள்.

எமக்காக அன்றோ இங்கு ஆண்டாள் அவதரித்தாள் - என்று நமக்காக ஆண்டாள் நாச்சியார் திருமொழியில் - வாரணமாயிரத்தில் 1) பார்பனச்சிட்டர்கள் பல்லாரெடுத்தேத்தி... காப்பு நாண் கட்ட ...., 2) வாய்நல்லார் நல்ல மறையோதி மந்திரத்தால்.... தீ வலஞ்செய்ய என்றும், 3) வேதம் வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து - (திருவாய்மொழி. 4.6.8) என்று அருளிச் செய்துள்ளவைகள் எல்லாம் கடலோசையா? புவனகிரி ஏகாங்கி ஸ்வாமி ஸ்ரீவைஷ்ணவத்திற்கு செய்த மிகப்பெரிய செயல்கள் எல்லாம் இதனால் மாசுற்றன. 'ஸ்ரீஏகாங்கி ஸ்வாமியின் சகோதரன் மகனான ஸ்ரீமான். வித்வான் **B.R.** புருஷோத்தமநாயுடு சென்னைப் பல்கலைக் கழகத்தில் விரைவுரையாளராகப் பணிபுரிந்தபோது - பகவத் விஷயம் திருவாய்மொழியின் ஈடு 36 ஆயிரப் படியையும், "ஆசார்ய ஹ்ருதயம்" என்ற நூலினையும் - தமிழாக்கம் செய்து பல்கலைக்கழக வெளியீடாக கொண்டு வந்தார்கள். எளிய தமிழ் நடையில் அரும்பெரும் செயல் செய்து, மூலத்தின் கருத்துச் சிதையாமல், மிகுந்த கவனத்துடன் பொருள் ஆதாயத்திற்கல்லாமல் மிகவும் ஈடுபாடுடனேயே ஸ்ரீவைஷ்ணவத் திற்கு தொண்டு செய்தார் எனலாம். இவ்வரியசெயல் எல்லாம் ஏகாங்கி ஸ்வாமியின் பேரில் இருந்த ஒருவகைக் கருத்து வேறுபாடு காரணமாக பலவித்வான்களையும், ஸ்ரீவைஷ்ணவ பெரியோர்களையும், அக்காலக் கட்டத்தில் ஈர்க்கத்தவறி விட்டது. இவரின் மற்றும் ஒரு தமிழாக்க வெளியீடான ஸ்ரீவசனபூஷணத்தை பல்கலைக்கழகப் பதிப்பாக வெளியிட முடியவில்லை.

மேற்குறிப்பிடப்பட்ட அனைத்து நூல்களின் தமிழாக்கத் தின்போது இவர்க்கு ஏற்பட்ட ஐயங்களைப் போக்கி, இவரின் கருத்தை திருத்தி உதவி செய்த பெரியார் - பிரபன்ன வித்வான் ஸ்ரீமான் **R.** வேங்கடராமானுஜதாஸர் அவர்கள். இவரைத் துணைகொள்ளவில்லையேல், ஸ்ரீ **B.R.P.** அவர்களின் வெளியீடுகள் அனைத்தும் இத்துணை சிறப்பாக அமைந்திராது. வை.மு. கோபால கிருஷ்ணமாசார்யர், வித்வான் வேங்கடராஜுலு

ரெட்டியார் போன்றோரின் உதவிபெறவும் இவரே காரணமாவார். "செயல் நன்றாக திருத்திப் பணிகொள்வான்" என்ற மதுரகவியின் அருள்வாக்கு ஸ்ரீமான். B.R. புருஷோத்தமநாயுடு அவர்கள் பால் நன்றாக நடந்துள்ளதாக அடியேனின் திண்ணமான எண்ணம்.

பிரபன்ன வித்வான் ஸ்ரீமான். R.வேங்கடராமானுஜதாஸர் அவர்கள் மிகவும் எளிமையானவர். பழகுவதற்கு இனிமை யானவர், நம்முன்னோர்கள் அருளிச் செய்த நூல்கள் அனைத்தையும் கற்று பாண்டித்துவம் பெற்றவர். புகழ் பொருளுக்கு ஆசைப்படாதவர். இவருடன் பழக வாய்ப்பு கிடைத்ததுவே அடியேனுடைய பேறாகக் கருதுகிறேன். தொழில் முறை காரணமாக அடியேன் அதிகம் அவருடன் பழகமுடியவில்லை. "பாகவத துவேஷம் போல, பிராமணத் துவேஷமும் சொரூப ஹானி" என்று இவரிடமிருந்து தான் கற்றுக்கொண்டேன். ஸ்ரீவசனபூஷணத்தின் தமிழாக்க நூலினையும் இவரிடமிருந்தே பெற்றேன். முதன்முதலில் ஸ்ரீவைஷ்ணவ சிம்மம் விருதினைப் பெற்ற ஏந்தூர் பிரபந்த வித்வான் ஸ்ரீமான். சடகோப ராமானுஜ தாஸர் தன்னை ஸ்வாமி என்று அழைப்பதை தவிர்ப்பீர். ராமானுஜதாஸன் என்று அழைப்பதையே விரும்புவார்.

குலந்தாங்கு சாதிகள் நான்குள் க்ஷத்ரியர்கள் யார்? திருமணச் சடங்குகளின் போது எந்த ஜாதியினர் எல்லாம் தலைப்பாகை அணிந்து நெற்றியில் பட்டம் கட்டி, ஆடை அலங்காரத்துடன், வாள்முதலிய ஆயுதங்களுடன், பிராமணர் களைக் கொண்டு வேள்வி செய்து, அரசாணி மரம் நட்டு, மணப்பெண்ணுக்கு மாங்கல்ய தாரணம் செய்து, பின் அம்மிமிதித்து திருமணம் செய்கிறார்களோ அவர்கள் எல்லோரும் க்ஷத்ரிய குலத்தவரே! நடைமுறையில்/தொழில் முறையில் வன்னியர், யாதவர், ரெட்டி, நாயுடு, முதலி எனப் பலவாராக பிரிந்திருப்பினும் இவர்கள் அனைவரும் க்ஷத்ரியர்களே! இவர்களுக்குப் பலதார திருமணமும், பலாத்கார திருமணமும் முன்னாளில் உண்டு. பெரியாழ்வார் திருமொழி 3.7, 3.8, மற்றும் நாச்சியார் திருமொழி வாரணமாயிரத்திலும் உள்ளவைகள் இதற்கு ஆதாரமாகக் கொள்ளலாம். ***



**திருக்குறுங்குடி பெரியநம்பி ஸ்ரீ.உ.வே. ஸ்ரீநிவாஸன் ஸ்வாமி தமது 11.7.2013 தேதியிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தமது கருத்தைத்தெரிவித்துள்ளார்.**

**ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ ஸ்வாமி ஸந்நிதியில் அடியேன் செய்யும் விண்ணப்பம். 2013ஆம் ஆண்டு ஜூலை "பாஞ்சஜன்யம்" இதழ் பக்கம் 13இல் "திருக்கோயில்களில் உள்ள தெய்வ உருவங் களை அழிப்பதோ, அதன் மதிளில் உள்ள கல்லைப்பிடுங்கு வதோ ஆகாது என்ற விபரம்" வெளியான இதே சமயத்தில், துக்ளக் (10.7.2013) இதழில் இன்டர்நெட் செய்தியாக "காளியின் சினம்" பற்றிய கட்டுரை கண்டேன். உடனே இதன் நகல் தேவரீர் பார்வைக்கு அனுப்பியுள்ளேன்.**

**காளியின் சினம்**

கடந்த வாரம் இன்டர்நெட்டில் srath.com என்ற 'வெப் சைட்டில்' சஞ்சய்ரத் என்பவர் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அந்தக் கட்டுரையின் முக்கிய பகுதிகள் இங்கே தொகுத்து தரப்பட்டுள்ளன. உத்தராகண்ட் மாநிலத்தில் ஓடும் அலக்நந்தா நதிக் கரையில் அமைந்துள்ளது தாரிதேவி ஆலயம். பத்ரிநாத் போகும் மலைப்பாதையில் இந்தக்கோயில் அமைந்துள்ளது. தாரி கிராமத் திலிருந்து தொங்கு பாலம் மூலமாக இந்தக் கோயிலை அடையலாம். திறந்த வெளிக்கோயிலான இங்கு காளியின் மார்பளவிலான திருவுருவச் சிலை நிறுவப்பட்டுள்ளது. இந்தக் கோயிலைக் கட்டிய ஆண்டு குறித்தோ, நபர் குறித்தோ தகவல்கள் இல்லை. அவ்வளவு பழமையானது.

இந்த தாரிதேவி ஆலயம், ஸ்ரீமத்தேவி பாகவதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 108 சக்தி கோயில்களில் ஒன்றாகக் கொள்ளப் படுகிறது. அங்குள்ள காளியின் முகம் ஒவ்வொரு நாளும் நேரத்துக்கு நேரம் சிறுமி, பெண், முதியவள் என்று மாறும் என்பது உள்ளூர் வாசிகளின் வாக்குமூலம். ஒருமுறை ஆற்று வெள்ளம் தாரிதேவி கோயிலுக்குள் புகுந்து தேவியின் சிலையை அடித்துக் கொண்டு போனபோது, ஒரு பாறையில் சிக்கி அது நின்று கொண்டது. அருகிலி ருந்த கிராம மக்களுக்கு ஒரு பெண்ணின் அழுகுரல் கேட்கவே, குரல் கேட்ட இடத்திற்கு ஓடி வந்து பார்த்தனர். அப்போது

வானிலிருந்து வந்த ஒரு அசரீரி 'தேவி சிலையைப் பழைய இடத்தில் மீண்டும் நிறுவுங்கள்' என்று அறிவுறுத்தியுள்ளது. இதையடுத்து, மக்கள் அதை உடனே செய்து முடித்தனர். இந்தக் காளியின் கீழ்பகுதி சிலை அதே உத்தராகண்ட் மாநிலத்தில் காளிமத் என்ற இடத்தில் அமைந்துள்ளது. தெளிவான சிலை வடிவத்தில் இல்லாவிட்டாலும் 'ஸ்ரீயந்த்ரா' என்ற பெயரில் பக்தர்கள் அங்கு வழிபட்டு வருகின்றனர். மேற்சொன்ன இந்த இரு கோயில்களும் 'இணை கோயில்களாகக்' கருதப்படுகின்றன. மேற்சொன்ன தாரிதேவி கோயிலை அப்புறப்படுத்தி விட்டு, மின்சார உற்பத்திக்காக அப்பகுதியில் அணை ஒன்றைக் கட்ட மாநில அரசாங்கம் பல காலமாக முயற்சி செய்து வருகிறது. இதற்கு உமாபாரதி உள்ளிட்ட பல தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர். இந்த நிலையில், கடந்த ஜூன் மாதம் 15ஆம் தேதி அந்த தாரிதேவி சிலையை அரசாங்கம் வேறு இடத்திற்கு அப்புறப்படுத்தி விட்டு, அணை கட்டும் பணியைத் துவக்கியது. உள்ளூர் மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தும், 'இந்தச் செயல் காளியின் கோபத்தைத் தூண்டும்' என்று அவர்கள் எச்சரித்தும், அரசு அதைப் புறக்கணித்து, காளி தேவியை அப்புறப்படுத்தி விட்டது.

காளியின் இரு பகுதி உருவங்களுக்கிடையேயான தூரத்தை அதிகப்படுத்துவதும், 'தாரி'யிலிருந்து 'காளிமத்'தை நோக்கி காளி கால் நீட்டிப்படுத்திருப்பதால், அதன் தலைப் பகுதி கோணத்தை மாற்றுவதும் காளியின் கோபத்தைக் கிளறி விடும் என்று மக்கள் எச்சரித்தனர். ஆனாலும், அரசு தனது முடிவை மாற்றிக் கொள்ளாமல் தாரிதேவியின் சிலையை வேறு இடத்திற்கு மாற்றி விட்டது. இதனால் கோபம் கொண்ட காளி வெகுண்டெழுந்தாள். அதன் விளைவு தான் கடுமையான மழையும் வெள்ளமும் உத்தராகண்ட் மாநிலத்தையே இன்று புரட்டிப் போட்டுள்ளது.

ஆயிரம் பேர் இறந்ததாக அரசுதரப்பில் கூறப்பட்டாலும், இறந்தோரின் எண்ணிக்கை ஐயாயிரத்தைத் தொட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது. இதற்கு காளியின் உக்கிரமே காரணம். எனவே, அரசு உடனடியாக காளிதேவியின் சிலையை பழைய இடத்திலேயே நிறுவி, கேதார்நாத்தில் வில்வஇலை கொண்டு பூஜை செய்ய வேண்டும். அப்போதுதான் காளியின் சினம் குறையும். இயற்கையின் சீற்றங்கள் தணியும். இல்லையேல் காளியின் சினம் இந்தியா முழுமைக்கும் பரவும். இந்திய வரலாற்றில் மிக மோசமான ஆண்டாகப் பதிவாகும். ***



# பதினாறாம் நூற்றாண்டு வைணவ புராண இலக்கியம்

ஆசிரியர் மு. அருணாசலம்.

இனி தல புராணம் என்று பேசும்போது ஒரு நிலையை மனத்தில் கொள்ள வேண்டும். 12ஆம் நூற்றாண்டின் பின்னர், சமயப்பற்று தமிழ்நாட்டில் மூன்று பிரிவாக இருந்தது என்பதை அறியலாம். ஒரு பிரிவு சைவ சமயம்; இது சிவாலய வழிபாடு, திருமுறை ஓதுதல் என்ற நெறியில் சென்றது. இரண்டாவது வைணவ சமயம். இது திருமால் ஆலய வழிபாடு, நாலாயிரம் ஓதுதல், பூர்வாசார்யர் வ்யாக்யானங்களை ஓதுதல் என்ற நெறியில் சென்றது. இச்சமயத்தார் அனைவரும் ஸ்ரீவைஷ்ணவர் கள் அனைத்து சாதியினர்களும் வைவண நெறியைப் பின்பற்றி வந்தனர். மூன்றாவது நெறி, சங்கரர் பரப்பிய அத்வைத நெறி.

ஒன்பதாம் நூற்றாண்டில் சங்கரர் தோன்றி அத்வைத நிரூபணம் செய்த பின்னர், முன் சில வேதியராயிருந்த தமிழ்ப் பிராமணர் அனைவரும், ஸ்மார்த்த அத்வைதிகளாயினர். இவர்க ளுக்கு ஆலய வழிபாடு முக்கியமல்ல. ஆகவே கோயில் வழிபாடு என்று பேசும் போது, பொதுவாக, பிராமணரல்லாத மக்கள், சைவர்கள், கோயில் ஈடுபாடு கொண்டவர்களாய், தல புராணம் பாடினார் கள். ஸ்மார்த்தப் பிராமணர்கள் சங்கரபாஷ்யங்களையே பற்றிக் கொண்டவர்களாய், கோயில் நெறியினின்றும் விலகி நின்றார்கள். ஸ்ரீவைஷ்ணவர்கள் வடமொழி நூல்களையும் நாலாயிர திவ்யப்பிரபந்தம் மற்றும் வேறு தமிழ் நூல்களில் ஈடுபாடு கொள்ளாதவர்களாய் வாழ்ந்து வந்தனர். ஆகவே தல புராணம் செய்யும் சூழ்நிலை வந்தபோது, சைவர் பெருவாரியாக நூல் செய்தார்கள், பிராமணர்கள் செய்யவில்லை. ஆகவே சைவத் தலபுராணங்கள் அதிகமாய்த் தோன்றின. வைணவத்தில் தலபுராணங்கள் தோன்றவில்லை; செய்ய வல்ல பிராமணரல் லாத வைணவர் மிகவும் குறைவு. செவ்வைச் சூடுவார் பிராமணர்; பாகவதம் இதிஹாசமாதலால் செய்தார்.

**வைணவ புராணங்கள்:**

**1. புராணவகை:** இதிகாசம், **புராணம்:** பாகவதம், **ஆசிரியர்:** செவ்வைச்சூடுவார், **பாடல்:** 4973, **காலம்:** கி.பி. 1500-1525.

**2. புராணவகை:** இதிகாசம், **புராணம்:** பாகவதம், **ஆசிரியர்:** அருளாளதாசர், **பாடல்:** 9147, **காலம்:** கி.பி. 1543.

**3. புராணவகை:** தலபுராணம், **புராணம்:** திருக்குருகை மான்மியம், **ஆசிரியர்:** திருக்குருகைப்பெருமாள் கவிராயர், **பாடல்:** 3030, **காலம்:** கி.பி. 1548.

**4. புராணவகை:** தலபுராணம், **புராணம்:** கூடற்புராணம், **ஆசிரியர்:** தெரியவில்லை, **பாடல்:** 757, **காலம்:** கி.பி. 1575-1600.

**5. புராணவகை:** சமயவாதம், **புராணம்:** இருசமயவிளக்கம், **ஆசிரியர்:** அரிதாசர், **பாடல்:** 2139, **காலம்:** கி.பி. 1500-1525.

**திருக்குருகை மான்மியம்:**

பெருங்காவியமாகிய இது முழுமையாகக் கிடைக்க வில்லை. கடவுள் வாழ்த்து, பதிகம் என்ற உறுப்புகளுக்குப் பின் 28 சருக்கங்கள் இருந்தன என்று ஐயரவர்கள் பிரதியின் ஏட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் செந்தமிழ்ப் பத்திரிகையின் வெளியீடாக இதன்பகுதி 1938ஆம் ஆண்டு தொடங்கி, பல ஆண்டுகள் வெளிவந்து 574 பக்கங்களோடு அந்த நூல் வெளியீடு முடிவடைந்தது. சங்கத்தார் ஏட்டில் 19 சருக்கம் வரையில் மட்டுமே உள்ளது. ஐயரவர்கள் உதவிய ஒரு பிரதியில் 26ஆம் சருக்கம் 83ஆம் செய்யுள் வரையிருந்தது; பின் மாமணவாள ரங்காசார்யர் 83-88 பாடல்களைப் பிரதி செய்து தொடுத்து அச்சருக்கம்முழுமையாயிற்று. அடுத்த இரு சருக்கங்கள் மாறன் திருவவதாரச் சருக்கம், மவுனம் நீங்கு சருக்கம் என்றும், மொத்தம் 3030 பாடல் என்றும், ஐயரவர்கள் ஏட்டுப் பிரதியின் முகப்பேட்டில் சொல்லப்பட்டுள்ளது.

ஆனால், 26 - 'வரம் பெறு சருக்கம்' வரை பாடல்கள் 2624 மட்டுமே அச்சிடப்பட்டுள்ளன. பின்னால், 'மாறன் திருஅவதாரச் சருக்கம்' என்ற தலைப்பில் 48 பாடல்கள் அச்சிடப்பட்டன. ஆனால் இப்பகுதி மட்டும், தனியாக, 'மாறன் திருவவதாரச் சரிதை' என்ற பெயரில் 'தனி வரலாறாகவும்' ஏடுகளில் காணப்படுகிறது. ✱✱✱

# ஜிதந்தே ஸ்தோத்ரம்

வேதங்களே அனைத்து வைதிகர்களுக்கும் மூல ப்ரமாணம் ஆகும். வேதத்தை ச்ருதி என்று நாம் கொண்டாடு கிறோம். கோடிக்கணக்கான ஆண்டுகளாக இருந்து வரும் இந்த ச்ருதிகள் இம்மைக்கும் மறுமைக்கும் வழிகாட்டிகளாக அமைந்துள்ளன. மனித வாழ்வின் அனைத்து கூறுகளும் வேதங்களில் விரித்துரைக்கப்பட்டுள்ளன. ஒரு நாட்டின் ஒருங்கிணைந்த இயக்கத்திற்கு எப்படி அரசியல் சாஸனம் என்றதொரு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதோ அவ்வாறே மனித இயக்கத்திற்குரிய கட்டுப்பாடு மற்றும் ஆணைகள் ஆகியவற்றை தன்னகத்தே கொண்டது வேதங்கள்.

வேதங்கள் கர்ம காண்டம் என்றும், ஜ்ஞான காண்டம் என்றும் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு உள்ளன. முந்தையது மேற்கொள்ளப்பட வேண்டிய கர்மாக்களைப் பற்றியதும், பிந்தையது பரப்ரஹ்மத்தையும், சித் அசேதனப் பொருள்களைப் பற்றிய அறிவும் ஆகும்.

வேதங்கள் உரைநடையிலும், ச்லோகங்களாகவும் அமைந்துள்ளன. இவற்றில் ச்லோக வடிவில் அமைந்துள்ள வைகளை மந்திரங்கள் என்றும் துதிப்பாடல்கள் என்றும் அழைக்கின்றோம். இந்தத் துதிப்பாடல்களை ஸ்தோத்ரங்கள் என்றும் அழைப்பதுண்டு. வேதங்களே நமக்கு கிடைக்கும் முதல் ஸ்தோத்ரங்களாகும்.

வேதங்களுக்கு அங்கமாய் அமைந்துள்ள இதிஹாச புராணங்களில் துதிப்பாடல்கள் அதிக அளவில் காணப் படுகின்றன. இதிஹாச புராணங்களை வேத உபப்ரஹ்மணங்கள் என்று கொள்வதுண்டு. ஸ்ரீராமாயணத்தில் ராமனைப் பற்றிய பல்வேறு துதிப்பாடல்களைக் காண்கிறோம். அவ்வாறே மிகப்பெரிய ஸ்தோத்ரமாகிய ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமம்

மஹாபாரதத்தில் அமைந்துள்ளது. புராணங்களாகிய ஸ்ரீவிஷ்ணு புராணம், ஸ்ரீமத் பாகவதம் போன்றவைகளில் ஸ்தோத்ரங்கள் எனப்படும் துதிப்பாடல்கள் விரிந்த அளவில் காணப்படுகின்றன.

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் ப்ரஸ்தானத்ரயங்கள் என்று கொண்டாடப்படும் உபநிஷத்துக்கள், ப்ரஹ்ம ஸூத்ரங்கள், மற்றும் ஸ்ரீ பவகத்கீதை ஆகிய ப்ரமாணங்களோடு ஸ்ரீபாஞ்சராத்ர, வைகானஸ ஆகமங்களையும் எல்லாவற்றிற்கும் மேலாக ஆழ்வார்கள் அருளிச் செயலையும் மிகச் சிறந்த ப்ரமாணங்களாக கொள்ளப்பட்டுள்ளன.

ஒரு ஸ்ரீவைஷ்ணவனுடைய அன்றாட செயல்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ப்ரமாணங்களின் அடிப்படையில் வகுக்கப்பட்டுள்ளன. ஒரு ஸ்ரீவைஷ்ணவனுடைய அன்றாட செயல்பாடுகளை உள்ளடக்கிய நூலுக்கு ‘ஆஹ்நிகம்’ என்று பெயர். எம்பெருமானார் அருளிச்செய்த ‘நித்யம்’ என்னும் க்ரந்தத்தில் ஒரு ஸ்ரீவைஷ்ணவன் மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள் விவரிக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீவைஷ்ணவனுடைய அன்றாடச் செயல்கள் ஐந்து காலப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை முறையே 1. அபிகமநம் (ப்ராஹ்ம முகூர்த்தத்தில் தொடங்கும் நாளின் முதற்பகுதியில் மனம் மொழி மெய்களால் செய்யப்படும் இறைவழிபாடு.) 2. உபாதாநம் - பாஹ்யமென்றும், அந்தரம் என்றும் இது இரண்டு வகைப்படும். அன்றாட ஆராதநத்திற்கும், அமுதுபடிகள் ஸமர்ப்பிப்பதற்கும் முயற்சிகளை மேற்கொள்வது பாஹ்ய உபாதாநம் எனப்படும். ஆத்மாவிற்கு நன்மை பயக்கும் க்ரந்தங்களைப் பயில்வது அந்தர் உபாதாநம் எனப்படும்.

3. பஞ்சமஹா யஜ்ஞங்களை மேற்கொள்வதும், ஆராதனத்தில் ஈடுபடுவதும், அதிதி ஸத்காரம் செய்வதும், இஜ்யை என்றழைக்கப்படும்.

4. ஸ்வாத்யாயம் எனப்படும் பகுதியில் க்ரந்தங்களைப் பயில்வது, ஆராய்வது அவற்றை மற்றையோர்களுக்கு எடுத்துரைப்பது எம்பெருமானைப் பற்றிய த்யானத்தை மேற்கொள்வது ஆகியவை அடங்கும்.



5. யோகம் எனப்படும் ஐந்தாவது பகுதியில் ஸ்ரீவைஷ்ணவன் தனக்கும் எம்பெருமானுக்குமுள்ள நவவித ஸம்பந்தத்தை முன்னிட்டுக் கொண்டு, தன் ரக்ஷணையை எம்பெருமானிடம் ஸமர்ப்பிப்பது.

ஸ்ரீவைஷ்ணவ க்ரந்தங்களில் மிகுதியாக அமைந்துள்ளவை ஸ்தோத்ரங்களாகும். யாமுனாசார்யருடைய ஸ்தோத்ர ரத்னமே ஸ்தோத்ரங்களில் தலையாய க்ரந்தமாகும். யாமுனாசார்யர் தொடங்கி பல்வேறு பூர்வாசார்யர்களும் மற்றையோர்களும் எண்ணிலடங்கா ஸ்தோத்ர க்ரந்தங்களை இயற்றியுள்ளனர். யாமுனாசார்யருடைய ஸ்தோத்ர ரத்னம், சதுச்லோகி, எம்பெருமானாருடைய கத்யத்ரயம், ஆழ்வானுடைய பஞ்சஸ்தவம், ஸ்ரீபராசரபட்டருடைய ஸ்ரீரங்கராஜஸ்தவங்கள், ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் மற்றும் ஸ்ரீமணவாளமாமுனிகள் ஆகியோர்களுடைய பல்வேறு துதி நூல்கள், மற்றுள்ள ஆசார்ய பெருமக்களின் துதி நூல்கள் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குக் கிடைத்துள்ள செல்வங்களாகும்.

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமத்தில் காணப்படும் ஜிதந்தே ஸ்தோத்ரம் ஸ்ரீவைஷ்ணவர்களால் ஓர் உன்னத நிலையில் கொள்ளப்பட்டுள்ளது. ஸ்ரீவைஷ்ணவர்களுடைய அன்றாட திருவாராதனத்திலும், திருக்கோயில்களில் நடைபெறும் பஞ்சகால ஆராதனங்களிலும் ஜிதந்தே ஸ்தோத்ரம் ஓதப்படுகிறது.

ஜிதந்தே என்ற சொல்லுடன் இந்த ஸ்தோத்ரம் தொடங்குவதால், இந்த ஸ்தோத்ரம் முழுமையும் ஜிதந்தே ஸ்தோத்ரம் என்றழைக்கப்படுகிறது. ரிக் வேதத்தின் ஒரு பகுதியாக இந்த ஜிதந்தே ஸ்தோத்ரம் கொள்ளப்படுவதால், இது மந்த்ரம் என்றே அழைக்கப்படுகிறது. ‘ஜிதந்தே’ யாவது ருக்$_3$வேத$_3$கி$_2$லம்; என்று ஸ்ரீபெரியவாச்சான்பிள்ளை ஜிதந்தே ஸ்தோத்ர அவதாரிகையில் குறிப்பிட்டுள்ளார். இந்த நூலின் முதல் ச்லோகம் மட்டும் மந்த்ரமாகவும் மற்றைய ச்லோகங்கள் ஸ்தோத்ரங்களாகவும் கொள்ளப்பட்டுள்ளது. ஜிதந்தே ஸ்தோத்ரத்திலிருந்து எடுக்கப்பட்ட சொற்றொடர்கள்

பூர்வாசார்யருடைய வ்யாக்யானங்களில் காணப்படுகின்றன. திருவாராதனத்தின் முடிவில் ஜிதந்தே ஸ்தோத்ரம் அநுஸந்திக் கப்பட வேண்டுமென்று ஆகமங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு முறையும் ஒரு ஆராதன கைங்கர்யத்தை செய்து முடித்த பிறகு "மந்த்ரஹீநம் க்ரியாஹீநம் ப$_4$க்திஹீநம் யத$_3$ர்சநம்" என்று சொல்ல வேண்டும். இந்த வார்த்தையானது, நான்காவது ஜிதந்தே ஸ்தோத்ரம் 15ஆவது ஸ்தோத்ரமாக அமைந்துள்ளது. இதே ஸ்தோத்ரமானது பரமஸம்ஹிதையின் 23ஆவது அத்யாயம் 46 மற்றும் 63ஆவது ச்லோகங்களிலும், 29ஆவது அத்யாயம் 21 மற்றும் 40 ச்லோகங்களாகக் காணப்படுகின்றன.

தற்போது பதிப்பிக்கப்பட்டுள்ள ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூல்களில் ஆறு இடங்களில் ஜிதந்தே ஸ்தோத்ரத்திலிருந்து வாக்யங்கள் காணப்படுகின்றன. முதல் ஜிதந்தே 14ஆவது ஸ்தோத்ரத்திற்கு வ்யாக்யானம் இட்டருளின பெரியவாச்சான் பிள்ளை: "(இத்யேவம்) 'இதி' என்றும், 'ஏவம்' என்றும் அர்த்தத்தினுடையவும் சப்தத்தினுடையவும் (சொல்லினுடையவும்) ஸ்வரூபம் சொல்லுகிறது. இத்தால் அல்லாத ஜிதந்தைகளிற்காட்டில் இதுக்கு உண்டான ஏற்றம் சொல்லுகிறது" என்று அருளிச் செய்துள்ளார்.

சில ஸ்ரீகோஶங்களில் ஐந்து ஜிதந்தே ஸ்தோத்ரங்களே காணப்படுகின்றன. ஆறாவது ஜிதந்தே ஸ்தோத்ரம் பிற்காலத்திய சேர்க்கை என்றும் கொள்வார் உண்டு. ஒரு ஸ்ரீவைஷ்ணவனுக்கு வகுக்கப்பட்ட ஐந்து கால செய்கைகளின் முடிவில் ஒவ்வொரு ஜிதந்தேயும் அநுஸந்திக்கப்பட வேண்டும் என்பதற்காகவே ஐந்து ஜிதந்தேக்கள் அமைந்துள்ளன என்று சில பெரியோர்கள் குறிப்பிடுவர். "உபசாராபதே$_3$ஶேந க்ருதாநஹரஹர்மயா | உபசாரநிமாந் ஸர்வாந் க்ஷமஸ்வ புருஷோத்தம ||" என்று முதல் ஜிதந்தேயின் முடிவில் உள்ள வாக்யம் கொண்டு அபிகமநத்தின் முடிவில் முதல் ஜிதந்தே வாக்யத்தையும்,

இரண்டாம் ஜிதந்தே (40) வாக்யமான, "யாக$_3$ாவஸாநஸமயே தே$_3$வதே$_3$வஸ்ய சக்ரிண: நித்யம் கிங்கரப$_4$ாவேந ஸ்வாத்மாநம் விநிவேத$_3$யேத்" என்ற ஸ்தோத்ரத்தை 'இஜ்ஜை' எனப்படும் காலப்பகுதியிலும், உபாதாநம் எனப்படும்



மூன்றாவது காலப்பகுதியில், மூன்றாவது ஜிதந்தேயில் 16ஆவது ஸ்தோத்ரமான "கர்மணா மநஸா வாசா யா சேஷ்டா மம நித்யஶ: கேஶவாராத$_4$நே ஸா ஸ்யாத் ஜந்ம ஜந்மாந்தரேஷ்வபி" என்ற ஸ்தோத்ரத்தையும், ஸ்வாத்யாயம் எனப்படும் நான்காவது காலப்பகுதியில், நான்காவது ஜிதந்தே 15 மற்றும் 16ஆவது ஸ்தோத்ரங்களையும் - "மந்த்ரஹீநம் க்ரியாஹீநம் ப$_4$க்திஹீநம் யத$_3$ர்சநம்; தத்க்ஷந்தவ்யம் ப்ரபந்நாநாமபராத$_4$ஸஹோ ஹ்யஸி; அஜ்ஞாநாத்$_3$யதி$_3$ வா ஜ்ஞாநாத$_3$ஸூப$_4$ம் யத்க்ருதம் மயா க்ஷந்தவ்யம் தத$_3$ஶேஷேண த$_3$ாஸ்யேந ச க்$_3$ருஹாண மாம்" -, ஐந்தாவது காலப்பகுதியாகிய யோகத்தில் ஐந்தாவது ஜிதந்தே இருபதாவது ஸ்தோத்ரத்தையும் - "த்வமேவ வேத்ஸி ஶ்ரேயோ மே நேத$_3$மேததி$_3$தீதி ச பு$_3$த்$_3$தி$_4$யோக$_3$ம் ச மே தே$_3$ஹி நேய த்வாமுபயாம்யஹம்" - அநுஸந்திக்க வேண்டுமென்று ஓர் நடைமுறை உள்ளது. ஆறாவது ஜிதந்தே ஸ்தோத்ரங்கள் ஒருநாளின் எந்தப் பகுதியிலும் அநுஸந்திக்கலாம் என்றும் ஒரு நியமம் உள்ளது. ஜிதந்தே ஸ்தோத்ரத்திற்கு ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்கள் மட்டுமல்லாமல் த்வைத மத ஆசார்யரான வைஜயந்தி என்பாரும் வ்யாக்யானம் இட்டருளியுள்ளார். மைசூர் Oriental Research Libraryயில் இதன் ஓலைச்சுவடி பாதுகாக்கப்பட்டு வருகிறது.

ஶ்வேதத்வீப வாஸிகள் ஜிதந்தே ஸ்தோத்ரத்தை முதன் முதலில் அநுஸந்தானம் செய்து கொண்டு வந்தார்கள். இந்த ஸ்தோத்ரத்திற்கு முதன் முதலில் விரிவானதொரு விரிவுரை வழங்கியவர் ஸ்ரீபெரியவாச்சான்பிள்ளையாவார். ஆனால் அவ்வாறு அவர் அருளிச்செய்த வ்யாக்யானத்தின் முதல் ஜிதந்தேயின் பதினான்கு ச்லோகங்களுக்கு மட்டும் அமைந்துள்ள வ்யாக்யானங்கள் நமக்குக் கிடைத்துள்ளன. அவர் அனைத்து ஜிதந்தே ஸ்தோத்ரங்களுக்கும் வ்யாக்யானம் இட்டருளினாரா என்பதை உறுதிசெய்ய இயலவில்லை. 20ஆம் நூற்றாண்டில் புத்தங்கோட்டம் ஸ்ரீ.உ.வே. ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமியும், மதுராந்தகம் ஸ்ரீ.உ.வே. வீரராகவாசார்யர் ஸ்வாமியும் அனைத்து ஜிதந்தே ஸ்தோத்ரங்களுக்கும் மிகச் சிறிய அளவில் வ்யாக்யானம் இட்டருளியுள்ளனர்.

இனி பெரியவாச்சான்பிள்ளை இட்டருளிய வ்யாக்யானத்தை கருத்தில் கொள்வோம். புத்தூர் ஸ்ரீ.உ.வே. கிருஷ்ணசாமி ஐயங்கார் ஸ்வாமி 'ஸ்தோத்ரரத்னம்', 'சதுச்லோகீ', ஆகியவற்றிற்கான பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யான பதிப்புடன் பெரியவாச்சான்பிள்ளை ஜிதந்தே ஸ்தோத்ரத்திற்கு அருளிச்செய்த வ்யாக்யானத்தையும் ப்ரமாணத்திரட்டுடன் பதிப்பித்துள்ளார். அவையே கீழே தரப்பட்டுள்ளன.

## ஜிதந்தே ஸ்தோத்ர வ்யாக்யானம்

**ஸ்ரீமத்க்ருஷ்ணஸமாஹ்வாய நமோ யாமுநஸூநவே ।**
**யத்கடாக்ஷைகலக்ஷ்யாணாம் ஸுலப4: ஸ்ரீத4ரஸ் ஸதா3 ॥**

**அவதாரிகை:-** 'ஜிதந்தே' யாவது ருக்3வேத3கி2லம் (ருக் வேதப்பகுதியில் இருந்து சிதைந்து போனது); தத்வ ப்ரதிபாத3நபரமான (தத்வங்களை அறிவித்தலாகிய) ஸ்ரீ புருஷஸூக்தம் ஸர்வஶ்ருதிகளிலும் ஓதிப்போருமாபோலே, இதுவும் ஸ்ரீ பாஞ்சராத்ரத்திலும், இதிஹாஸ புராணங்களிலேயும் மஹாமந்த்ரமென்று திருமந்த்ரத்தோபாதி (திருமந்த்ரத்தோடு ஒக்க) பரமரஹஸ்யமாகச் சொல்லிப் போருமதொன்று. வேத3ாக்ஷரராஶியைப் பௌருஷேயமான (புருஷனால் செய்யப்பட்டதான) இதிஹாஸபுராணங்களிலே எழுதிப் படித்துப் போருவானென்னென்னில்: கி2லமாகிறது அப்ரஹதம் ஸ்த2ாநம் (உழாத தரிசுநிலம்போல. இந்த இடத்தில் ருக்வேதத்தின் ஒரு பகுதியாய் இருந்த ஜிதந்தே கிலமாயிற்று என்பது பொருள்); ஸூத்ரகாரர்கள் கி2லஸஹிதமாகத் (சிதைந்து போனவற்றையும்) தாங்கள் அத்4யயனம் பண்ணிப் போந்தவர்களாகையாலே ஸ்மார்த்த வித4ாநங்களிலே (ஸ்ம்ருதிகளிலே கூறப்பட்ட விதிமுறைகளை கைக்கொள்வாரின் செயல்பாடுகளிலே), மந்த்ரமாக விநியோகி3த்துப் போராநின்றார் களிறே. இப்படி இதிஹாஸபுராணங்களிலே, ஸ்ரீபாஞ்சராத்ரத்திலே 'ஜிதந்த இதி மந்த்ரேண' (ஜிதந்தே என்னும் மந்திரத்தினால்) என்று மந்த்ரமாக விநியோகி3த்துப் போருமதொன்று.

ஶ்வேதத்3வீபவாஸிகள் க்ஷீராப்3தி4நாத2னுடைய ஸௌந்த3ர்யாதி3களிலே தோற்று ஈடுபட்டுச் சொல்லும் ஸ்தோத்ரம்; இதுக்கு



ஸ்தோத்ரத்வமும் (துதிப்பதை விரும்புபவன்) ஸ்தவப்ரியனுக்கு (புகழ்மாலையை விரும்புபவன்) ப்ரியதமத்வமாகை (விரும்பப்படுவதாகை). ப்3ரஹ்மாதி3களுக்கு து3ஷ்ப்ராபமான (அடைய அரிதான) ஸ்த2லத்திலே தோன்றின இது இதிஹாஸ புராணங்களிலே எழுதிப்படிக்கும்படி ஸுலப4மானபடி என்னென்னில்: இம்மந்த்ரத்துக்கு ப்ரதிபாத்3யனான (அறிவிக்கப் படுபவனான) க்ஷீராப்3தி4நாத2னைத் (திருப்பாற்கடலில் பள்ளி கொண்டருளும் வ்யூகமூர்த்தியான ஸ்ரீமந்நாராயணனை) திருவடிதொழ ஆத3ரித்து ஸ்ரீநாரத3ப4க3வான் ஶ்வேதத்4வீபத்திலே சென்றவளவிலே, ஏகத த்3வித த்ரிதர்கள் தபஸ் பண்ணிக் கொண்டிருக்க, 'இவர்களுக்கும் கிட்டவொண்ணாத விஷயத்தை நம்மால் காண முடியாது' என்று மீண்டு, அவர்களைக் குறித்து "எனக்குச் செய்ய அடுப்பதென்?" என்று கேட்க, 'இத்திருமாளிகைக்குள்ளே ஶ்வேதத்3வீப வாஸிகள் க்ஷீராப்3தி நாத2னைக்கண்டு பண்ணும் ஸ்தோத்ரம், நெடுநாளே நாங்கள் தபஸ் பண்ணுகிறோமாகையால் ஜ்ஞாத(வ்ய)மாயிற்று (அறியத்தகுந்ததாயிற்று); எங்கள் பக்கல் இத்தை லபி4த்து (அடைந்து) அனுஸந்தி4(நினைப்பாயாக)' என்ன அவனும் அவர்கள் பக்கலிலே ஜிதந்தே ஸ்தோத்ரத்தை லபி4த்துப் போராநிற்க, ஜயந்தம் என்கிற பர்வதத்திலே ப4க2வது3பாஸனம் பண்ணுகிற ப்3ரஹ்மாவை வந்து அனுவர்த்தித்து (அனுசரித்து), பிறந்த வ்ருத்தாந்தத்தை அவனுக்கு விஜ்ஞாபிக்க (விண்ணப் பிக்க), "எனக்கு அந்த ஸ்தோத்ரத்தைச் சொல்" என்று ஸ்ரீநாரத3 ப4க3வான் பக்கலிலே க்3ரஹித்தான் குடும்பி3 (பெரிய குடும்பத்தை உடையவன். இங்கு ப்ரஹ்மாவைக் குறிக்கும். ஜீவராசிகளைப் படைத்து, அதனால் பெரிய குடும்பஸ்தன னானவன்).

அவன் பக்கலிலே புக்கதாகையாலே இதிஹாஸ புராணங்களிலே எழுதப்பட்டு ப4க3வத்பரராயிருப்பார் எல்லார்க்கும் லபி4க்கும்படி (கிடைக்கும்படி) ஸுலப4மாயிற்று. இது ஜிதந்தேயினுடைய அவதாரம் (தோற்றம்). இது தன்னுடைய உள்வாயை (ஜிதந்தே ஸ்தோத்ரத்தின் உட்கருத்தை) அனுஸந்தி4த்தால் ப்ரபத்திக்கு (சரணாகதிக்கு) வ்யாக்2யான மாயிருக்கிறது; ப்ராப்யப்ராபகங்கள் (உபாய உபேயங்கள்)

இரண்டையும் சொல்லுகிறது. "ப்ரபத்திக்கு அதி$_4$காரிகள் அஜ்ஞரும், ஸர்வஜ்ஞரும் ப$_4$க்தி பரவஶரும் என்று த்ரிவித$_4$ர்" என்று ப$_4$ட்டர் அருளிச்செய்தாரிறே. "அவித்$_3$யாதோ தே$_3$வே பரிப்$_3$ருட$_4$தயா வா விதி$_3$தயா, ஸ்வப$_4$க்தேர் பூ$_4$ம்நா வா ஜக$_3$தி க$_3$திமந்யா - மவிது$_3$ஷாம் । க$_3$திர் க$_3$ம்யஶ்ஶாஸௌ ஹரிரிதி ஜிதந்தாஹ்வயமநோ:, ரஹஸ்யம் வ்யாஜஹ்ரே ஸ க$_2$லு ப$_4$க$_3$வாந் ஶௌநகமுநி: ||" - (பட்டர் முக்தகம்), (பகவத் விஷயத்தில் அறியாமையினாலாவது, நன்றாக அறிந்திருப்பதினாலேயாவது, தன் பக்தியின் ஆதிக்யத்தினாலேயாவது, இவ்வுலகில் வேறு உபாயத்தை அறியாதவர்களுக்கு, 'உபாயமும் உபேயமும் இந்த ஹரியே' என்று 'ஜிதந்தே' என்று பெயரையுடைய மந்த்ரத்தின் ரஹஸ்யத்தை பகவான் ஶௌநகமுனி வெளிப்படுத்தினாரன்றோ.) அஜ்ஞனாகிறான், - ப$_4$க$_3$வல்லாப$_4$த்துக்குத் தன் பக்கலிலே ஜ்ஞானஶக்த்யாதி$_3$கள் இல்லாதவன். ஸர்வஜ்ஞனாகிறான்,- "தே$_3$ஶகாலவஸ்துக்களாலே பரிச்சே$_2$தி$_3$க்கவொண்ணாத (அளவிட முடியாத) வைப$_4$வத்தையுடையவன் ஈஶ்வரன்" என்றிருக்கையாலே, அநந்யஸாத்$_4$யனென்று (மற்றொன்றினால் அடையமுடியாதவன்) இருக்குமவன்.

ப$_4$க்தி பரவஶனாகிறான், - ஜ்ஞாநஶக்த்யாதி$_3$கள் உண்டாயிருக்கச் செய்தேயும் அடைவுபட அனுஷ்டி$_2$க்க மாட்டாதவன். இவர்கள் மூவரும் ப$_4$க$_3$வத்$_3$ விஷயமொழிய வேறு உபாயம் உண்டென்று அறியாதவர்கள். "இவர்களுக்கு ப்ராபகனுமாய், ப்ராப்யனுமாய் (உபாயமும் உபேயமுமாய்) இருக்கும் ஸர்வேஶ்வரன்" என்று, 'ஜிதந்தே' என்று பேரை உடைய மந்த்ரரஹஸ்யத்தை ஸர்வஜ்ஞனான ஶௌநகப$_4$க$_3$வான் வ்யாக்$_2$யானம் பண்ணப் பெறுவதே ।" என்கிறார்.

**"ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்$_3$ரஹ்மணி ஸ்தி$_2$தம், உப$_4$யோரேஷ ஸம்ப$_3$ந்தே$_4$ா ந பரோ(அ)பி$_4$மதோ மம"** - விஷ்ணுதத்வம். (உடைமையா யிருக்கும் தன்மை ஆத்மாவினிடத்தில் உள்ளது; உடையவனா யிருக்கும் தன்மை ப்ரஹ்மத்தினிடமுள்ளது; இருவருக்கும் இதுவே ஸம்பந்தம்-(தொடர்பு); வேறு ஸம்பந்தம்-(தொடர்பு) எனக்கு இஷ்டமன்று.) என்றும், **"ஆத்மத$_3$ாஸ்யம் ஹரே: ஸ்வாம்யம் ஸ்வப$_4$ாவஞ்ச"** - **"ஸ்வோஜ்ஜீவநேச்ச$_2$ா யதி$_3$ தே ஸ்வஸத்தாயாம் ஸ்ப்ருஹா யதி$_3$, ஆத்மத$_3$ாஸ்யம் ஹரே: ஸ்வாம்யம் ஸ்வப$_4$ாவஞ்ச ஸத$_3$ா ஸ்மர"** - (விஷ்ணு தத்வம். (உன்னுடைய உஜ்ஜீவனத்தில் உனக்கு விருப்பமிருக்குமாகில், உன் இருப்பில் ஆசையிருக்குமாகில், ஆத்மாவினுடைய தாஸனாயிருக்கும் தன்மையையும், ஹரியின் ஸ்வாமியாயிருக்கும் தன்மையையும், (இவைகள்) இயல்வானவையென்பதையும் எப்போதும் நினைப்பாயாக.) என்றும் சொல்லுகிறபடியே, த்$_3$வயத்துக்கு அதி$_4$காரியாவான், ஈஶ்வரனுக்கே அநந்யார்ஹ ஶேஷபூ$_4$தனாவானிறே (வேறொருவனுக்கு உரித்தானவன் அல்லாதவன் அடிமை). இப்படிப்பட்ட ஶேஷத்வத்தை உடைய இவ்வாத்மாக்கள், அநாதி$_3$யான ப்ரக்ருதி ஸம்ப$_3$ந்த$_4$த்தாலே அறியாதே, ஈஶ்வரனுடைய ஸ்வாமித்வ ஸ்வாதந்த்ர்யங்களைத் தங்கள் தலையிலே ஏறிட்டுக்கொண்டு ஆத்மாபஹாரிகளாய் வர்த்திப்பார்கள். ஆத்மாபஹாரமாவது, - அஹங்கார மமகாரங்கள்;

**"(த்$_3$வ்யக்ஷரஸ்து ப$_4$வேந்ம்ருத்யு:)"** என்றும், **"(மமேதி த்$_3$வ்யக்ஷரோ ம்ருத்யு:)"** - **"த்$_3$வ்யக்ஷரஸ்து ப$_4$வேந்ம்ருத் யுஸ் த்ர்யக்ஷரம் ப்$_3$ரஹ்மண: பத$_3$ம், மமேதி த்$_3$வ்யக்ஷரோ ம்ருத்யுர் ந மமேதி ச ஶாஶ்வதம்" - பாரதம், ஶாந்திபர்வம் 13-4,** (இரண்டு அக்ஷரத்தையுடையது ஸம்ஸாரமடையக் காரணமாகிறது. மூன்று அக்ஷரங்களை யுடையது ப்ரஹ்மத்தையடையக் காரணமாகிறது. இரண்டெழுத்துச் சொல்லான 'மம' என்பது ஸம்ஸாரத்திற்குக் காரணம். மூன்றெழுத்துச் சொல்லான 'ந மம' என்பது நிலையான மோக்ஷத்திற்குக் காரணம்) என்றும் சொல்லுகிறபடியே. "யானே என்னை அறியகிலாதேயானே என்றனதே என்றிருந்தேன்" (திருவாய்மொழி 2.9.9) என்றிறே அபி$_4$யுக்தர் (நம்மாழ்வார்) வார்த்தையும். பாபங்களிலே தலையான பாபமும் இவ்வாத்மாபஹாரமே;

**(யோ(அ)ந்யத$_2$ா ஸந்தமாத்மாநம்)** - **"யோ(அ)ந் யத$_2$ா ஸந்தமாத்மாந மந்யத$_2$ா ப்ரதிபத்$_3$யதே, கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா"** - பாரதம்

உத்யோகபர்வம் 42.35, (பகவானுடைய உடைமையாயிருக்கும் ஆத்மாவை, எவனொருவன் தனக்குச் சொந்தமாக நினைக்கிறானோ, ஆத்மாவை அபஹரிப்பவனான அந்தத் திருடனால் செய்யப்படாத பாபம் எது?) இத்யாதி$_3$களிலே ஸ்பு$_2$டம் (தெளிவு). பாபத்துக்கு ப்ராயஶ்சித்தம் - இவ்வாத்மா ப$_4$க$_3$வச்சே$_2$ஷமென்றால் விவாத$_3$ம் பண்ணாதிருக்கை.

**“(தேந சேத$_3$விவாத$_3$ஸ்தே)” - “யமோ வைவஸ்வதோ ராஜா யஸ் தவைஷ ஹ்ருதி$_3$ ஸ்தி$_2$த:, தேந சேத$_3$விவாத$_3$ஸ்தே மா க$_3$ங்கா$_3$ம் மா குரூந் க$_3$ம:”- மநுஸ்ம்ருதி 8-92,** (எல்லாரையும் நியமிப்பவனும், ஸூர்யமண்டலத்தின் நடுவிலிருப்பவனும், எல்லாருக்கும் இனிய வனாயிருப்பவனும் எவனோ, அவன் உன்னுடைய ஹ்ருதயத்திலிருக்கிறான். அவனுடன் உனக்கு விவாதமின்றியிலே இருந்ததாகில், கங்கைக்கும், குருக்ஷேத்ரத்திற்கும் நீ போக வேண்டியதில்லை.) என்றும்,

**“உம்முயிர் வீடுடை யானிடை வீடுசெய்ம்மினே”,** (திருவாய்மொழி 1.2.1) என்றும் **“க்ஷேத்ரஜ்ஞஸ் யேஶ்வரஜ்ஞாநாத் விஶுத்$_3$தி$_4$: பரமா மதா”** - யாஜ்ஞ வல்க்யஸ்ம்ருதி 3-1, (ஜீவனுக்கு ஈச்வரனை அறிவதாலேயே மேலான ஶுத்தி உண்டாவதாக எண்ணப்படுகிறது.) என்றும் சொல்லக்கடவதிறே. ஈஶ்வரன், இப்படி அஹங்காரமம காரக்$_3$ரஸ்தராய் (பீடிக்கப்பட்டவர்களாய்), ஶப்$_3$தா$_3$தி$_3$விஷய ப்ரவணராய் (ஈடுபட்டவர்களாய்), அதிலே,

**“(பரமேஶ்வரஸம்ஜ்ஞோ(அ)ஜ்ஞ! கிமந்யோ மய்யவஸ்தி$_2$தே”) - “பரமேஶ்வரஸம்ஜ்ஞோ(அ)ஜ்ஞ! கிமந்யோ மய்யவஸ்தி$_2$தே, ததா$_2$(அ)பி மர்த்துகாமஸ்த்வம் ப்ரப்$_3$ரவீஷி புந: புந:” - ஸ்ரீவிஷ்ணுபுராணம் ஹ்ரண்ய வாக்யம் 1-17-23,** (மூடா! பரமேச்வரன் என்கிற பெயரையுடையவன், நான் இருக்கும்போது வேறு எவன் உளன்? அப்படியிருந்தபோதிலும், சாவதற்கு விருப்பமுள்ளவனான நீ மறுபடியும் மறுபடியும் (அப்படியே) சொல்லுகிறாய்.) என்றும்,



**“(த்$_3$விதா$_4$ ப$_4$ஜ்யேயமப்யேவம் ந நமேயம் து கஸ்யசித்)” - “த்$_3$விதா$_4$ ப$_4$ஜ்யேயமப்யேவம் ந நமேயம் து கஸ்யசித், ஏஷ மே ஸஹஜோ தோ$_3$ஷ: ஸ்வபா$_4$வோ து$_3$ரதிக்ரம:”** - ஸ்ரீராமாயணம் யுக்தகாண்டம், (இரண்டாகப் பிளக்கப்பட்டாலும், இம்மாதிரி ஒருவனுக்கும் வணங்க மாட்டேன். இது என்னுடன் பிறந்த தோஷம். (அவரவர்களுடைய) ஸ்வபாவம் மீறமுடியாத தன்றோ.) என்றுமிருக்கும் ஹிரண்ய ராவணாதி$_3$களைப்போலே தன்னோடே எதிரம்பு கோத்து நிற்கிற ஆத்மாக்களைப் பார்த்தருளி, “இவை ஶாஸ்த்ரமார்க்க$_3$த்தாலே திருத்த ஒருப்பட்டதல்ல; இவர்களுடைய விஷயப்ராவண்யமே பற்றாசாக நம்முடைய அழகுகளையும், ஶீலாதி$_3$ கு$_3$ணங்களையும் காட்டித்திருத்துவோம்” என்று வழியிட்டு, ப்ரத$_2$மத்திலே (முதற்படியயிலே) ருசிஜனகனாய், ருசிபிறந்தார்க்கு உபாயமுமாய், அதிலே நிஷ்டா$_2$ரானார்க்கு ப்ராப்யனுமாய் (உபேயமுமாய்) இருக்கும் படியைச் சொல்லுகிறது இப்ரப$_3$ந்த$_4$ம்.

“பராப்யப்ராபகங்களை முதல் ஶ்லோகத்தாலே ஸங்க்$_3$ரஹமாகச் (சுருக்கமாகச்) சொல்லி, மேலில் ஶ்லோகங்களாலே விஸ்தரிக்கிறது” என்று ப$_4$ட்டர் நிர்வாஹம். முதல் இரண்டு ஶ்லோகத்தாலே ப்ராப்யப்ராபகங்களைச் சொல்லி, மேலில் ஶ்லோகங்களாலே அதுக்கு அடியான ஶரண்யதையைச் (ஶரணமடைய தகுந்தவனாய் இருக்கும் தன்மை) சொல்லுகிறதாகவுமாம். ஶரண்யதையை முதலில் சொல்லி, உபாயோபேயங்களைச் சொல்ல ப்ராப்தமாயிருக்க, பின்னே ஶரண்யதையைச் சொல்லுவானென்? என்னில்: ‘முனியே நான்முக’னிலே (திருவாய்மொழி 10-10) திருவாணையிட்டுப் பின்பு அது பெறாவாணையல்லாமை ஸாதி$_4$த்தாப்போலே இது” என்று திருநறையூர் அரையர் நிர்வாஹம்.

**அவதாரிகை ஸம்பூர்ணம்.**

***

# ஜிதந்தே ஸ்தோத்ரம்

**1. ஜிதந்தே புண்ட$_3$ரீகாக்ஷ! நமஸ்தே விஶ்வப$_4$ாவந! |**
**நமஸ்தே(அ)ஸ்து ஹ்ருஷீகேஶ! மஹாபுருஷ! பூர்வஜ! ||**

**1. பதவுரை:-** புண்ட$_3$ரீகாக்ஷ - செந்தாமரைக்கண்ணா! **ஜிதம் தே** - உன்னால் (இவ்வாத்மவஸ்து) ஜயிக்கப்பட்டது (வெற்றி கொள்ளப்பட்டது); **நம:-** (இது) என்னுடையதல்லவே; **தே-** உன்னுடையதாயிற்றே; விஶ்வப$_4$ாவந - உலகையெல்லாம் உண்டாக்கினவனே! **ஹ்ருஷீகேஶ** - இந்திரியங்களை நியமிப்பவனே! **மஹாபுருஷ** - கொடுப்பதில் சிறந்தவனே! **பூர்வஜ** - முற்பாடனாகப் பிறப்பவனே! **நம: தே அஸ்து** - (இவ்வாத்ம வஸ்து) எனக்காகை தவிர்ந்து உனக்கே ஆகவேணும்.

**அவ:-** முதல் ஶ்லோகத்தாலே, ப்ராப்யநிஷ்கர்ஷ பர்யந்தமாக (அடையத்தகுந்த பொருளை நிலைநாட்டுவது வரை) இவன் ப்ரார்த்தி$_2$க்கும்படியாக ஈஶ்வரன் தன் அழகாலே தோற்பித்துக் கொண்டபடியைச் சொல்லுகிறது.

**வ்யா:-** (ஜிதந்தே) **"யாதானும் பற்றி நீங்கும் விரதம்"** திருவிருத்தம் - 95. என்கிறபடியே, விஷயாந்தரங்களைப் பற்றி (வேறு உலகியல் விஷயங்களைப்பற்றி), 'எம்பெருமான் முகத்தில் விழியேன்' என்று இவன் வ்ரதம் கொண்டிருக்க, ஈஶ்வரன் **"தானொட்டி வந்து"** (திருவாய்மொழி 1.7.7) என்கிறபடியே விஷயாந்தரங்களில் துவக்கை அறுத்து, ஸ்வரூபஜ்ஞானத்தை உண்டாக்கி, 'அவஶ்யம் உம்மைக் கொண்டல்லது விடேன்' என்று வ்ரதம் கொண்டு, யாத்$_3$ருச்சி$_2$கமாக (எதிர்பாராது) இவன் விஷயாந்தரங்களிலே நெகிழ நின்றவளவிலே, **"இருந்தான் கண்டுகொண்டு"** (திருவாய்மொழி 8.7.2) என்கிறபடியே தன் அழகைக் காட்டி ஜயித்து, இவன் தோற்றமை கண்டு ப்ரீதனாய், **"தோற்றார் ஆர்?"** என்று கேட்டருள, **"தோற்றோம் மடநெஞ்சம் எம்பெருமான் நாரணற்கு"** (திருவாய்மொழி



2.1.7) என்கிறபடியே "ஜயஸ்தவ" என்கிறான். த்ருதீயார்த்தே$_2$ ஷஷ்டி$_2$யாய் உன்னாலே ஜயம் என்னுதல்; ப$_4$ாவே நிஷ்டை$_2$யாய் உன்னுடைய ஜயம் என்னுதல். ப$_3$ந்த$_4$மடியான ஸங்கல்பம் அவனது; அதின் ஸந்நிதி$_4$யிலே கர்மமடியாக (கர்மம் காரணமாக) வந்த இவன் ஸங்கல்பம் ஜீவிக்கவோ? ஸர்வஶக்தி ஸங்கல்பத்தை விஷயசபலனுடைய ஸங்கல்பம் அழிக்கவோ?

'நாம் என்கொண்டு உம்மை வெல்ல?' என்ன: (புண்ட$_3$ரீகாக்ஷ) அழகிய கண்களாகிற ப்$_3$ரஹ்மாஸ்த்ரத்தை உடைய உனக்கு வெல்ல வொண்ணாதது உண்டோ? சேதனர் சேதனங்களை அகப்படுத்துவது கண்வழியாலேயாகையாலே, திருக்கண்களாலே ஜயித்தாய் என்கை. ஸ்வதந்த்ரனை முறையைக் காட்டி மீட்கலாம்; விஷயப்ரவணனை மீட்க அழகல்லது பரிகரமுண்டோ? (நமஸ்தே) 'ஆரதை ஆர் வென்றார்?' என்னில்: ஆராய்தவாறே உன்னை நான் அபஹரிக்க, என்னை ஜயித்து, நீயே உன்னதைக் கைக்கொண்டாயாயிருந்தது.

**"அஹமபி ந மம ப$_4$க$_3$வத ஏவாஹமஸ் மீத்யேவம் அமமதாம் யோஜயத்யதோ நம இதி"** -('நான் எனக்கும் உரியேனல்லேன்; பகவானுக்கு அடியேனாகிறேன்' என்று இம்மாதிரியாக மமகாரமில்லாமையைத் தருவதால் 'நம:' எனப்படுகிறது.) என்னக்கடவதிறே. நமஶ்ஶப்$_3$த$_3$ம் (நம என்னும் சொல்) ஶரணபர்யாயமாகையால் ப்ரபத$_3$னமென்னவுமாம் (அடைக்கலம் என்னவுமாம்). எங்ஙனேயென்னில்: கண்ணழகிலே ஈடுபட்டு மிடுக்கறுகையாலே அஶக்தாதி$_4$காரமான உபாயத்தைப் பற்றுகிறான். ப்ராப்யத்தில் ருசி பிறந்தால், அத்தை லபி$_4$க்கும் ஸாத$_4$னமிறே அனந்தரம் தேட்டம் (விருப்பம்).

அத்தைச் சொல்லுகிறது. 'விஷயாந்தரங்களில் துவக்கை அறுத்த உபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமாக என் ஆத்மாவைத் தந்தேன்' என்று ஆத்மஸமர்ப்பணத்தைச் சொல்லுகிறது என்றுமாம். **"எனதாவி தந்தொழிந்தேன்"** (திருவாய்மொழி 2.3.4) என்னுமாபோலே. இது வகைப்பொருள். (நமஸ்தே (அ)ஸ்து) அப்படி எனக்காகை தவிர்ந்து உனக்கேயாம்படி பண்ணியருள வேணும். **"மனக்காராமை மன்னி உண்டிட்டாய்**

**இனி உண்டொழியாய்”** (திருவாய்மொழி 10.10.6) என்னுமாபோலே. ‘ருசியைப் பிறப்பித்துத் தன் பேறாக உபகரியாநிற்க, மேல் விழுந்து அர்த்தி$_2$ப்பானென்? (வேண்டுவானேன்)’ என்னில்: ருசியை விளைப்பித்து ஸ்வரூபஜ்ஞானத்தை உண்டாக்கினவாறே ஸ்வரூபானு கு$_3$ணமான அடிமையை ப்ரார்த்தி$_2$க்கிறான். கூனி கூன் நிமிர்ந்து யோக்$_3$யதை பெற்றவாறே;

**“வஸ்த்ரே ப்ரக்$_3$ருஹ்ய கோ$_3$விந்த$_3$! மமகே$_3$ஹம் வ்ரஜேதி வை” - “விலாஸலலிதம் ப்ராஹ ப்ரேம க$_3$ர்ப்ப$_4$ப$_4$ராலஸம், வஸ்த்ரே ப்ரக்$_3$ருஹ்ய கோ$_3$விந்த$_3$! மமகே$_3$ஹம் வ்ரஜேதி வை”** - ஸ்ரீவிஷ்ணுபுராணம் 5-20-11, (அந்தக் கூனியானவள், கண்ணனுடைய வஸ்த்ரங்களைப் பிடித்துக்கொண்டு, “கோவிந்தா! என்னுடைய வீட்டிற்குப் போகவேணும்” என்று விளையாட்டாயிருப்பதும், அழகானதும், நிறைந்த அன்பை அடக்கிக் கொண்டிருப்பதால் மெதுவாயிருப் பதுமான வார்த்தையைச் சொன்னாள்.) என்று மடிபித்தாப்போலே இங்கும்.

ஆத்மாவினுடைய கோணாகையாலே (கூன்; வளைவு.) கண்ணழகாலே நிமிர்த்துக் கொண்டான் என்கை. அஹங்காரமமகாரமாகிற கோண் (கோண் - கூன்; வளைவு.) போய், பாரதந்த்ர்யம் ப்ரகாஶித்தாலிறே கைங்கர்ய ரஸத்துக்கு யோக்$_3$யமாவது. ஸ்ரீமாலாகாரரை அழகாலே ருசியைப் பிறப்பித்து,

**“புந: புந: ப்ரணம்யாஹ மாலாகாரோ(அ)தி விஸ்மித:”** - ஸ்ரீவிஷ்ணுபுராணம் 5-19-23, (மிகவும் ஆச்சரியத்தை அடைந்தவரான மாலாகாரர் மறுபடியும், மறுபடியும் வணங்கிச் சென்னார்.) என்று திருவடிகளிலே விழும்படி பண்ணி அடிமை கொண்டானிறே. (விஶ்வபாவந) மேல் அபேக்ஷிதம் செய்கைக்கு ப்ராப்தி (அடைதலை) சொல்லுகிறது. **விஶ்வம் ப$_4$ாவயதீதி விஶ்வப$_4$ாவந:**; உரு மாய்ந்து கிடந்த இந்த ஜக$_3$த்தை உண்டாக்கினவனவல்லையோ? இல்லாததை உண்டாக்கின வனுக்கு உள்ளதுக்கு ஒரு கு$_3$ணம் விளைப்பிக்கைக்குப் பணியுண்டோ?



முமுக்ஷுஸிஸ்ருக்ஷயா (மோக்ஷத்தில் இச்சை உடைய வனே சிருஷ்டிப்பதில் விருப்பத்தால்) அன்றோ ப$_4$க$_3$வத்ஸ்ருஷ்டி. **(ஹ்ருஷீகேஶ)** ‘ஸ்ருஷ்டிகாலத்தில் விலக்கும் பரிகரமில்லை; இப்போது உன் இந்த்$_3$ரியங்களைத் திருத்த வொண்ணா மையாலே விலக்கும் பரிகரம் உண்டே’ என்னில்: அவையும் நீ இட்டவழக்கன்றோ?

**“ஹ்ருஷீ காணீந்த்$_3$ரியாண்யாஹுஸ் தேஷாமீஶோ யதோ ப$_4$வாந்| ஹ்ருஷீகேஶ இதி க்$_2$யாத: .......”** (இந்திரியங்களை ‘ஹ்ருஷீகங்கள்’ என்று சொல்லுகிறார்கள். நீர் அவைகளுக்கு ஈசனாயிருப்பதால் ஹ்ருஷீகேசன் என்று பிரஸித்தி பெற்றிருக்கிறீர்.) என்றும், “இருடீகேசன் எம்பிரான் இலங்கை அரக்கர் குலம் முருடு தீர்த்த பிரான்” (திருவாய்மொழி 2.7.10) என்றும் சொல்லக்கடவதிறே. இந்த்$_3$ரியங்களுக்கு என்னோடு உண்டான ஸம்ப$_3$ந்த$_4$ம் கர்மோபாதி$_4$கம்;

**“யஶ் சக்ஷுஷி திஷ்ட$_2$ந் - வாசி திஷ்ட$_2$ந்”** - ப்ருஹ. 5.7.22, (எவனொருவன் கண்ணிலிருக்கிறானோ, எவன் வாக்கிலிருக்கிறானோ .....) என்கிறபடியே நிருபாதி$_4$க ஸம்ப$_3$ந்த$_4$ம் உன்பாடேயன்றோ? (மஹாபுருஷ) ‘ஶக்தி உண்டானாலும் வல்லதெல்லாம் செய்வாருண்டோ?” என்னில்: (புருஷ) **“புரு - ப$_3$ஹு, ஸநோதீதி புருஷ:”** என்னும்படியே மறித்து உன்பாடு வரவேண்டாதபடி அபேக்ஷிதங்களை மிகவும் கொடுக்கவல்ல பரமோத$_3$ாரனல்லையோ? அன்றிக்கே, உன்னையும், உன் உடைமையையும் **“ப$_4$க்தாநாம்”** (ஶ்லோ-5) என்கிறபடியே அர்த்தி$_2$ யாய்க்கொடுக்கை.

**“(ஸ ஸர்வாநர்த்தி$_2$நோ த்$_3$ருஷ்ட்வா ஸமேத்ய ப்ரதிநந்த்$_3$ய ச)” - “அத$_2$ மத்$_4$யமகக்ஷ்யாயாம் ஸமாக$_3$ச் ச$_2$த் ஸுஹ்ருஜ்ஜநை:, ஸ ஸர்வாநர்த்தி$_2$நோ த்$_3$ருஷ்ட்வா ஸமேத்ய ப்ரதிநந்த்$_3$ய ச”** - ஸ்ரீராமாயணம் அயோத்திய காண்டம் 16-27, (அந்த ஸ்ரீராமன் யாசிப்பவர்களைக் கண்டு, (அவர்களை) எதிர்கொண்டு ஆநந்தப்படுத்திப் பிறகு நடுக்கட்டில் நண்பர்களுடன் சேர்ந்தார்.) என்னக்கடவதிறே. (பூர்வஜ) கீழ்ச்சொன்ன ஔதா$_3$ர்யந் தன்னை அனுஷ்ட$_2$ானத்தாலே விவரிக்கிறது. ஸ்ருஷ்டியோடு அவதாரத்தோடு உபாயத்தோடு

வாசியற இழவு பேறு தொடக்கமான எல்லாத்துக்கும் முற்பாடனல்லையோ?

**“(ப$_3$ஹுஸ்யாம்)”** - **“ததை$_3$க்ஷத ப$_3$ஹுஸ்யாம் ப்ரஜா யேயேதி தத்தேஜோ(அ)ஸ்ருஜத”** - சாந்தோக்ய உபநிஷத் 6.2.3, (அந்தப் பரப்ரஹ்மம் ‘(நானே) பலவாக ஆகக் கடவேன்’ என்று ஸங்கல்பித்தது; அது தேஜஸ்ஸை ஸ்ருஷ்டி செய்தது.) என்று ப்ரயோஜனமும் அபி$_4$மானமும் தன்னதானவோபாதி.

**“ஸ ஏகாகீ ந ரமேத”** - மஹோபநிஷத் [(ப்ரளய காலத்தில்) ஒருவராயிருந்த அந்த நாராயணன் ஆனந்தத்தை அடையவில்லை.] என்னும் இழவும் தன்னதாகச் சொல்லிற்றிறே. அவதாரத்திலும், ‘ஸ்ருஷ்டமான ஜக$_3$த்திலே நம்மை அபி$_4$முகி$_2$களாகக்கடவார், என்னும் நோயாசையாலே (துன்பத்தால் பீடிக்கப்பட்டு),

**“ஸம்ப$_4$வாம் யாத்மமாயயா”** - **“அஜோ(அ)பி ஸந்நவ்யயாத்மா பூ$_4$தாநாமீ*ஶ்*வரோ(அ)பி ஸந், ப்ரக்ருதிம் ஸ்வாமதி$_4$ஷ்ட$_2$ாய ஸம்ப$_4$வாம் யாத்மமாயயா”** - ஸ்ரீபகவத்கீதை 4-6, (பிறப்பற்றவனாகவும், அழிவற்றவனாகவும், பூதங்களுக்கு ஈச்வரனாகவுமிருந்த போதிலும், என்னுடைய ஸ்வபாவத்தைக் கொண்டு, என் ஸங்கல்பத்தாலே நான் பிறக்கிறேன்.) என்று ஸ்வேச்சை$_2$யாலேயாயிருப்பது.

**“ஸ ஹி தே$_3$ ........ வைரர்த்தி$_2$தோ .......... ஜஜ்ஞே”** - **“....... ப$_3$பூ$_4$வ கு$_3$ணவத்தர:, ஸ ஹி தே$_3$வைருதீ$_3$ர்ணஸ்ய ராவணஸ்ய வத$_4$ார்த்தி$_2$பி$_4$:, அர்த்தி$_2$தோ மாநுஷே லோகே ஜஜ்ஞே விஷ்ணுஸ் ஸநாதந:”** - ஸ்ரீராமாயணம் அயோத்யா காண்டம், 1-7, (கொழுத்தவனான ராவணனுடைய வதத்தை விரும்பும் தேவர்களால் பிரார்த்திக்கப்பட்டவனும், பழமையான வனுமான விஷ்ணு மனுஷ்ய லோகத்தில் பிறந்தான்; (அப்படி அவதாரம் செய்த) அந்த ராமபிரானே (தன் பராவஸ்தையைக் காட்டிலும்) குணத்தில் சிறந்தவனானான்) என்று தே$_3$வர் களுடைய அர்த்தி$_2$த்வம் இல்லையோ? என்னில்: அது வ்யாஜம்; ஸாது$_4$பரித்ராணமே ப்ரயோஜனம்.

(தொடரும்)

# எறும்பியப்பாவின்
# விலக்ஷண மோக்ஷாதிகாரி நிர்ணயம்

இதழ் 170இன் தொடர்ச்சி. விளக்கவுரை:புதுச்சேரி-பெருமாள் ராமாநுஜதாஸர்.

**இதழ் 170இல் மூலத்தின் தொடர்ச்சி.**

**மூலம்:**

**''பொய்கலவாது என்மெய் கலந்தான்'' (திருவாய் மொழி 1-8-5) என்று, தாமஸ ஜனமோஹநார்த்தமாகப் பொய்ந்நூல் சொல்லுகிற அவதாரங்கள் போலன்றிக்கே, பொய்கலவாதபடி அவரோடே கலந்து, ''மக்நா நுத்தரதே'' என்று, ஸம்ஸாரஸாகர மக்ந ஜந ஸமுத்தரணமே ப்ரயோஜந மாக சேதநருக்கு ஹிதாம்ஶத்தில் வேண்டும் அர்த்தங்க ளெல்லாம், ''இன்கவி பாடும் பரமகவிகளால் தன்கவிதான் தன்னைப் பாடுவியாது - இன்று நன்குவந்து என்னுடனாக்கி என்னால் தன்னை, வன் கவிபாடும்'' (திருவாய்மொழி 7-9-6) என்கிறபடியே,**

**விளக்கம்**

இது என்? ஐயா, மற்றொன்றைச் சொல்லாதே ஆழ்வாரையே நம்பத் தகுந்தவரில் மேலானவராயும், அவரருளிச் செய்த திருவாய்மொழியையே சான்றாகவும் கூறுகின்றீர், இதுக்குக் கருத்தென்? எனின், (299) ''இரும்புத் துண்டத்தில் நெருப்பானது எவ்வாறு நிறைந்துள்ளதோ? அவ்வாறே விஷ்ணுவானவர் ஆசாரியனது சரீரத்தில் நிறைந்து நிற்கிறார்'' என்று, தன்னுடைய திவ்யமங்களமான திருமேனியைக் காட்டிலும் இந் நம்மாழ்வாரது திருமேனியில் விசேடமாக உட்புகுந்து நெருப்பில் காய்ச்சப்பட்ட இரும்புத் துண்டத்தில் நெருப்பே முழுவதும் நிறைந்திருத்தல் போலே ஆழ்வார் திருமேனியில் மிகவும் நிறம் பெற்றிருப்பதுபோல், தன்னுடைய திவ்ய மங்களமான திருமேனியில் லீலையும்

கருணையின் வசப்படுதல் ஆகிய இரண்டும் சேர்ந்திருத்தலின் றிக்கே, ''இறைவன் ஆசாரியனாய் அவதரித்து கருணையாலே சாத்திரங்கள் ஆகிய கைகளைக் கொண்டு மக்களைப் பிறவிக் கடலிலிருந்து எடுக்கிறான்'' என்கிறபடி, கேவல சாத்திரமாகிய கையைக் கொண்டு;

**''பொய்கலவாதுஎன்மெய் கலந்தான்''** என்று, தாமச குணமுள்ள மக்களை மயக்கி விபரீத பொருள் சொல்லும் ஜைந புத்த அவதாரங்கள் போலன்றிக்கே, பொய்கலவாதபடி நம்மாழ்வா ராகிய அவரோடே கலந்து, ''பிறவிக்கடலில் அழுந்திக் கிடப்பவர்களைத் தூக்குவதற்காக'' என்று, ஸம்ஸாரக் கடலில் அழுந்தியுள்ளவர்களைக் கடத்தச் செய்வதே பயனாக மனிதருக்கு நன்மை புரிதற்காகத் தேவையான (அர்த்தங்களை) மெய்ப் பொருளை, ''இன்கவி பாடும் பரம கவிகளால்தன் கவிதான் தன்னைப் பாடுவியாது - நன்கு வந்தென் உடனாக்கி என்னால் தன்னை வன்கவி பாடும்'' என்கிறபடி,

**மூலம்**

**வ்யாஸ பராசராதிகள் முதலாழ்வார் முதலானாரிருக்க, அவர்களாலே பாடுவியாதே ஸகலஉபநிஷத்ஸாரமான சாந் தோக்கிய ஸாமத்தோடொத்த திருவாய்மொழியாகிற ப்ரபந்த ராஜத்தாலே வெளியிடுகையாலும், இவ்வாழ்வாரும் மற்றுள் ளாரைப்போலே ப்ராக்ருத த்ரவ்ய தாரகபோஷக போக்யரா யிருக்கையன்றிக்கே, ''உண்ணுஞ் சோறு பருகுநீர்'' முதலான வையெல்லாம் அவனேயாக பால்யாத்ப்ரப்ருதி ஸ்தந்யாத் யநபேக்ஷிதராய் ததேகாநுபவபரராயிருக்கையாலே, ப்ரக்ருதி ஸம்பந்த நிபந்தநமாக வருகிற ப்ரம விப்ரலம்ப ப்ரமாதா ஶக்தி தோஷங்களில்லாதவராகையாலும்;**

**மயர்வற மதிநலமருளப் பெற்ற ஆழ்வார்களெல்லாம் இவர்க்கு அவயவங்களாயிருக்கையாலும் இவருடைய உக்திய நுஷ்டாநங்களே ப்ரமாணமாக அங்கீகரிக்கையாலும் சொல்லி னேன் என்ன, இதுக்கு தாத்பர்யமாயிற்று. இனி, ஆசார்ய ஸ்வரூபம், (300) ''ஆசார்யதே$_3$வோப$_4$வ'' (தைத்.சீக்ஷா.11) என்றும், (301) ''ஸாக்ஷாந் நாராயணோ தேவ:'' (நாரதீயம்.)**



**என்றும், (302) ''ஆசார்யஸ்ஸஹரிஸ்ஸாக்ஷாத்'' (ப்ரபஞ்ச ஸாரம்) என்றும், (303) ''குருரேவ பரம் ப்ரஹ்ம'' (ப்ரபஞ்ச ஸாரம்) என்று ஸாக்ஷாந் நாராயணனாகவும் சொல்லா நின்றது.**

**விளக்கம்**

வியாசர் பராசரர் முதலாழ்வார்கள் ஆகியோரிருக்க அவர்களால் கவிபாடுவித்துக் கொள்ளாமல் எல்லா உபநிடதங் களின் ஸாரமான சாந்தோக்கிய ஸாமவேதத்தோடு ஒத்ததான பிரபந் தங்களில் அரசனாக விளங்கும் திருவாய்மொழியை வெளியிடுகை யாலும், இவ்வாழ்வாரும் மற்றுள்ள ஏனைய ஆழ்வார்களைப் போலே பிரகிருதியின் பரிணாமமான சோறு நீர் வெற்றிலை போன்ற உணவுப் பொருள்களை உண்ணாமலிருப்பதோடன்றி அவை யெல்லாம் ''உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலை யெல்லாம் எம்பெருமான்'' என்று அவனேயாகக் குழவிப் பருவத்திலிருந்து முலைப்பாலை விரும்பாதவராய் ஐம்பூத சேர்க்கையால் வந்த உடல் தொடர்பால் வருகிற பொய்யறிவு வஞ்சனை மயக்கவுணர்வு சக்தியில்லாமை முதலான குற்றங்களில் லாதவராகையாலும்;

மயர்வற மதிநலம் அருளப்பெற்ற மற்றைய ஆழ்வார்க ளெல்லாம் இவர்க்கு தலை, கண், முகம், மார்பு போன்ற உறுப்புகளா யிருப்பதாலும் இவரது சொல்லையும் அநுட்டாநங்களையுமே அவ் ஆழ்வார்கள் அங்கீகரிக்கையாலும் இந்த நம்மாழ்வாரையே இத்தரிசநத்திற்கு முதன்மைபெற்ற ஆசாரியராகச் சொல்லினேன் என்று எறும்பியப்பா அவர்கள் கூறவும், இவையே இதற்குப் பொருளாயிற்று. இனி, ஆசாரிய ஸ்வரூபம் என்பது, (300) ஆசாரியனே தெய்வமாகக் கொள்க'' என்றும், (301) ''நாராயண னாகிய தேவனே நேரே ஆசாரியனாகிறான்'' என்றும், (302) ''ஹரியே ஆசாரியனாக நேரே தோன்றுகிறான்'' என்றும், (303) ''குருவே பரம்பொருளாவன்'' என்று, ஆசாரியனை நேரே நாராயணனாகவும் சாத்திரம் சொல்லா நின்றது.

**மூலம்:**

**நம் முதலிகள் எல்லாரும், ''ஈச்வரனைப் பற்றுகைக்**

**கையைப் பிடித்துக் கார்யங்கொள்ளுமோபாதி; ஆசார்யனைப் பற்றுகை காலைப்பிடித்துக் கார்யங்கொள்ளுமோபாதி'' (ஸ்ரீவசநபூஷணம். 430) என்று, ஏக வ்யக்தியாகவும், ஆசார்யன் இருவர்க்குமுபகாரகன் என்று, பிந்நவ்யக்தியாகவும் சொல்லா நின்றார்கள்; இதிலிருக்கும்படியை அருளிச்செய்ய வேணுமென்ன, கேவல பகவத்ஸ்வரூபம் என்னவுங்கூடாது, கேவல பரிசுத்த ஆத்ம ஸ்வரூபம் என்னவுங் கூடாது, நரங்கலந்த சிங்கமென்று நரத்வ ஸிம்ஹத்வங்கள் இரண்டுங் கூடின நரஸிம்ஹாவதாரம் போலே அத்யத்புதமாயிருப்ப தொன்று எங்ஙனே? என்னில், கேவல பகவத்ஸ்வரூப மென்றால்? குருபரம்பரையெல்லாம் ஒன்றேயாய், ஸ்வரூப ஐக்யதோஷம் வரும்;**

**ஆத்ம ஸ்வரூபமென்றால், அநேக ப்ரமாண விரோதம் வரும் ஆகையாலே, (304) ''பலபத்ரஸ் த்ருதீயஸ்து'' (நாரதீ. யாதவாத்ரி.மாஹாத்ம்யம்.1.32) என்று, பலபத்ரராமன் சேஷாவதாரமாயிருக்கச் செய்தேயும்,**

**விளக்கம்**

நம்பூருவாசாரியர்கள் எல்லோரும், ''எம்பெருமானைப் பற்றுதல், கையைப் பிடித்துக் காரியங்கொள்வதுபோல, ஆசாரியனைப் பற்றுதல், காலைப்பிடித்துக் காரியம் கொள்வது போல'' என்று, ஆசாரியனையும் இறைவனையும் சேர்த்து ஒருவராகவும், ஆசாரியன் சீடனுக்கும் இறைவனுக்கும் மிகவும் உதவி புரிபவன் என்று வேறாகவும் சொல்லியிருக்கிறார்கள்; இவற்றை விளக்கியருள வேண்டும் என்று சேநாபதியாழ்வான் வினவ அதற்குப் பதிலளிக்கிறார் எறும்பியப்பா. ஆசாரியனை வெறும் பகவான் என்று சொல்லவுங் கூடாது, வெறும் பரிசுத்த ஆத்மா என்றும் சொல்லக் கூடாது; நரங்கலந்த சிங்கம் என்று மனித உருவும் சிங்கவுருவுங்கூடிய நரசிங்க அவதாரம் போலே மிகவும் ஆச்சரியப்படத்தக்கதாயிருக்கும். ஆசாரியன் ஸ்வரூபம் (ஸ்வரூபம் - தன்மை) எவ்வாறு எனின், பகவானே ஆசாரியன் என்றால், குருபரம்பரையில் வரும் ஆசாரியர்களை எல்லோரும் ஒருவரே என்று சொன்னால், எல்லோரும் ஒருவரே என்னும் குற்றம் வரும்;

(தொடரும்)



# திருவேங்கடவன் உலா

**ஆசிரியர்: தி.பொ. பழனியப்ப பிள்ளை.(பதிப்பாசிரியர்-1950ஆம் ஆண்டு திருவேங்கடவன் கீழ்க்கலை ஆராய்ச்சிக்கழகம் பதிப்பித்த நூலில் அமைந்துள்ள குறிப்புகள்.) இதழ் 170இன் தொடர்ச்சி.**

**136. பொற்பூண னூலும் புரிநூலு மேகத்துள்**
**விற்போல் விழிக்கு விருந்தோம்ப - நற்பணிலப்**

துளவு, பொன்னூல், புரிநூல் ஆகிய இம்மூன்றும் மேகத்துள் தோன்றும் பன்னிற (பலநிறங்களைக் கொண்ட) வானவில் போலக் கண்ணுக்குப் புதுக்காட்சி அளிக்க.

**137. பாலடையின் பாலுதரப் பல்லுயிர்க்கும் பாய்வதுபோன்**
**மேலிடையே காச மிளிர்ந்தசைய - நூலின்**

பணிலம் - சங்கு. சங்கம் ஆகிய பாலடையில் உள்ள பால் தன் திருவயிற்றுள்ளிருக்கும் பல வுயிர்களுக்கும் பாய்வது போல மேலாடை யாகிய உத்தரியம் விளங்க என்றார். ஏகாசம் - மேலாடை.

**138. புடைத்தெழுந்த வுந்திமடுப் பொற்றா மரையிற்**
**சுடர்க்கொடிபோற் பொன்னரைஞாண் சுற்றி - யடுக்குலகை**

பொன்னரைஞாண் - இடுப்பிற் கட்டும் பொற் கயிறு. இது திருவுந்தியாகிய மடுவில் பூத்த தாமரையின் ஒளிக்கொடிபோற் தோற்றம் செய்யும் வண்ணம் கூறினர்.

**139. யொட்டியொட் டானிடையி லொட்டியா ணத்தரைநூல்**
**பட்டிகையாற் கட்டிப் பரிசித்துக் - கிட்டவே.**

நாராயணன் விசுவ சரீரியாயினும் ஒட்டி யொட்டாதுள்ள நிலைமையைக் கூறி அன்னான் இடுப்பில் ஒட்டியாணம், அரைப்பட்டிகை ஆகிய அணிகலன்கள் அணிவித்தமை காட்டினர்.

**140. கச்சிறுக்கிச் சீராவுங் கட்டிக் கருதார்தங்**
**கைச்சிறுக்கி மார்நாசி கம்பிக்கத் - தைச்சவிழிப்**

கச்சு - அரையிற் கட்டும் கச்சை. சீரா - கவசம். கருதார் - பகைவர். தங்கை - தங்கையர். சிறுக்கிமார் - இளம் பெண்டீர்.

**141. போதாள் சருவுமெனப் பூவிருந்த பொற்றுடையைப்**
**பீதாம் பாத்தாற் புறம்பேணிப் - பூதலத்தி**

போதாள் - பூவிருந்தவள். சருவும் - கொஞ்சிக் குலாவும். பூமி தேவி அமர்ந்த அழகிய தொடைகளை. பீதாம்பரம் - பொன்னாடை. புறம் பேணி - வெளி மறையப் போர்த்து.

**142. லெங்களுக்கு மெம்மை யெழுதினா ரைப்படைத்தார்**
**தங்களுக்கு மூதாதை தாளிலே - மங்கலப்பொற்**

எம்மை எழுதினார் - பிறப்புக் கணக்கில் இட்டவர். மூதாதை - முன்னோன்.

**143. செஞ்சதங்கை பூட்டியிளஞ் சேயாக்கித் தேவரெல்லாந்**
**தஞ்சதங்கை கூப்பிச் சரணென்ன - மஞ்சரிக**

சதங்கை பூட்டுதலால் சிறு குழவியாகக் கருதி. தஞ்சம் - எளிமை. சரண் - புகழ். மஞ்சரிகம் - பூ வேலைப்பாடு; முத்தும் ஆம்.

**144. வெண்டையமுந் தண்டைகளு மின்னோட முன்னோடிச்**
**சண்டையிடு மாபோற் சலசலெனப் - பண்டித்**

வெண்டையம் - வீரர் காலணி. ஒளி ஓடுமாறு முன்னாக ஓடி - பிராசம் காண்க (Rhyme and alliteration; அடுத்தடுத்து வரும் எழுத்தோசை ஒற்றுமை).

**145. தரையளந்த சேவடியைத் தானளந்தோ மென்று**
**திருவடியி ணங்கித் திகழத் - துருவியொளி**

பண்டு உலகை அளந்த சேவடியைத் தண்டை, வெண்டையம் தாம் சுற்றுதல் உற்று அளந்தன என்று தற்குறிப்புச் செய்தார்.



**146. சன்னபின்ன லாகத் தழைந்தபரஞ் சோதியுரு**
**வின்னதென வைய மிசைவிக்கக் - கன்னிமலர்**

சன்ன பின்னல் - சிக்கல். தழைந்த - நெருங்கிய.

**147. சந்திரநீ லோற்பலங்கள் சாத்துகைக்கு ளோர்பலத்தை**
**யிந்திரன்கா ணிக்கை யெனவீய்ந்து - வந்தவுணர்**

சந்திரன் மலர்த்தும் நீல மலர்கள். பலம் - பழம். இந்திரன் பெய்யும் காணிக்கைப் பொருள் எனக் கொடுத்து. அவுணர் - இராக்கதர்.

**148. சாராம லோதித் தரைகிள்ளிப் பூவைமார்**
**நீராஞ் சனமெடுத்து நின்றேத்தி - யாரேனு**

தரையை நகத்தாற் கிள்ளிக் காப்பிடுதல் மகளிர் வழக்கு. பூவைமார் - இள மகளிர். நீராஞ்சனம் - நீராரத்தி.

**149. மெண்ணாது தன்னுள்ளே யெப்பொருளுங் காட்டிறைக்குக்**
**கண்ணாடி காட்டியினை காட்டியே - யண்ணல்வழி**

இறைக்கு - இறைவனான நாராயணனுக்கு. தன்னுள்ளே யெல்லாப் பொருள்களையும் காட்டும் இறைவனுக்கு அவன் திருவுருவைக் கண்ணாடிக்குள் காட்டி வடிவொப்பினைத் தோற்றுவித் தென்று சிறப்பித்தார்.

**150. வாராம லின்றைமட்டு மன்னியெனத் தென்மங்கை**
**யூரானை முன்னே யுடன்படுத்தி - யாரணத்தான்**

மன்னி - நின்றோன். தென் மங்கையூரான் - திருமங்கையாழ்வார். இவ்வாழ்வார் முன்பு திருமால் நெறி தழுவாது நின்று பின்னர் அப்பெருமான் திருமந்திரம் பெற்று அடிமை பூண்ட வரலாறு தேர்க.

**151. மங்கலகீ தத்துதியால் வைகா னசவிதியா**
**லங்கரங்க வைபோகத் தர்ச்சித்துப் - பைங்கறியோ**

ஆரணம் - வேதம். மங்கல கீதத்துதி - சுப சங்கீத தோத்திரம். வைகானசம் - ஸ்ரீமந் நாராயணன் விகனஸ

மகரிஷிக்கு அருளிச் செய்துணர்த்திய ஸ்ரீ வைஷ்ணவ ஆகமமாம். அங்கரங்க வைபோகம் - எல்லாச் சிறப்பும் குறைவின்றி யுடைய. பைங்கறி - பசிய மிளகு.

**152. டாறு சுவையுணவீ ராயிரகோ டித்தளிகை**
**நூறு முகமாய் நுகர்ந்தருளி - வீறெல்லா**

ஆறுசுவை - கார்ப்பு, கைப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, இனிப்பு, புளிப்பு. தளிகை - சமைத்த சோறு.

**153. மேவியடைக் காயமுதும் வெள்வெற் றிலையமுதுந்**
**தேவியரோ டேயயின்று சீராடிப் - பூவைமீ**

அடைக்காய் - பாக்கு. பாக்கு வெற்றிலை யிரண்டும் அமுதெனப் படுதல் வழக்கு. அயின்று - தின்று.

**154. ரண்ட ருடன்கோயி லாலயங்கள் பொன்வெள்ளி**
**மண்டபங்க ளாயிரக்கான் மண்டபங்கள் - தொண்டர்செயும்**

அண்டர் - தேவர்.

**155. பல்சிறப்பு மண்டபங்கள் பார்ப்போம் பவனிக்கு**
**வல்விரைந்து பல்லக்கில் வாருமெனக் - செல்வரிசை**

பவனி - உலா. வல்விரைந்து - மிக விரைவாக.

156. **பூரி சொரிந்து புராணமறை யோர்வாழ்த்த**
**வீரமணிக் கேடகத்தின் மீதேறி - வாரியென.**

பூரி - பரிசுப் பொருள். புராண மறையோர் - புராண வேதம் அறிந்த பிராம்மணர். மணிக்கேடகம் - வயிரப் பலகை. வாரி - கடல்.

**157. வொற்றை முழங்க வுபநிடங்க ளார்ப்பெடுப்பச்**
**சுற்று மலர்சொரியத் தோன்றியே - வெற்றிநிறை**

ஒற்றை - ஊதுகருவி. உபநிடங்கள் - வேதாந்தங்கள். ஆர்ப்பு - பேரொலி.

(தொடரும்)



# தமிழ் இசை இலக்கிய வரலாற்றில் - வைணவ பாசுர காலம்

ஆசிரியர்: மு. அருணாசலம். (தமிழ் இசை இலக்கிய வரலாறு என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது).

ஆழ்வார்கள் தம் பாடல்களைத் தலங்கள்தோறும் சென்று இசையோடு பாடினர் என்பதில் ஐயமில்லை. அனால் ஏட்டுப்பிரதிகளில் தேவாரத்துள் காணப்படுவதுபோலப் பண் குறிப்புக்கள் ஆழ்வார் பாடல்களுக்குக் காணப்படவில்லை. நைவளம்போன்ற சில பண்களின் பெயர் நாலாயிரப் பாசுரங்களின் உள்ளேயும் காணப்படுவதுண்டு. நாலாயிரமும் மறைந்து போனதுபோல அவற்றின் இசையும் மறைந்து போயிற்று என்பது தெளிவு. நாதமுனிகள் நாலாயிரம் முழுமையும் நம்மாழ்வார் அருளால் வெளிப்படுத்தியபின் தம் சகோதரி மகன்களும், மாணவர்களுமான மேலையகத்தாழ்வான், கீழையகத்தாழ்வான் என்ற இருவரையும் இசை கற்கச் செய்து, அவர்கள் மூலம் திவ்யப்பிரபந்தங்களை இசையோடு பாடுவித்துப் பிரசாரம் செய்தார் என்று குருபரம்பரை கூறும். பின்னர் நாலாயிரம் இசையோடு பாடும் மரபு ஏற்பட்டது.

நாலாயிரத்தை, திராவிடவேதம் என்று கொண்டாடிய ராமானுஜர் வடமொழி வேதம் போலவே தமிழையும் பாடவேண்டும் என்று திட்டம் செய்து நாதமுனிகளுடைய மருமகன்களால் அவற்றுக்குச் செய்யப்பட்டிருந்த பண்ணைக் கைவிட்டு, வேத உச்சரிப்புப் போலவே இதற்கும் சுரங்கள் ஏற்படுத்தி, சுரங்கள் வழியாக நாலாயிரத்தையும் பாடச் செய்தார் என்பர். இதன் பயனாக, நாதமுனிகள் ஆசைகொண்ட பண்கள் வழக்கற்றுப்போயின தமிழுக்கே சம்பந்தமில்லாத வடமொழி வேத உச்சாடனமாகிய உதாத்தம், அநுதாத்தம், ஸ்வரிதம் என்று ஸ்ரீவைஷ்ணவர்கள் நாலாயிரத்தைப் பாடி வருகிறார்கள். அவ்வாறு

அவர்கள் நாலாயிர திவ்யப்பிரபந்தத்தைப் பாடும்போது எந்த இசை நயமும் வெளிப்படுவதில்லை. சொற்களும், சொற்றொடர்களும் ஒரு குறிப்பிட்ட முறையில் பிரித்து ஸேவிக்கப்படுவதில்லை. ஸ்ரீவைஷ்ணவர்கள் தாங்கள் கற்றுக்கொண்ட முறையில் ஸேவித்து வருகிறார்.

நாதமுனிகள் நாலாயிர திவ்யப் பிரபந்தங்களைத் திருவரங்கநாதன் ஸந்நிதியில் எப்படி இசையோடு ஸேவிக்க வேண்டும் என்ற ஒழுங்கை ஏற்படுத்தினார். 'அரையர்ஸேவை' என்று இது பிரசித்தமாயிற்று. அரையர் கையில் தாளம் ஏந்தி அபிநயத்தோடு பாடி ஆடும் மரபு, திருவரங்கத்தில் இன்றும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இம்மாறுதல் அமைத்த பாடல்நெறியைக் குறிப்பிட்டு வேதாந்ததேசிகர்,

**காளம் வலம்புரி யன்னநற் காதல் அடியவர்க்குத்**
**தாளம் வழங்கித் தமிழ்மறை இன்னிசை தந்தவள்ளல்**

என்று போற்றுவது காணத்தக்கது.

நாதமுனிகள் திவ்யப்பிரபந்தங்களைத் தொகுத்தபோது இசையையொட்டியே பாகுபாடு செய்தார். எல்லா ஆழ்வாருடைய இசைப்பாடல்களையும் முதல் பகுதியாக முதலாயிரம் என்ற பெயரில் தொகுத்தார். இசை அமையாத எல்லாப் பாடல்களையும் ஒருங்கு தொகுத்து அத்தொகுப்பிற்கு வேறுபெயரின்றி இயற்பா என்றே பெயரிட்டுத் தனியே வைத்தார். இது பேரெண்ணாகிய ஆயிரத்தைப் பெயராகக் கொண்டதேயன்றி, இதனுள் அமைந்த பாடல்கள் 947 மட்டுமே திருமங்கையாழ்வார் பாடல்கள். நம்மாழ்வார் திருவாய்மொழி இவை தனித்தனி ஆயிரத்துக்கு மேற்பட்ட பாடல்களைக் கொண்டிருந்தமையால், இவற்றை இரண்டாவது ஆயிரம், நாலாவது ஆயிரம் என அமைத்து, இவற்றின் பெயராலேயே பெரியதிருமொழி என்றும் திருவாய்மொழி என்றும் வழங்கச் செய்தார். இவ்விரு தொகுதிகளில் ஒவ்வொன்றிலும் ஆயிரத்துக்கு மேற்பட்ட பாடல்கள் உள்ளன. இவ்விருவருடைய பாசுரங்களில் இசைக்குரியன அல்லாத பாசுரங்கள் வேறுபிரித்து இயற்பாவில் அடக்கப்பெற்றன.



சென்ற நூற்றாண்டில் வெளியான நாலாயிர திவ்விய பிரபந்த அச்சுப் புத்தகங்களில் யாப்புக் குறிப்பு உள்ளதே அன்றி, இசைக்குறிப்புகள் இல்லை சே. கிருஷ்ணமாசார்யர் பதிப்புக்களில் (இரண்டாம் பதிப்பு, 1920) இராகமும் தாளவொத்தும், திருவாய்மொழிக்கு மட்டும் பண்ணும் தாளமும் அதிகப்படியாகவும் காணப்படுகின்றன. இவ்வாறு காணப்படும் இராகங்கள் 50.

அச்சில் இராகக் குறிப்புக்களைத் தரும்போது இயற்பாவுக்குங்கூட இராகங்கள் சொல்லப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இங்கு கட்டளைக் கலித்துறையிலான திருவிருத்தத்துக்கு மட்டும் இராகக்குறிப்பு இல்லை. மற்றெல்லாப் பகுதிகளுக்கும் இராகம் தலைப்பில் சொல்லப்பட்டுள்ளது.

திருவாய்மொழிக்குப் பண் சொல்லப்பட்டது என்று குறிப்பிட்டோம். அவ்வாறு சொல்லப்பட்ட பண்கள் 20. இவற்றுள் செருந்தி, நாட்டம், பாலையாழ், முதிர்ந்தகுறிஞ்சி, வியந்தம் என்ற ஐந்து பண்கள் தேவாரத்துள் வரவில்லை. (திவ்யப்பிரபந்தத்தில் பழஞ்சுரம் என்று ஒரு பண் குறிப்பிடப்பட்டிருப்பது பழம்பஞ்சுரமாகவே இருக்கும். மற்றும் இரு பண்களின் தலைப்பில் காந்தாரம் - குறிஞ்சி என்றும் இந்தளம் - பழந்தக்கராகம் என்றும் இரட்டையாகப் பெயரிடப்பட்டுள்ளன). நட்டபாடை, நட்டராகம், நாட்டராகம் என்ற பண்களுக்கும் அதிகமாக நாட்டம் என்ற பெயரில் மிகுதியாக பாசுரங்கள் அமைந்திருக்கக் காண்கிறோம்.

கைசிகம் என்ற பண் ஒன்று தனியே காணப்படுகிறது. திருக்குறுங்குடியில் நம்பாடுவான் என்ற பாணன் கைசிகப்பண் பாடிவந்த செய்தியும், அவன் ஒரு பிரம்மராக்ஷஸனால் பீடிக்கப் பட்டு, பின்சென்று பாடி, மீண்டு தன்பாடலால் விளைந்த புண்ணியவசத்தால் அப்பிரம்மராக்ஷஸ வடிவு நீங்கி, அவன் ஸோமசர்மா என்ற முந்தைய வடிவு பெற்றதும், கைசிகபுராணம் என்ற வடமொழி நூலில் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. இவ்வரலாற்றைச் சிறப்பிக்குமுகமாக, பாணன் கைசிகப்பண் பாடிய நாளாகிய கார்த்திகை மாத வளர்பிறை ஏகாதசி 'கைசிக ஏகாதசி' என்ற பெயரால் தமிழ்நாடெங்கும் விஷ்ணு

வாலயங்களிலும், வைஷ்ணவர் இல்லங்களிலும் விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இது மக்கட்சமூகம் ஒரு பண்ணுக்கு அளித்திருந்த ஏற்றத்தைக் காட்டும்.

பண்களில் அதிகமான பதிகங்கள் கொண்டவை: இந்தளம் 10: நாட்டம் 11: நட்டபாடை 9: சீகாமரம் 8. ஒரே பதிகம் உடைய பண்கள் கைசிகம், செருந்தி.

இனி ஆழ்வார் திவ்யப்பிரபந்தங்களில் காணும் இசைக் குறிப்புக்களை அவர்கள் காலமுறைப்படி. தொகுத்துக் கூறலாம்.

## முதலாழ்வார்கள்

பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்ற முதலாழ்வார் மூவர் பாடல்களிலும் இசைச் செய்திகள் எவையும் இல்லை. பொய்கையாழ்வாருடைய முதல் திருவந்தாதி 46 ஆம் பாடல் 'பண்புரிந்த நான்மறையோன்' என்று தொடங்குகிறது. 'பண்புரிந்த' என்ற தொடரை மறைக்கு அடையாகக் கொண்டு, இசையோடு பொருந்தியவேதம் என்று பொருள் செய்வார்கள் அவ்வளவே. இதற்கு ஆதாரமாக இதே அந்தாதியில், "நால்வேதப் பண்ணகத்தாய்" (68) என்றுள்ள குறிப்பைக் காட்டமுடியும் இம்மூவர் அந்தாதித் தனியன்களில்கூட யாரும் இசையைச் சொல்லவில்லை.

இதைவிளக்க இது இடமல்லவாயினும், ஒரு கருத்துச் சொல்லத் தோன்றுகிறது. இவர்கள் பெருமாளுடைய கல்யாண குணங்களிலே முழுமையும் ஈடுபட்டவர்கள் ஆதலால், வேறு எக்கருத்தும் இவர்களுக்கு எழவில்லை. அதுவன்றியும், இவர்கள் தொண்டை நாட்டில் தோன்றியிருந்துங்கூட, மதுரையில் வேற்றுக் கூட்டத்தாராகிய களப்பிரர், பாண்டியரைத் துரத்திவிட்டு நாட்டைக் கைப்பற்றியதன் விளைவு, நாடு எங்குமே இருந்தது; இவர்களையும் பாதித்தது. அக்களப்பிரர் இசையை ஒடுக்கி அழித்துவிட்டார்கள். காலம் சுமார் கி.பி. 250 முதல் 575 வரை. நீண்டகாலமானபடியால் மக்கள் வாழ்க்கையில் இசைக்கிருந்த சிறப்புக் குறைந்துவிட்டது. மதுரையில் மட்டுமில்லாமல் தமிழ்நாடு முழுமையிலும் இந்தநிலை. ஆகவே, ஆழ்வார் இசை உணர்ந்து



குறிப்பிடும் சூழ்நிலை இல்லை. (எனினும், குழந்தை மனமுடைய காரைக்கால் அம்மையார், ஐந்தாம் நூற்றாண்டில் தோன்றியிருந்தும்கூட, இரு இசைப்பதிகங்கள் பாடினார். இவர் களப்பிரரின் ஆட்சியில் மதுரைக்கே சென்றார் என்பது மறுக்க முடியாது.

## திருமழிசையாழ்வார்

தொண்டைமண்டலத்தில் திருமழிசையில் பிறந்த இவ்வாழ்வார் செய்த நூல்கள் இரண்டு. ஒன்று திருச்சந்த விருத்தம்; 120 பாடல் இசைப்பாவாகக் கொள்ளப்பெற்று முதலாயிரத்தில் உள்ளது. மற்றது, நான்முகன் திருவந்தாதி இயற்பாவாகக் கொள்ளப்பெற்று மூன்றாவதாயிரமாகிய இயற்பாத் தொகுப்பில் உள்ளது. இரண்டிலும் சிறப்பான இசைச்செய்திகள் எவையும் இல்லை. திருச்சந்த விருத்தத்தில், 'பண்ணை வென்ற இன்சொல் மங்கை' (105) என்கிறார். பின்னும் 'பண்ணுலாவு மென்மொழி' (91) என்பர், திருமாலைச் சொல்லும்போது, 'பண்கடந்த தேசமேவு பாவநாசநாதனே' (27) என்கிறார். இங்குப் பொருளாவது, பண்ணால் அமைந்த வேதத்தால் அறியமுடியாத பரமபதத்தில் உள்ளவனே என்பது. மற்றோரிடம் 'சாமவேத கீதனே' (14) என்பது. இரண்டும் தமிழைக் குறிப்பிடவில்லை. நான்முகன் திருவந்தாதியில் எந்த இசைக்குறிப்பும் இல்லை. இவ்வந்தாதியை இவர் முழுமையும் முதலாழ்வார் அந்தாதிகளைப் பின்பற்றிச் செய்துள்ளமையால், இதனுள் எந்த இசைக்குறிப்பும் அமையவில்லை. திருச்சந்த விருத்தத்தில் பத்துப் பாடல்களுக்கொருமுறை இராகமும் தாளமும் மாற்றிச் சொல்வது மரபு. இவ்வாறு சொல்லப்பட்டவை முறையே யமுனா கல்யாணி - ரூபகம்; ஆபூருவம் - ரூபகம்; அடாணா - ஆதி; பியாகடை - திரிபுடை; ஆஸி- ரூபகம்; தோடி - ஆதி; கல்யாணி - ரூபகம்; சாவேரி - திரிபுடை; சுருட்டி - திரிபுடை; சங்கராபரணம் - ரூபகம்; செஞ்சுருட்டி - ரூபகம்; மோஹனம் - ரூபகம்; ஆக 120 பாடல்களுக்கும் 12 இராகங்கள் பண் சொல்வதில்லை. ஆனால் இராகக்குறிப்பு மிகவும் பிற்காலம், சென்ற நூற்றாண்டு என்பது வெளிப்படை.

## திருப்பாணாழ்வார்

மேல் சாதியினருடைய சாதி இறுமாப்பை அடக்க, திருவரங்கத் தெம்பெருமான், லோகசாரங்க முனிவரை, இவரைத் தோளில் சுமந்து வரும்படிக் கட்டளையிட்டான். இவர் 'அரங்கனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்று பாடி, அரங்கன் சந்நிதியடைந்து அவனோடு கலந்துவிட்டார். முனிவாகனர் என்று இவர் சொல்லப்பெறுவார், முனிவாகனராய்த் திருமாலின் திருமேனியைப் "பாட்டினால் கண்டு வாழும் பாணர்" என்று இவரைத் திருமலை நம்பிகள் பாடுகிறார். பாணர் ஆடலுக்கும் பாடலுக்கும் என்றே தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் இவர்கள் கீழ்ச்சாதி என்பது மரபு. பாணர் புலையர் என்றே சங்கநூல்களில் சொல்லப் படுகின்றனர். இவ்வாழ்வார் அரங்கநாதன் திருக்கோயிலின் முன் காவிரியின் வடகரையில் நின்று யாழ்த்தொண்டு புரிந்த யாழ்ப்பாணர். இவருடைய யாழ்த்தொண்டை எம்பெருமான் அங்கீகரித்து, இவரைத் தோளில் சுமந்து வருமாறு லோகசாரங்க முனிவருக்குக் கட்டளையிட்டான். அவரும் அவ்வாறே சந்நிதிக்குள் செல்லும்போது 'அரங்கனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே' என்று அவன் திருமேனியில் பாதகமலம் சிவந்த ஆடை, உந்தி, உதரபந்தனம், மார்பு, கண்டம், செய்யவாய், பெரியவாய், கண்கள், நீலமேனி என்று ஒவ்வோரங் கமாய் அனுபவித்து அமலனாதிபிரான் என்ற பத்துப்பாசுரம் பாடி அவனோடு கலந்தார். இப்பாசுரங்கள் இன்று வைணவருடைய நித்தியானுஸந்தானத்துக்குரியதாக விளங்குகிறது.

இவர் யாழ்ப்பாணராயிருப்பினும் இவருடைய பாடல்களில் இசைச்செய்தி எதுவும் இல்லை. நாலாம் பாடலில் 'மதுரமா வண்டுபாட மாமயிலாடு அரங்கத்தம்மான்' என்று வண்டின் பாட்டைக் குறிப்பிட்ட இடத்தில்கூட அவருக்கு வேறு இசைச்செய்திகள் தோன்றவில்லை. இவர் பாடியது அமலனாதிபிரான் என்று தொடங்கும் முதல் பாடலைக் கொண்ட பத்தே பாடல்கள்.



**அமலனாதிபிரான் அடியார்க் கென்னை ஆட்படுத்த**
**விமலன் விண்ணவர்கோன் விரையார்பொழில் வேங்கடவன்**
**நிமலன் நின்மலன் நீதிவானவன் நீள்மதி ளரங்கத் தம்மான் திருக்**
**கமல பாதம் வந்தென் கண்ணினுள்ளன ஒக்கின்றதே (1)**

இதற்கு இராகம் யமுனா கல்யாணி, திரிபுடை தாளம் என்று சொல்லப்படும். வடகலை ஆசார்யரான வேதாந்ததேசிகர், இந்த ஒரு திவ்யிப்பிரபந்தத்திற்கு மட்டும் வியாக்கியானம் எழுதியிருக்கிறார். வேறு எதற்கும் எழுதவில்லை. அவ்வுரை முனிவாகனபோகம் என்றே பெயர்பெறும். அவருடைய திருவாராதன மூர்த்தியே திருப்பாணாழ்வார். ஆழ்வாருடைய திருமொழியானமையால் இது நாதமுனிகளால் முதலாயிரத்துள் தொகுக்கப்பெற்றுள்ளது.

## தொண்டரடிப் பொடியாழ்வார்

விப்ரநாராயணன் என்ற பெயருடைய இவர், திருமாலுக்கு திருமாலை கட்டித் தரும் தொண்டில் இருந்தபோது, தேவதேவி என்ற தாசியின் மாயவலையிற் சிக்கி உழன்றகாலை, திருவரங்கப் பெருமானால் தடுத்தாட் கொள்ளப்பெற்று, மீண்டும் அரங்கனுக்கே பணிசெய்து, பெயரைத் தொண்டரடிப் பொடி என்று மாற்றிக்கொண்டு, அரங்கனையன்றி வேறுயாரையும் ஸேவிக்காதவராய் இரு திவ்யப்பிரபந்தங்கள் பாடி, அவன் திருவடிப் பேறுபெற்றார். பாடிய இருநூல்களும் இசைநூல்கள், முதலாயிரத்துள் சேர்க்கப்பெற்றுள்ளன.

இரண்டினுள் முதற்பிரபந்தம் திருமாலை என்ற பெயருடையது: மலர்மாலை தொடுத்த இவர் இந்தச் சொல்மாலை செய்து அரங்கனுக்குச் சாத்தினார். மற்றப் பாடல்கள் போலவே இவர் பாடல்களுக்கும் பண் ஆதியில் சொல்லப்படவில்லை. ஆனால் சே. கிருஷ்ணமாசார்யர் பதிப்பு முதலிய சில பதிப்புகளில் இந்த திவ்யப்பிரபந்தம் முழுமைக்கும் சகானா இராகம் ரூபகதாளம் என்ற குறிப்பு உள்ளது. இதன் பாடல்கள் 45. இதன் பாடல்களிற் பல பிரசித்தமாய்த் தெரிந்தவை, இவை அறுசீர்விருத்தம். சொல்நயமும் பொருட்பொலிவும் கொண்ட பாடல்கள் பல. 'கங்கையைவிடக் காவிரி புனிதமானது' (23) என்று இவர் சொல்வது கொண்டு இவரது திருவரங்கப் பக்தியின்

ஆழத்தை நன்குணரலாம். 'பச்சைமா மலைபோல் மேனி' (2) என்ற பாடல் தெரியாத தமிழர் இருக்கமாட்டார்கள். 'வண்டின முரலும் சோலை' (14), 'குடதிசை முடியை வைத்து' (19), 'ஊரிலேன் காணியில்லை' (29) முதலான பாடல்கள் மிக்க சிறப்புடையன. எனினும் இவ்வளவு நீண்ட இந்நூலில் இசைச்செய்திகள் எவையும் இல்லை.

இவர் பாடிய மற்றொரு நூல் திருப்பள்ளியெழுச்சி என்பது பத்துப்பாடல் கொண்டது. பள்ளியெழுச்சியென்பது அதிகாலையில் இறைவனைத் துயிலுணர்த்தும் (துயிலிலிருந்து எழுப்பும்) பாசுரம், பத்துப்பாடல்கள் எண்சீர் விருத்தம். இது வைணவர்கள் தினமும் ஸேவிக்கவேண்டிய பாசுரங்களாகும் (நித்தியானுஸந்தானம்) இதற்கும் பண்ணில்லை. ஆனால் பள்ளியெழுச்சிக்கு உரிய பண் புறநீர்மை; இதற்கு நேரான ராகம் பூபாளம். பிற்காலப் பதிப்பில் இதற்கு ராகம் பூபாளம், அடதாளம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எல்லாப் பாடல்களிலும் காலைநேர வருணனை, திருமாலைத் தரிசிக்க எல்லோரும் வந்தீண்டியுள்ளனர். அவர்க்கு நாளோலக்கம் அருள; 'அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாயே' என்று மகுடமாகவுள்ளது. ஒன்பதாவது பாடலில் கின்னரர் முதலியோர் உனது நாளோலக்கம் காணவந்தனர் என்று கூறுமிடத்து, அவர்களுடைய இசைக்கருவிகளைக் கூறுகிறார்;

**ஏதமில் தண்ணுமை எக்கம்மத் தளியாழ்**
**குழல் முழவமோ டிசைதிசை கெழுமிக்**
**கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள்**
**கந்தருவரவர் கங்குலுள் எல்லாம்**
**மாதவர் வானவர் சாரணர் இயக்கர்**
**சித்தரும் மயங்கினர் திருவடி தொழுவான்**
**ஆதலின் அவர்க்கு நாளோலக்கம் அருள**
**அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாயே (9)**

இங்கு ஆறு கருவிகளைச் சொல்லுகிறார். இவற்றுள் குழல் துறைக்கருவி, யாழ் நரம்புக்கருவி, ஏனைய நான்கும் தோல்கருவிகள். வேறு இசைக்குறிப்புக்கள் இதிலும் இல்லை. இப்பாசுரமே இசைப்பாடல். (தொடரும்)

# எனது வாழ்க்கைப் பாதையின் கடந்த காலச் சுவடுகள்

*இதழ் 163இன் தொடர்ச்சி. கட்டுரையாசிரியர்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ. அ.கிருஷ்ணமாசார்யர்.*

**மாடர்ன் தியேட்டர்ஸ் - படத்தயாரிப்பு நிறுவனத்தில் பிழைப்பைத் தேடிச்சென்ற ராமானுஜம்.**

கல்லூரிக்குச் செல்லாததைப்பற்றி ராமானுஜத்திடம் கேட்டபோது, தனக்குப் படிப்பில் நாட்டமில்லையென்றும், சேலத்தில் அமைந்துள்ள திரைப்படத்தயாரிப்பு நிறுவனமான மாடர்ன் தியேட்டர்ஸில் கவிதை எழுதி முன்னுக்குவரப் போவதாகச் சொன்னான். கல்லூரிக்குப் போவதாகச் சொல்லிச் சென்ற அவன், ஒருநாள் வீட்டிற்குத் திரும்ப வில்லை. பீரோவில் வைத்திருந்த ரூ.1000த்தையும் காண வில்லை. அவன் எங்கே சென்றான் என்று அறிய இயல வில்லை. இரண்டுநாள் கழித்து ஒரு அஞ்சல் அட்டை வந்தது. அதில் தான் கவிதை எழுதிப் பிழைத்துக் கொள்ளப் போவதாகவும், வீட்டிற்குத் திரும்பி வரப்போவதில்லை என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. என் தாயார் அழுது புலம்பினாள். 'நீ நல்ல நிலைமையில் இருக்கிறாய். ஆனால் ராமானுஜத்தை கவனிப்பார் யாரும் இல்லை. அவன் கதி இப்படியா ஆக வேண்டும்' என்றெல்லாம் புலம்பிக் கொண்டே இருந்தாள். சேலத்தில் போய் எங்கே அவனைத் தேடுவது. கையிலுள்ள பணம் கரைந்தால் தன்னாலேயே வீடு திரும்பிடுவான் என்று ஆறுதல் வார்த்தை கூறினேன். அவ்வாறே அவனும் சில நாட்கள் கழித்து ஈரோட்டிற்குத் திரும்பி வந்தான்.

**என்னுடைய இரண்டு வயதே நிரம்பிய பெண்ணின் கைவிரல்கள் துண்டிக்கப்பட்டன.**

நான் குடியிருந்த பகுதி ஈரோடு டீசல் லோகோ

ஷெட்டிற்கு எதிர் புறத்தில் அமைந்திருந்தது. சென்னிமலைப் பகுதிக்குச் செல்லும் அனைத்து வாகனங்களும் அந்த வழியாகத்தான் செல்ல வேண்டும். நான் அலுவலகம் போனபிறகு வீட்டில் என் மனைவியைத்தவிர யாரும் இருக்க மாட்டார்கள். வாசுதேவனை கலைமகள் கல்விநிலையம் என்னும் ஈரோட்டில் புகழ்பெற்ற பள்ளியில் U.K.G. வகுப்பில் சேர்த்திருந்தேன். அப்போது எனது பெண்ணான கோமள வல்லிக்கு வயது இரண்டு. ஒரு நீண்ட கயிற்றைக் கட்டி வாசற்படியில் உள்ள இரும்புக் கிராதியில் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கட்டும் என்று உள்ளே வீட்டு வேலை களில் ஈடுபட்டிருப்பாள் என் மனைவி ருக்மிணி. இவ்வாறு கட்டப்பட்டிருக்கும் கயிற்றின் நீளத்திற்கு குழந்தை சுற்றிவர முடியும். ஆதலால் தெருவில் சென்று கொண்டிருக்கும் மனிதர்களையும் வாகனங்களையும் பார்த்து ஏதேதோ சொல்லிக் கொண்டிருக்கும் அந்தக்குழந்தை. தெருவில் நடந்து செல்வோரில் யாரோ ஒருவர் இடுப்பில் கட்டப் பட்டிருக்கும் கயிறு இருக்கும்போது குழந்தை அழுவதைக் கண்டு, அந்தக் கயிற்றை அவிழ்த்து விட்டு சென்று விடுவார். இதன் விளைவாக சாலையை தாறுமாறாகக் கடந்து, ஓடிக் கொண்டிருக்கும் ஆட்டையோ அல்லது நாயையோ விரட்ட முற்படும். ஒருநாள் வேகமாக வந்த சைக்கிள் மோதி குழந்தையின் அலறல் சப்தம் கேட்டது. அலுவலகத்தி லிருந்து (வீட்டிலிருந்து அலுவலகம் அரை கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்திருந்தது.) வந்து உடனடியாக மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றேன். நல்ல வேளையாக பெரிய ஆபத்து ஏதும் நேரவில்லை.

கட்டப்பட்டிருக்கும் கயிற்றை அவிழ்த்துவிடுகிறார் களே என்பதற்காக குழந்தையை முன்வாயிற் பகுதியில் உள்ள Collopsable Gateஇன் உட்புறம் வேடிக்கை பார்ப்பதற்காக நிற்க வைத்திருப்பாள் ருக்மிணி. வீட்டிற்குள் வரமுயற்சித்த ஒருவர் குழந்தை Collopsable Gateஇல் கைகளை வைத்துக் கொண்டிருப்பதைக் கவனியாமல் Gateஐ திறக்க முற்பட்டார். இதன் விளைவாக குழந்தையின் இடது கையில் அமைந்திருந்த இரண்டு விரல்கள் துண்டிக்கப்



பட்டன. மயிர் இழையில் துண்டிக்கப்பட்ட பகுதி விரலோடு ஒட்டிக் கொண்டிருந்தது. பக்கத்து வீட்டு குடித்தனக்காரர் தொலைபேசி மூலம் என்னுடன் தொடர்பு கொண்டார். உடனடியாக வீட்டிற்குச் சென்று மருத்துவமனைக்கு குழந்தையை எடுத்துச் சென்றால், மருத்துவர் துண்டித்த விரலை எடுத்துவிட வேண்டியதுதான் என்று கூறினார். அதே சமயம் அவர், அடிபட்டதோ ஒரு பெண் குழந்தை. கைவிரல் கள் பின்னப்பட்டிருந்தால் எதிர்காலத்தில் அது திருமணம் செய்வதற்கு ஓர் தடையாய் அமைந்துவிடும். கடவுள்தான் உங்கள் குழந்தையைக் காப்பாற்ற வேண்டும். என்னால் ஆன முயற்சிகளைச் செய்கிறேன் என்று கூறி, விரல்களைச் சேர்த்து தையலிட்டார். அந்த விரல்கள் சரியாவதற்கு இரண்டுமாத காலம் ஆயிற்று. அன்றாடம் மருத்துவமனைக்குச் சென்று மருத்துவப் பரிசோதனை செய்து கொண்டு வந்தேன்.

## கச்சத்தீவும் செல்லாத ஒப்பந்தமும்

1974ஆம் ஆண்டு ஜூன் மாதம் தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் மத்திய அரசால் பறிக்கப்பட்டது. தற்போது நாளிதழ்களிலும், ஊடகங்களிலும் தமிழக மீனவர்கள் சிங்கள அரசால் கைது செய்யப்படுவதும், சிறையில் அடைக்கப்படுவதும், அவர்களிடம் உள்ள விலை உயர்ந்த நைலான் வலைகள் அறுக்கப்படுவதும், அவர்களுடைய படகுகள் நாசப்படுத்தப் படுவதும் பற்றி கொட்டை எழுத்துக்களில் செய்திகள் வெளிவருகின்றன. ஆனால் ஆளுங்கட்சியான அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், ஒரு காலத்தில் ஆளுங்கட்சியாய் இருந்து, இன்று எதிர்க்கட்சியாய் விளங்கும் திராவிட முன்னேற்றக் கழகமும் மற்றைய உதிரிக் கட்சிகளும், நாட்டையே அன்னிய சக்திகளுக்கு அடகு வைத்துவரும் காங்கிரஸ் கட்சியும் மீனவர்களைக் குறித்து முதலைக் கண்ணீரையே வடிக்கின்றன. மேலும் பலருக்கு கச்சத்தீவு என்ற சொல் மட்டுமே தெரியுமேயொழிய, அந்தத்தீவிற்கு ஏன் அத்துணை முக்கியத்துவம் அமைந்துள்ளது என்பதைப்பற்றிய பல உண்மைகள் தெரியாது. 1974ஆம் ஆண்டு கச்சத்தீவை தாரைவார்க்கும் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டார்

இந்திராகாந்தி. இவ்வாறு தாரை வார்த்தது செல்லாது என்று சென்றஆண்டுவரை உச்சநீதிமன்றத்தையோ அல்லது சர்வதேச நீதிமன்றத்தையோ அணுகி வழக்காட யாரும் முன்வரவில்லை. ஆயினும் அ.தி.மு.க. அரசு பொறுப்பேற்றப் பின்னர் முதலமைச்சர். ஜெயலலிதா அவர்கள் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

பிரதமர் இந்திராகாந்தியின் உத்தரவின் பேரில் கச்சத்தீவை இலங்கைக்குத் தாரை வார்க்கும் ஒப்பந்தங்கள் தயாராகின. 1974ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28ஆம் நாளன்று இந்தியா - இலங்கை இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது. அதில் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியும் இலங்கை பிரதமர் சிரிமாவோ பண்டாரநாயகாவும் கையெழுத்திட்டனர். தமிழக மீனவர்களின் வாழ்வாதாரமாக விளங்குகின்ற கச்சத்தீவை இலங்கைக்குத் தாரை வார்த்துக் கொடுக்க முடிவு செய்துவிட்டார் பிரதமர் இந்திராகாந்தி! இது வெறும் வதந்தியா அல்லது உண்மையான செய்தியா என்று தெரியாமல் குழம்பத் தொடங்கினர் தமிழக மக்கள். 1973ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இலங்கை பிரதமர் சிரிமாவோ பண்டாரநாயகேயின் அழைப்பின் பேரில் இலங்கை சென்றார் பிரதமர் இந்திராகாந்தி. அந்தச் சந்திப்பின் போதுதான் தாரைவார்ப்புக்கான அத்தனைக் காரியங்களும் நடந்தேறியதாக அடுத்தடுத்து செய்திகள் வெளிவரத்தொடங்கின.

வெளிவருகின்ற செய்திகளை உண்மையாக்கும் வகையில் பிரதமர் இந்திராகாந்தியிடம் இருந்து தமிழக முதலமைச்சர் கருணாநிதிக்குக் கடிதம் ஒன்று வந்தது. கச்சத்தீவை இலங்கைக்குக் கொடுப்பதற்கு முடிவு செய்திருக் கிறோம். தமிழக அரசின் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன என்பதே அந்தக் கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்ட செய்தியாகும். உடனடியாகத் தமிழக சட்டத்துறை அமைச்சர் செ. மாதவனுடன் டெல்லி சென்றார் முதலமைச்சர் கருணாநிதி. கச்சத்தீவு எந்த வகையில் எல்லாம் இந்தியாவுக்குச் சொந்தம் என்பதை விளக்கினார். தமிழக மீனவர்களின் வாழ்வாதாரமாக கச்சத்தீவு விளங்கும் விதத்தை எடுத்துச் சொன்னார். வாய்மொழியாகவும் விளக்கினார். கடிதம் மூலமாகவும் எடுத்துச்



சொன்னார். எல்லாவற்றையும் கவனமாக உள்வாங்கிக்கொண்ட பிரதமர் இந்திராகாந்தி, அனைத்தையும் தூக்கி எறிந்துவிட்டு, கச்சத்தீவைக் காவு கொடுத்துவிட்டார். இந்த இடத்தில் இரண்டு முக்கியமான கேள்விகள் எழுகின்றன. இந்தியாவுக்குச் சொந்தமான கச்சத்தீவு எங்களுக்கு வேண்டும் என்று இலங்கை கோருவதற்கு என்ன காரணம்? தமிழக அரசின் எதிர்ப்பையும் மீறி கச்சத்தீவைத் தானம் கொடுத்ததற்கு மத்திய அரசு காட்டிய ஆர்வத்தின் பின்னணி என்ன? முதல் கேள்விக்கான விடையைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்றால் கச்சத்தீவின் பொருளாதார மற்றும் ராணுவப் பின்னணியைப் அறிந்துகொள்ள வேண்டும்.

இந்தியா - இலங்கை இடையிலான பாக் நீர்ச்சந்திப்பில் இருக்கும் பாம்பன் தீவுக்கும் இலங்கையின் வடக்குக் கடற்கரையில் இருக்கும் டெல்த் தீவுக்கும் இடையே சமதொலைவில் உள்ள தீவின் பெயரே கச்சத்தீவு. ஆள் நடமாட்டம் அதிகம் இல்லாத, அமைதி தவழும் சின்னஞ்சிறு தீவு. ஏறக்குறைய ஒரு மைல் நீளமும், தொள்ளாயிரம் அடி அகலமும் கொண்ட கச்சத்தீவின் மொத்தப் பரப்பளவு 285.2 ஏக்கர். ராமேச்வரத்திலிருந்து பதினெட்டு கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும் இந்தக் கச்சத்தீவிற்கு, விசைப்படகு மூலம் இரண்டே மணி நேரத்தில் சென்று விடலாம். ஆனால் கச்சத்தீவுக்கு அருகில் கரும்பாறைகள் அதிகம் இருப்பதால் நூறு மீட்டருக்கு முன்பே விசைப்படகில் இருந்து இறங்கி, கட்டுமரத்தில் ஏறித்தான் கச்சத்தீவிற்குச் செல்ல வேண்டும். அதைப்போலவே, இலங்கையில் நெடுந்தீவில் இருந்து இருபத்தெட்டு கிலோமீட்டர் பயணம் செய்தால் கச்சத்தீவு கண்ணில் பட்டுவிடும்.

முட்டை வடிவத்தில் இருக்கும் இந்த கச்சத்தீவின் மேற்குப் பகுதியில் உயர்ந்த பாறைகள் இருக்கின்றன. கொஞ்சம் உள்ளே இறங்கினால் வெண்மை நிற மணல் திட்டுகள் தட்டுப்படும். பசுமையான புற்கள், செடி, கொடிகள், புதர்கள் நிரம்பிய கச்சத்தீவு மேய்ச்சல் நிலமாகவும் பயன்படுகிறது. டார்குயின் என்ற பச்சை நிற ஆமைகள் கச்சத்தீவில் அதிகம் உண்டு. அந்த **ஆமைகளுக்குக் கச்சம்** என்று பெயர். அதனால்தான் இந்தத் தீவிற்குக் கச்சத்தீவு என்று பெயர் வந்ததாகச் சொல்கிறார்கள்.

சித்த மருத்துவத்துக்குத் தேவையான உமிரி போன்ற மூலிகைகள், சாயா மலர், கற்றாழை, கள்ளி, வீணாரைக் கிழங்கு, அல்லைக் கிழங்கு, கருவேல மரங்கள், பனை மரங்கள் ஆகியனவும் கச்சத்தீவில் காணக் கிடைக்கின்றன. மீன்வளம் மிக்க கச்சத்திவில் விலையுயர்ந்த இறால்களும் கிடைக்கின்றன. கச்சத்தீவைச் சுற்றியுள்ள கடற்பகுதியில் சங்குகள் அதிகம் கிடைக்கும் என்பதால் சங்குக் குளித்தல் முக்கியத் தொழிலாக இருந்தது. சிமெண்ட் தயாரிக்கப் பயன்படும் கால்சியம் கார்பனேட் நிரம்பிய ஓடக்கல், சுண்ணாம்புக் கற்கள் ஆகியனவும் கச்சத்தீவு பகுதியில் கிடைக்கும். எல்லாவற்றையும் விட முக்கியமாக, கச்சத்தீவு பகுதியில் எண்ணெய் வளம் இருக்கக்கூடும் என்று சோவியத் ஆய்வுகள் தெரிவித்துள்ளன. கச்சத்தீவைச் சுற்றியுள்ள பகுதியில் கிடைக்கும் சங்கு, முத்து, பவளப் பாறைகள் ஆகியன இந்திய மீனவர்களுக்குக் காலங்காலமாக வருமானம் கொடுத்து வருகின்றன.

அதைக்காட்டிலும் முக்கியமாக ராணுவ ரீதியான காரணங்கள் பல இருக்கின்றன. பாக் நீர்ச்சந்திப்பு மற்றும் மன்னார் வளைகுடாவில் கப்பற்படை அரண் அமையும் பட்சத்தில் அதன் மையங்களில் ஒன்றாக கச்சத்தீவை அமைக்கலாம். நீர்மூழ்கிக் கப்பல் பயிற்சிக்களத்தை ஏற்படுத்த முடியும். தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும், ஐரோப்பிய இந்தோனேசியத் தீவுகளில் அமைக்கப்படும் ஏவுகணைத்தளங்களின் இலக்குகளுக்கு நேர்எதிராக ஏவுகணைத் தளத்தை கச்சத்தீவில் அமைக்கலாம். இந்தியா மீது போர் தொடுக்க விரும்பும் நாடு இலங்கை வழியாக நம்மைத் தாக்குவதற்கு வாய்ப்புகள் அதிகம். அந்த ஆபத்தைத் தகர்க்க கச்சத்தீவு பொருத்தமான பகுதி. முக்கியமாக, கப்பற்படையினருக்கும், நீர் மூழ்கிக் கப்பல் படையினருக்கும் பயிற்சிக் களமாக இருக்கவும், நீர்மூழ்கிக் கப்பல்கள், போர்ப் படகுகள் செப்பனிடும் இடமாக இருக்கவும் கச்சத் தீவைப் பயன்படுத்த முடியும். கடல் உணவு வகைகள் பற்றிய ஆராய்ச்சி நிறுவனம் அமைப்பதற்கு ஏற்ற இடமும் கூட முக்கியமாக, இந்திய ராணுவம் போர்ப்பயிற்சி செய்வதற்குப் பொருத்தமான இடம். இத்தனையும் கச்சத்தீவின் பலன்கள்.



வருவாய் ரீதியாக மட்டும் மீனவர்களுக்குப் பலன் கொடுத்து வரும் கச்சத்தீவு, பாதுகாப்பு ரீதியாகவும் ராணுவ ரீதியாகவும் இந்தியாவுக்கு மிகப்பெரிய அரண்.

பொருளாதார ரீதியாகவும், ராணுவ ரீதியாகவும் முக்கியத்துவம் வாய்ந்த கச்சத்தீவின் மீது இலங்கை ஆர்வம் செலுத்தியதன் பின்னணி இதுதான். அந்த ஆர்வம் சுதந்தரம் அடைவதற்கு முன்னரே வந்துவிட்டது. காரணம், தமிழக மீனவர்களைப் போலவே இலங்கை மீனவர்களும் கச்சத்தீவுப் பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவந்தனர். இன்றைக்கு இருப்பதைப் போலவே அன்றைக்கும் எல்லை தாண்டிச் செல்வது என்பது வழக்கத்தில் இருந்த ஒன்று. அதன் காரணமாக, இருதரப்பு மீனவர்களுக்கும் இடையே அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டன.; இந்தியக் கடற்படை வீரர்களுக்குப் பயிற்சியளிக்க ஏதுவான இடம் ஒன்றைத் தேடிக்கொண்டிருந்தது இந்திய அரசு. அப்போது கச்சத்தீவு நினைவுக்கு வரவே, அங்குவைத்து ராணுவப் பயிற்சி கொடுக்கத் தயாரானது. கச்சத்தீவு என்பது இலங்கைக்குச் சொந்தமான பகுதி; அங்கே ராணுவப் பயிற்சி உள்ளிட்ட எந்த விஷயங்களுக்காக நுழைய வேண்டும் என்றாலும் இலங்கை அரசிடன் முன் அனுமதி பெறவேண்டும்! இப்படியொரு எச்சரிக்கை விடுக்கப்பட்டது 1949ஆம் ஆண்டு. இந்திய அரசு மௌனத்தை மட்டுமே அனுசரித்தது. அப்போது பிரதமர் பதவியில் இருந்தவர் ஜவஹர்லால் நேரு.

இது இந்திய அரசுக்கு விடுக்கப்பட்டுள்ள பகிரங்கமான மிரட்டல் என்று ஆவேசப்பட்டனர் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள். ஆனாலும் விஷயம் பெரிய அளவில் வலுப்பெறவில்லை. அப்படியே அடங்கிப் போய்விட்டது. அதன்பிறகு கச்சத்தீவில் இலங்கை ராணுவத்தளம் ஒன்றை உருவாக்கப் போவதாக அடிக்கடி செய்திகள் வருவதும், தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்குரல் எழுப்புவதும் பிறகு விவகாரம் மெல்ல அடங்கிவிடுவதும் தொடர்கதையாகவே இருந்தது. அப்படித்தான் 1956ஆம் ஆண்டிலும் ஒருமுறை செய்தி வெளியானது. ‘இலங்கை அரசு தனது ராணுவ வீரர்களுக்குக் கச்சத்தீவில் வைத்துப் பயிற்சி

தரப்போகிறது'. இந்தச் செய்தி வெளிவந்தவுடன் மக்களவையில் ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்தார் புதுக்கோட்டைத் தொகுதி மக்களவை உறுப்பினர் முத்துசாமி வல்லத்தரசு. கோரிக்கை எழுகின்ற சமயங்களில் எல்லாம் இலங்கை அரசுக்கு எதிராகக் கண்டனக்குரல் ஒன்றைப் பதிவுசெய்துவிடுவது மத்திய அரசின் வாடிக்கை. இம்முறையும் அந்தக் கடமையை ஆற்றத் தவறவில்லை.

முழுக்க முழுக்க இந்தியாவுக்குச் சொந்தமான பகுதியான கச்சத்தீவில் இலங்கை அரசு தொடர்ச்சியாக நடத்தும் அத்துமீறல்களுக்கு மத்திய அரசின் பதில் என்ன என்ற கேள்வியை எழுப்பினார் திருச்சி தொகுதிக்கான மக்களவை உறுப்பினர் அனந்த நம்பியார். அதற்கு பிரதமர் நேரு கொடுத்த பதிலில் கச்சத்தீவு விவகாரத்தை இந்திய அரசு எத்தனை அலட்சியத்துடன் அணுகுகிறது என்பது அம்பலத்துக்கு வந்தது. 'கச்சத்தீவு பற்றிய போதுமான தகவல்கள் மத்திய அரசின் வசம் இல்லை; அதைப் பற்றிய குறிப்பேடுகளை ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்; அதே சமயம், கச்சத்தீவு போன்ற சின்னஞ்சிறு தீவு ஒன்றுக்காக இருநாடுகளும் மோதிக்கொள்ளும் கேள்வியே எழவில்லை. முக்கியமாக, நம்முடைய அண்டை தேசமான இலங்கையுடன் நம்முடைய தேசிய கௌரவம் எதுவும் பாதிக்கப்படவில்லை' என்று நேரு பதிலளித்தார்.

இந்தியாவின் அறிவிப்புகளால் கச்சத்தீவின் மீதான தங்களுடைய ஆதிக்கத்துக்குப் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகச் சந்தேகித்தது இலங்கை. அதன் தொடர்ச்சியாக போட்டி அறிவிப்பு ஒன்றை வெளியிட்டது. இலங்கையின் கடல் எல்லை ஆறு கடல்மைல்கள் வரை இருக்கிறது; கடல் பரப்பைச் சுற்றி நூறு கடல்மைல் பரப்பளவில் இலங்கைக்கு மீன்பிடி உரிமை இருக்கிறது என்பதுதான் அந்த அறிவிப்பின் சாரம். பத்தாண்டுகள் கழித்து மீண்டும் ஒருமுறை தனது கடல் எல்லையில் மாற்றம் செய்து அறிவிப்பு வெளியிட்டது இந்திய அரசு. அதற்கு பதிலடியாக இலங்கையும் அதேபோன்றதொரு அறிவிப்பை வெளியிட்டது. உச்சக்கட்டமாக, 1968ஆம் ஆண்டு பிப்ரவரி 29ஆம் நாளன்று டெல்லியில் இருந்து வெளியான



பத்திரிகை ஒன்றில் அதிர்ச்சியூட்டும் செய்தி ஒன்று வெளியானது. இலங்கை அரசின் ஆதிக்கத்தில் கச்சத்தீவு முழுமையாக அடங்கியிருப்பதால் தனது முழு நிர்வாகத்தையும் அங்கு செயல்படுத்த இலங்கை அரசு முற்பட்டிருக்கிறது. ஒற்றை வாக்கியத்தில் சொல்வது என்றால் கச்சத்தீவை இலங்கை அரசு தன்வசப்படுத்திக்கொண்டது.

தி.மு.க. மக்களவை உறுப்பினர் இரா. செழியன் மக்களவையில் கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்தார். மேலும் சில உறுப்பினர்களும் கவன ஈர்ப்புத் தீர்மானங் களைக் கொண்டு வந்திருந்தினர். ஒரே விஷயத்துக்காகப் பலரும் தீர்மானங்கள் கொடுத்திருப்பதால் குலுக்கல் முறைப்படி ஒருவருடைய தீர்மானத்தை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள முடிவு செய்யப்பட்டது. அதன்படி மூத்த நாடாளுமன்ற உறுப்பினர்களுள் ஒருவரான மது லிமாயி தீர்மானத்தை முன்மொழிந்தார். நாடாளுமன்றத்தில் பல முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகளை எடுத்துப் பேசியவர் மது லிமாயி. லோக் தளம் கட்சியைச் சேர்ந்தவர். பின்னாளில் உருவான ஜனதாக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்தவர். **(மது லிமாயி, ஹரிவிஷ்ணு காமத், நாத்பாய், ஹேம்பருவா போன்ற முதிர்ச்சிப்பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களை இன்று காண முடியவில்லை. நமது நாட்டில் ஜனநாயகத்தைக் காத்து வளர்த்தவர்கள் இந்தப் புகழ்பெற்ற உறுப்பினர்கள் ஆவர்.)**

அவையில் சலசலப்பு அதிகரித்ததைத் தொடர்ந்து பிரதமர் இந்திராகாந்தி பேசினார். 'கச்சத்தீவு பற்றிய முழு விவரங்கள் எதுவும் தற்போது இந்திய அரசின் வசம் இல்லை. இலங்கை அரசுடன் நல்ல நட்புறவுடன் இந்தியா இருக்கிறது. ஆகவே, விபரங்கள் முழுமையாகக் கிடைக்காத நிலையில், மேற்கொண்டு கருத்து சொல்வது பிரச்சனையை மேலும் மோசமாக்கிவிடும். ஆகவே விபரங்கள் கிடைத்த பிறகு அரசு சார்பில் விரிவான அறிக்கை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும்.

கச்சத்தீவு குறித்து கைவசம் தகவல் இல்லை என்று 1956 ஆம் ஆண்டில் கூறியிருந்தார் அப்போதைய பிரதமர் நேரு. பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்தபிறகு, 1968ஆம் ஆண்டிலும்,

‘தற்சமயம் தகவல் எதுவும் இல்லை’ என்று கூறுகிறார் தற்போதைய பிரதமர் இந்திராகாந்தி. சின்னஞ்சிறு கச்சத்தீவைப் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதில் இந்திய அரசு காட்டிய ‘முனைப்பு’ வியப்பின் உச்சம். **(தமிழ் நாட்டின் நலன்களைப் பாதுகாப்பதில் யாருக்கும் அக்கறை இல்லை. ஒவ்வொரு நாளும் தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்படுவதும், இலங்கைச் சிறையில் வாடுவதும், முதலமைச்சர் பாரதப் பிரதமருக்குக் கடிதம் எழுதுவதும், எதிர்கட்சித் தலைவர்கள் அறிக்கை விடுவதும், தமிழ்நாட்டு காங்கிரஸ் தலைவர்கள் முதலைக்கண்ணீர் வடிப்பதும், தி.மு.க. போன்ற சந்தர்ப்ப வாதக்கட்சிகள் அமைச்சரவையில் பங்கு கொண்டிருந்த போதிலும் மத்திய அரசுக்கு எதிராக அறிக்கை விடுவதும் அன்றாட நிகழ்ச்சிகளாகும்.)**

இந்தியாவுக்கும் - இலங்கைக்கும் இடையேயான ராஜீய உறவை மேம்படுத்திக்கொள்வதற்காக அனைத்து விஷயங்களிலும் தாராளப்போக்கைக் கடைப்பிடிக்கத் தயாரானது இந்திய அரசு. அதனைப் புரிந்து கொண்ட சிரிமாவோ, 1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இந்தியா வந்து, பிரதமர் இந்திராவைச் சந்தித்துப் பேசினார். அப்போதே கச்சத்தீவை இலங்கைக்குக் கொடுக்கத் தயாராகிவிட்டார் பிரதமர் இந்திரா. எனினும், தமிழக முதலமைச்சர் கருணாநிதியின் கருத்தைக் கேட்டுக் கடிதம் எழுதினார். முன்னதாக, இந்திய அரசின் வெளியுறவுத்துறைச் செயலாளர் கேவல்சிங், கருணாநிதியைத் தொடர்பு கொண்டு கச்சத்தீவு பற்றிப் பேசியிருந்தார். கச்சத்தீவு பற்றிய குறிப்பேடுகளை ஆய்வு செய்து பார்த்தபோது பலவிஷயங்கள் நமக்குச் சாதகமாகவே இருப்பது தெரிய வந்துள்ளது. கச்சத்தீவு என்பது இலங்கை அரசுக்கு உட்பட்ட தீவாக எந்தக் காலத்திலும் இருந்ததில்லை என்றும் தெரிய வந்தது. டச்சு, போர்த்துகீசிய மன்னர் காலத்து வரைபடங்களும் அதை உறுதிசெய்தன.

1954ஆம் ஆண்டு இலங்கை வெளியிட்ட வரை படத்திலும் கச்சத்தீவு இடம்பெறவில்லை. கச்சத்தீவுக்குச் செல்லும் பாதையிலும், கச்சத்தீவின் மேற்குபகுதி கரை ஓரத்திலும், சங்கு எடுக்கும் உரிமை ராமநாதபுரம் ராஜாவுக்கு இருந்தது என்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன. அங்கு சங்கு எடுத்ததற்காக, அவர் எந்தக் காலத்திலும்



இலங்கை அரசுக்கு கப்பம் கட்டியது கூட இல்லை. ஆக, கைவசம் இருக்கும் இந்த ஆதாரங்களைக் கொண்டு கச்சத்தீவு இந்தியாவின் ஒரு பகுதிதான் என்பதை எந்த நீதிமன்றத்திலும் நிரூபிக்கமுடியும். உண்மையில் கச்சத்தீவு இந்தியாவுக்குச் சொந்தம் என்பதில் மத்திய அரசுக்கு எந்தச் சந்தேகமும் இல்லை. தனக்குச் சொந்தமான பகுதியை, ராஜீய நடவடிக்கையின் ஒருபகுதியாக இன்னொரு நாட்டுக்குத் தருவது என்று முடிவு செய்துவிட்டது. அதன் காரணமாகவே, தமிழக அரசின் கோரிக்கைகள் பற்றியோ, ஆதாரங்கள் பற்றியோ பிரதமர் கவலைப்படவில்லை. 28.6.1974ஆம் நாள் கச்சத்தீவை இலங்கையிடம் ஒப்படைக்கும் ஒப்பந்தம் கையெழுத்தாகியது.

இந்தியா - இலங்கை இடையேயான சிக்கல்கள் முழுவதையும் அனைத்து கோணங்களில் இருந்தும், வரலாற்று ஆதாரங்களுடனும், சட்டமுறைகளையும் நோக்கிய பிறகு, இந்தியா - இலங்கை அரசுடன் இந்த ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது என்ற வாசகம் ஒப்பந்தத்தில் இடம்பெற்றது. இதன் ஷரத்துக்கள் ஐந்து மற்றும் ஆறு இந்திய மீனவர்களுக்கு உறுதுணையாய் அமைந்துள்ளவைகள் போல தோன்றிலும், நடைமுறையில் அவ்வாறு இல்லை என்பதைத் தற்போதைய நிகழ்ச்சிகள் வெளிப்படுத்துகின்றன.

**ஷரத்து 5**

இந்திய மீனவர்களும் வழிபாட்டுக்குச் செல்லும் பயணிகளும் (உதாரணத்துக்கு அந்தோணியார் கோயில் திருவிழா) இந்நாள் வரை கச்சத்தீவுக்கு வந்து சென்றதைப் போலவே இனியும் வந்து செல்வதற்கு எந்தத் தடையும் இல்லை. கச்சத்தீவை அனுபவிக்க சம்பந்தப்பட்ட மீனவர்களுக்கு முழு உரிமை உண்டு. கச்சத்தீவுக்குள் நுழைவதற்கும், தீவில் நடமாடுவதற்கும் சிங்கள அரசிடம் இருந்து எந்தவிதமான பயண ஆவணங்களோ (பாஸ்போர்ட்), நுழைவு அனுமதிகளோ (வீசா) பெறவேண்டிய அவசியம் எதுவும் இல்லை. இதற்காக, இலங்கை அரசு தமிழக மீனவர்களை நிர்ப்பந்திக்க முடியாது.

**ஷரத்து 6**

இந்திய - இலங்கைப் படகுகளும் கப்பல்களும் கச்சத்தீவுக்குச் சென்றுவர என்றும் உள்ள மரபுவழி உரிமைகள் தொடர்ந்து நீடிக்கும். தமிழக அரசின் எதிர்ப்புகளைப் புறக்கணித்துவிட்டு, தமிழக மீனவர்களின் அழுகுரல்களை அலட்சியம் செய்துவிட்டு, மத்திய அரசு தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, கச்சத்தீவை இலங்கைக்குத் தாரை வார்த்துக் கொடுத்தது.

கச்சத்தீவு விவகாரத்துக்குத் தார்மீகப் பொறுப்பேற்று தி.மு.க. அரசு பதவி விலகவேண்டும் என்றார் அ.தி.மு.க.வைச் சார்ந்த அரங்கநாயகம். அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. கச்சத் தீவுக்காகக் கச்சை வரிந்துகட்டுவோம் என்பதுதான் அ.தி.மு.க. தீர்மானத்தில் இடம்பெற்ற முக்கியமானச் சொற்றொடர். தீர்மானங்கள் நிறைவேற்றியதோடு 1974ஆம் ஆண்டு ஜூலை 14ஆம் நாளன்று, 'கச்சத்தீவு ஒப்பந்தக் கண்டன நாள்' தமிழ்நாட்டில் அனுசரிக்கப்பட்டது. எதிர்ப்புகள் சரமாரியாக அணிவகுத்தபோதும் மத்திய அரசு அசைந்து கொடுக்கவில்லை. இத்தனைக்கும் கச்சத்தீவு தாரை வார்க்கப்பட்டபோது, நாடாளுமன்றத்தில் தமிழகத்தின் சக்திவாய்ந்த அரசியல் தலைவர்கள் பலரும் உறுப்பினர்களாக இருந்தனர். காமராஜர், எம். கல்யாண சுந்தரம், ஓ.வி. அளகேசன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இந்திராகாந்தியிடம் செல்வாக்கு நிரம்பிய மனிதராக இருந்த சி. சுப்பிரமணியம்கூட வெறும் பார்வையாள ராகத்தான் இருந்தார். கச்சத்தீவு கைவிட்டுப் போவதை யாராலும் தடுத்து நிறுத்த முடியவில்லை.

ஒப்பந்தம் கையெழுத்தாகி ஏறக்குறைய ஒருமாதம் கழித்தே நாடாளுமன்றம் கூடியது. 1974ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் நாளன்று இந்திய - இலங்கை ஒப்பந்தம் நாடாளு மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. உடனடியாக எதிர்ப்புக்குரல் எழுப்பினார் தி.மு.க. உறுப்பினர் இரா. செழியன்.

ராமநாதபுரம் எம்.பி.யான மூக்கையா தேவரும் ஒப்பந்தத்தைக் கடுமையாக எதிர்த்தார். 'இன்று இலங்கை அரசு



தனது ராணுவத்தைக் கச்சத்தீவை நோக்கிக் குவித்துக் கொண்டிருக்கிறது. அங்குள்ள மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. ஆனால் நீங்கள் எங்களை ஏமாற்றி விட்டீர்கள். எங்களுடன் கலந்து ஆலோசனை செய்யவில்லை. இதன்மூலம் இந்திய நாட்டுக்கே ஆபத்து ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது' என்றார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் எம். கல்யாணசுந்தரம், ஒப்பந்தத்தின் ஐந்தாவது ஷரத்தில் மீனவர்கள் கச்சத்தீவுக்குள் வருவதற்கு எந்தத் தடையுமில்லை என்று உள்ளதே தவிர, கச்சத்தீவுக்குள் வந்து மீன் பிடிக்கலாமா, கூடாதா என்பது பற்றித் தெளிவாகச் சொல்லவில்லை. அதை மத்திய அரசு தெளிவுபடுத்த வேண்டும் என்று கோரினார். அதற்குப் பதிலளித்த மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஸ்வரண்சிங், 'கச்சத்தீவைச் சுற்றி மீன்பிடிக்கத் தமிழக மீனவர்களுக்கு இருக்கும் பாரம்பரிய உரிமைகள் எதுவும் மாறவில்லை' என்றார். மொத்தத்தில் மத்திய அரசின் வசம் இருக்கின்ற அதிகாரங்களுக்கு முன்னால் மாநிலத்தின் ஆளுங்கட்சி காட்டிய எதிர்ப்புகள் எடுபடவில்லை.

## தமிழ்நாட்டின் தரம்தாழ்ந்த அரசியலும், தாக்கப்பட்ட மலையாளிகளும்:

அ.தி.மு.க. வளர்ந்து கொண்டிருந்தது; அதை ஆதரிப்பதற்கு அரசியல் கட்சிகள் அணிவகுத்துக் கொண்டிருந் தன. போதாக்குறைக்கு, முக்கியப் பிரமுகர்கள் தி.மு.க. விலிருந்து அ.தி.மு.க.வுக்கு முகாம் மாறிக் கொண்டிருந்தனர். எல்லாமாகச் சேர்ந்து கருணாநிதியைக் கலவரப்படுத்தின. அதற்கு நேர்மாறாக, திரண்டு வரும் ஆதரவைக் கண்டு எம்.ஜி.ஆர். உற்சாக வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தார். விளைவு, கருணாநிதி - எம்.ஜி.ஆர். இடையேயான அறிக்கை யுத்தம் தீவிரமடைந்தது. குறிப்பாக, எம்.ஜி.ஆரைக் காட்டமான மொழியில் விமரிசித்தார் கருணாநிதி. அண்ணாவின் பெயரில் கட்சியை வைத்துக்கொண்டு, அண்ணாவின் உயிர் என்று அழைக்கப்பட்ட மாநில சுயாட்சித் தீர்மானத்தை ஆதரிக்காத எம்.ஜி.ஆரின் இனமும் விமரிசனத் துக்கு உள்ளானது. எம்

.ஜி.ஆர். பிறப்பால் மலையாளி. அதைத்தான் மறைமுகமாகக் குறிவைத்தார் கருணாநிதி.

எம்.ஜி.ஆர். தி.மு.க.விலிருந்து நீக்கப்பட்ட சமயத்தில், எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றங்களில் கணக்கை மட்டும் ஏன் எம்.ஜி.ஆர். கேட்கவில்லை. அவை மட்டும் என்ன கேரளா விலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதா என்று பேராசிரியர் அன்பழகன் முன்னதாக கேள்வி எழுப்பியிருந்தார். அன்று அவர் எழுப்பிய கேள்விதான் தற்போது பெரிய அளவில் எழுந்திருந்தது.

தமிழகத்தில் தமிழரின் ஆட்சிதான் வரவேண்டும் என்று விரும்புவோமே தவிர, தமிழ்ப் பகைவர்களின் ஆட்சியைத் தமிழ்நாட்டில் ஒருக்காலும் விரும்பமாட்டோம் என்றார் கருணாநிதி. குறிப்பாக, இந்தியாவில் இரண்டு கேரளங்கள் இருக்க முடியாது என்றார். அதன் அர்த்தம் புரிந்து அ.தி.மு.கவினர் கொந்தளித்தனர். தி.மு.க.வினருக்கும் அ.தி.மு.க.வினருக்கும் இடையே ஆங்காங்கே கலவரங்கள் எழுந்தன. **(அன்று தொடங்கிய அறிக்கைப்போர் நாற்பது ஆண்டுகளுக்குப் பின்னரும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. அன்றாடம் நாளிதழ்களிலும், ஊடகங்களிலும் முதலமைச்சரைச் சாடி வெளியிடப்படும் கருணாநிதியின் அறிக்கையும், அதற்கு முதலமைச்சர் ஜெயலலிதா அளிக்கும் பதிலும் மாறி மாறி வந்து கொண்டே இருக்கின்றன. கீரியும் பாம்பும் போன்று இந்த இரண்டு அரசியல் கட்சிகளும் செயல்பட்டு வருகின்றன.**

**1967ஆம் ஆண்டு தொடங்கிய திராவிடக் கட்சிகளின் ஆட்சியை இன்றுவரை அகற்ற இயலவில்லை. அவ்வப்போது தனது சுயநலத்திற்காக இருகட்சிகளும் மத்திய அரசுடன் உறவு கொண்டிருக்கும். குறிப்பாக இலங்கைத் தமிழர்களை காப்பாற்றப் பிறந்தவர்கள் தாங்கள்தான் என்று ஒவ்வொரு அரசியல் கட்சியும் மார்தட்டிக் கொள்ளும். மற்றைய மாநிலங்களில் காணப்படாத அரசியல் மற்றும் காழ்ப் புணர்ச்சி தமிழ்நாட்டில்தான் அதிக அளவில் காணப் படுகிறது. தமிழ் நாட்டில் எங்கே மதக்கலவரம் மற்றும் ஜாதிக்கலவரம்**



**நடைபெற்றாலும், மாட்சிமை தங்கிய (நீங்கிய) கருணாநிதியும், வீரமணியும் இந்த நிகழ்ச்சிக ளுக்குக் காரணம் 'ஆரியர் சூழ்ச்சி' என்று பரபரப்பான அறிக்கை விடுவர். மனுதர்மத்தை கொளுத்துவோம் என்பார்கள். என்றைக்கும் உதவாத, நிறைவேற்றினாலும் யாருக்கும் பயன்படாத சேதுசமுத்திரத் திட்டத்தை 'சாக்ஷாத் ஸ்ரீராமசந்திரமூர்த்தி திட்டம்' என்று பெயர் சூட்டிக் கொள்ளுங்களேன் என்றெல்லாம் அறிக்கை விட்டுக் கொண்டிருப்பார். உளுத்துப்போன, ஒன்றுக்கும் உதவாத சேதுசமுத்திர கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று அவ்வப்போது ஆவேசப்படுவார், போராட் டங்களில் ஈடுபடுவார்.)**

மலையாளி என்று தன்னை விமரிசித்த கருணாநிதிக்குப் பதிலடி கொடுக்கும் வகையில், 'கருணாநிதி தாசி குலத்தில் பிறந்தவர்' என்று எம்.ஜி.ஆர் பேசிவிட்டார் என்று வதந்தி கிளம்பியது. அண்ணாவின் குலத்தை இழிவுபடுத்தி விட்டார் எம்.ஜி.ஆர் என்பதாக அந்த வதந்தி வளர்ச்சி அடைந்தது. அண்ணாவும், கருணாநிதியும் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பது தி.மு.க.வினரின் நம்பிக்கை.

அரசியல் தலைவர்கள் இடையேயான மோதல் இரண்டு கட்சித் தொண்டர்களுக்கு இடையேயான மோதலை உருவாக் கியது. அது மெல்லமெல்ல காழ்ப்புணர்ச்சியின் எல்லையை எட்டியது. 'அண்ணாவின் குலத்தை இழித்தும் பழித்தும் பேசிய எம்.ஜி. ராமச்சந்திரனே மன்னிப்புக்கேள்' என்று கூறி போராட்டத்தில் ஈடுபட்டனர் தி.மு.க.வினர். குறிப்பாக, சென்னை சத்யா ஸ்டுடியோவுக்கு முன்னர் தி.மு.க.வினர் திரண்டனர். எம்.ஜி.ஆர் நடித்த படங்கள் ஓடிக்கொண்டிருந்த திரையரங்குகள் தாக்கப்பட்டன. அதற்கு அ.தி.மு.க.வினர் பதிலடி கொடுத்தனர்.

கட்சித் தொண்டர்களுக்கு இடையேயான மோதல் தமிழர்களுக்கும், மலையாளிகளுக்கும் இடையேயான மோதலாகவும் உருமாற்றம் அடைந்தது. பரவிக் கொண்டிருந்த நெருப்பை விசிறிவிடுகிற வகையில் தமிழ்நாட்டில் இருந்து மலையாளிகளை விரட்டியடியுங்கள் என்ற வாசகம் நாத்திகம்

என்ற பத்திரிகையில் வெளியானது. தமிழகத்தில் தமிழர் பேரவை, தமிழர் பாதுகாப்புப் படை என்ற பெயர்களில் சில அமைப்புகள் ஆங்காங்கே முளைக்கத் தொடங்கின. தமிழகத்தில் வசித்துவந்த மலையாளிகள் தாக்கப் பட்டனர். குறிப்பாக, சென்னை வாழ்மலையாளிகள் மீதான தாக்குதல் அதிகமாக இருந்தது. மாலையாளிகளின் வீடுகள், கடைகள் தாக்கப்பட்டன. மலையாளப் படங்கள் ஓடிய தியேட்டர்கள் சூறையாடப்பட்டன. சென்னையில் நடந்த தாக்குதலுக்கான எதிரொலி திருவனந்தபுரத்தில் கேட்டது. கேரளாவில் வசிக்கும் தமிழர்கள் மீது அங்குள்ளவர்கள் தாக்குதல் நடத்தினர். இரண்டு மாநிலங்களைச் சேர்ந்த அரசியல்வாதிகளும் ஒருவர்கொருவர் வேண்டுகோள் விடுத்துக் கொண்டனர்.

தாசிகுலம் பேச்சை எம்.ஜி.ஆர். வாபஸ் பெறும்வரை போராட்டங்கள் தொடரும் என்று அறிக்கை வெளியிட்டார் தி.மு.க.வின் மதுரை மாவட்டச் செயலாளர் பொன். முத்து ராமலிங்கம். உடனடியாக பதில் அறிக்கை வெளியிட்டது அ.தி.மு.க. பேசாத ஒரு பேச்சை சாக்காக வைத்துக் கொண்டு, புரட்சித் தலைவரின் படங்களைத் தடுக்கும் முயற்சியில் ஒரு கூட்டம் ஈடுபட்டு வருகிறது. காவல்துறையினர் பாதுகாப்பு தருவதற்கு மறுத்து வருகின்ற காரணத்தால் பாதுகாப்பு அளிக்க அ.தி.மு.க. தோழர்கள் முன்வர வேண்டும் என்றது அந்த அறிக்கை. அதை வெளியிட்டவர் அ.தி.மு.க.வின் துணைப் பொதுச்செயலாளர் நாஞ்சில் மனோகரன். ஆளுங்கட்சியினரின் தாக்குதலில் இருந்து தன்னையும் அ.தி.மு.க. தொண்டர்களையும் காப்பாற்ற வேண்டும் என்றால் தமிழகத்தின் மற்ற அரசியல் கட்சிகளின் ஆதரவைப் பெற வேண்டும் என்ற நிலைக்கு வந்திருந்தார் எம்.ஜி.ஆர். உடனடியாக இனவெறி எதிர்ப்பு ஆலோசனைக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தார். அந்தக் கூட்டத்துக்கு இரண்டு காங்கிரஸ் கட்சிகளையும் அழைத்தார். இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளையும் அழைத்தார். தனக்குப் பின்புலமாக யாரெல்லாம் இருக்கிறார் கள் என்பதைக் காட்டும் முயற்சி அது. அதன்பிறகு மலையாளிகள் மீதான தாக்குதல்கள் அடங்கின. தி.மு.க - அ.தி.மு.க. இடையேயான மோதல்களும் குறையத் தொடங்கின. (தொடரும்)

# திருவிருத்தத்தில் அகஇலக்கியக் கோட்பாடுகள்

இதழ் 170இன் தொடர்ச்சி.  ஆசிரியர்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ. கிருஷ்ணமாசார்யர்.

**324. அதுகேட்ட பாங்கி அழுங்கக்கண்டு (வருந்தக் கண்டு) நற்றாய் புலம்பல்:**

யான் பெற்ற பூவைபோன்ற மகள் வருந்திச்செல்லும் பாலைச் சுரத்தில் விழுந்திருக்கும் அழலன்று, அழுகின்ற நினது கண்ணீரே யென்னைச் சுடுகின்றது; மகள் இயங்கித் திரிகின்ற மனையையும் அவள் கழங்காடுகின்ற (பெண்கள் ஆடும் கழற்சிக்காய் ஆட்டம்) இடங்களையும் நோக்கி நீ கலுழற்க (கலக்கம் கொள்ளாதே) என்றவாறு.

**325. நற்றாய் பாங்கியோடு புலம்பல்:**

ஒரு காளையின் பின் சில்வளையை உடையாள் சிவந்த தாமரை மலரையொக்கும் அடிகள்நோவ வெவ்விய காடாகிய வெள்ளத்தை நீந்த எண்ணி, அன்பினைத் தெப்பமும் துணையுமாக ஆயக்கூட்டம் புலம்பப் பிரிந்து போயினாள் என்றவாறு.

**326. நற்றாய் அயலார் தம்மொடு புலம்பல்:**

விழிமான் போன்றவள் விளையாடிய வண்டலம் பாவையைக் கண்டு பண்டைநாளில் வரங்கிடந்து என்னைப் போற் பத்துமாதஞ் சுமந்து வருந்தி மிகவும் மெய்நொந்து பெறாதார் துன்பம் எய்துவரோ, யானும் பெறாதிராது, பெற்றுத் துன்பத்தை எய்தினேன் என்றவாறு.

**327. நற்றாய் தலைமகள்பயிலிடம் தம்மொடு புலம்பல்:**

நற்றாய் தலைமகள் பயிலிடம் தம்மொடு புலம்பல்

என்பது, நற்றாய் தலைவி பழகி விளையாடும் இடங்களோடு நொந்துகூறல்.

அசோகத்தருவின் அழகிய நீழலே! பெரிதாய் வளைத்த சிற்றில்லமே! வெளியிலே செய்த கொடி கட்டிய மதில் சேர்ந்த மண்டபமே!. கயலுடனே போர் புரிந்த கண்ணாள்; இனிமேலும் நம்மை வாழ்விக்கும் கட்டளை இதுவன்றோ என்றவாறு.

**328. நிமித்தம் போற்றல்:**

நிமித்தம் போற்றல் என்பது, சகுனப்புள்ளைத் துதித்தல்.

இப்பதியிடத்து மகிழ்ச்சிகொண்டிருக்கின்ற காகமே! பாவியாகிய யான்பெற்ற கொம்புபோல்வாளை, ஈண்டுவர நீ அழையாய், அழைத்தவுடனே வருவள்; அவள் வந்தால், யான் வழிபடுகடவுளாக நின்னைப் போற்றி, சோறு, தசை முதலிய அரிய பலியை இன்று கொடுத்தாற்போல் என்றும் தருவேன் என்றவாறு.

**329. சுரந்தணிவித்தல்:**

சுரம் தணிவித்தல் என்பது, சுரத்தின்வெம்மை குளிரு மாறு கூறுதல்.

பஞ்சுரமென்னும் பண்ணுக்கு ஒப்பாகிய மொழியை யும், சுருண்ட குழலையும் உடைய என் பசிய தொடியை அணிந்தாட்கு, வெய்ய பாலையுலகம், விரிவாகிய தேவருல கும், வெய்ய கடிய காடும், அத்தேவருலகிலுண்டாகிய பஞ்ச தருச்சோலையுமாக என்றவாறு.

**330. தன்மகள் மென்மைத்தன்மைக்கு இரங்கல்:**

தன் மகள் மென்மைத் தன்மைக்கு இரங்கல் என்பது, நற்றாய் தன்மகள் மெல்லிய இயல்பாகிய தன்மைக்கு இரங்கல்.

**331. இளமைத் தன்மைக்கு உளமெலிந்திரங்கல்:**

இளமைத் தன்மைக்கு உளம் மெலிந்து இரங்கல்



என்பது, நற்றாய் தலைவி இளமைத்தன்மைக்கு மனமெலிந்து இரங்கிக் கூறல்.

விளையாடும் பாவையை நோக்கி, கரும்பு போன்ற மொழியினை உடையாய்! அழாதையென்று கண்ணீர் துடைத்து அணைத்து, உன் மார்பில் அரும்பாத முலையைச் செய்ய வாயையுடைய பசும்பொன்னாற் செய்த பாவைக் களிக்கும் இளமைத் தன்மையையுடைய மின் போன்றவளே! என்னை விட்டுப் பிரிந்து போக நீ இரும்பை யொக்கும் மனங் கொண்ட முறைமை எப்படி என்றவாறு.

**332. அச்சத்தன்மைக்கு அச்சமுற்றிரங்கல் :**

அச்சத்தன்மைக்கு அச்சமுற்று இரங்கல் என்பது, நற்றாய் தலைவியது வெருவுந்தன்மையை நினைந்து தான் அச்சமுற்று இரங்குதல்.

**333. கண்டோர் இரக்கம்:**

தம்மிடத்துப் பார்க்குங் குளிர்ந்த பார்வையோடு இனியசொல் தந்ததனையும் அயலார் தூற்றும் அலரையும் விட்டு நீங்கிச் சென்றாளென நொந்தும் கலுழ்ந்தும் துணைவி யராற்றலர். விளையாடிய பந்தும் கழலும் மற்றுமுள்ளன யாவற்றையும் கண்டு பயந்தவள் வாடும் என்றவாறு.

**334. செவிலி ஆற்றாத்தாயைத் தேற்றல்:**

செவிலி ஆற்றாத்தாயைத் தேற்றல் என்பது, செவிலி ஆற்றாத நற்றாயைத் தேறுமாறு கூறுதல்.

அன்னே, இவள் ஒருவன் பின்னே சுரம் போயின இது நன்றாயிருந்ததென்று ஒருவர் முகம் ஒருவர் நோக்கி நகையை நகைத்து வெளியிலே அலரைத் தூற்றும் மாதர்முன்னே, திசை களெல்லாம் போய்த் தேடி அணங்குபோல்வாளை இற்றைப் பொழுதே தருவேன்; யான் போய்வருமளவும் வருந்தாது இங்கிருந்தருள் என்றவாறு.

**335. ஆற்றிடை முக்கோற்பகவரை வினாதல்:**

ஆற்றிடை முக்கோற்பகவரை வினாதல் என்பது,

செவிலி தேடிப் போங்கால் வழியிடை எதிர்வரும் முக்கோலு டைய அந்தணரை வினாவுதல். (ஸ்ரீவைஷ்ணவ திரிதண்டி ஸந்நியாசியிடம், தன் பெண்ணை உடன் போக்கில் சென்ற ஆண்மகனுடன் அவர் கண்டாரே என்று வினாவுதல். ஓர் இரவுக்கு மேல் ஓர் ஊரில் ஸ்ரீவைஷ்ணவ ஸந்நியாசிகள் தங்கியிருக்கக் கூடாது. நாடெங்கும் கால் நடையாகச் சென்று, ஆங்காங்கே மக்களுக்கு நல்வார்த்தை களைக் கூறிச் சென்று கொண்டே இருக்க வேண்டும்.

சங்க காலத்தில் திரிதண்டி ஸந்நியாசிகள் மட்டுமே இத்தகைய தொரு பணியில் ஈடுபட்டிருந்தார்கள் என்பது தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியங்கள் வழி அறியப்படுகிறது. ஏகதண்டி ஸந்நியாசி களைப் பற்றிய எந்தக் குறிப்பும் சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை. ஆகவே சங்க காலத்திலே தமிழ்நாட்டில் நிலவியிருந்த சமயங்களில் தலையாயது வைணவம் என்பது இதனால் பெறப்படுகிறது.)

ஒரு வெண்குடையினது பெரியநீழலிலே மூன்று தண்டு கொண்டு ஆசாரத்தினால் அரிய வெவ்விய களர்நிலத்தில் இயைந்து (சஞ்சரித்து) வழிச்செல்வீர். என்னுடைய வஞ்சிக் கொம்பு போன்றவள் போர் செய்யும் சுடர் பொருந்திய இலைபோலும். வேலையுடைய ஒரு காளைபின் போயினள்; மீண்டு வரக்கூறி அருள்புரிவீராக என்றவாறு.

**336. மிக்கோ ரேதுக் காட்டல்:**

மிக்கோர் எதுக் காட்டல் என்பது, செவிலி வினவிய தற்கு மிக்கோர் அது உலகியல்பு என்று காரணமெடுத்துக் காட்டல்.

ஒருவருஞ் சஞ்சரியாத வனத்தில் என் மகள் ஒரு காளைபின் ஏகினாளென்று (போயினாளென்று) வருந்தா தொழி; அவ்வாறு ஏகுதல் உலகவியல்பு.

(தொடரும்)



## ஹரிதாஸரின் இருசமய விளக்கம்

*இதழ் 170இன் தொடர்ச்சி. விளக்கவுரை:புதுச்சேரி-பெருமாள் ராமாநுஜதாஸர்.*

**2ஆவது, சதுவிதப்புருடார்த்தப்பரிச்சேதம் தொடர்ச்சி.**

*20.* ***வளமான சத்துவ மதாமரக் கலமுமேவி***
***மிக்க மகிமேல்***
***அளவேது மற்றபவ சாகரத்தில் அமிழ்கின்ற***
***பேரை யருளால்***
***துளவானி ரைத்ததொடை மீது தும்பிசூழல்***
***கின்றமவு லியவனே***
***களிகூறும் முத்தியடை வித்துநீடு கரையேற்று***
***விக்கும் எனவும்.***

(வளமை பொருந்திய ராஜஸ தாமஸ ஸாத்துவிகமாகிய மரக்கலமும் ஆகிய இவற்றிற் பொருந்தி அளவற்ற பிறவிப் பெருங்கடலில் மூழ்குகின்றவர்களைக் கரையேற்றி மோக்ஷத்தை அளிப்பவன் முகுந்தனாவான், எனவும்;)

*21.* ***அரிதான ரத்தினம லையேறினோர் களவர்கட்***
***கியந்த னவெலாம்***
***பரிவான்மு கந்துகொடு போய்விளங்கு படிபோல***
***விந்தை பதியை***
***விரதோப வாசமத னால்மகிழ்ச்சி விளைவித்து***
***நாலு விதமாய்த்***
***தரைமேல் நிகழ்ந்தபுரு டார்த்தராசி தனையன்பர்***
***கொள்வர் எனவும்.***

(கிடைத்தற்கு அரிய இரத்தினமலையேறினவர்கள் விரும்பிய இரத்தினங்களை வாரிக்கொண்டு செல்வதுபோல், ஸ்ரீமந் நாராயணனை அன்பர்கள் விரதங்களாலும் உபவாசங்

களாலும் அப்பெருமானை மகிழும்படி செய்து வேண்டிய பயன்களைப் பெறுகின்றனர்.)

*22.* *எரிகின்ற அங்கிகுளி ரைக்குதட்டி யிருளைத்*
*துரத்தி யெளிதே*
*உரைதங்கு பாகவினை யும்செய்கின் றவுபகா*
*ரவற்க மதுபோல்*
*தருமம்சி றந்தபொருள் இன்பவீடு தமைநாடும்*
*அன்பர் பெறவே*
*அரியென்ன நின்றபர வத்துநல்கும் அகிலத்*
*தலத்தில் எனவும்;*

(எரிகின்ற அக்கினி ஒன்றே குளிரையகற்றுவதற்கும், இருளையோட்டுவதற்கும், உணவுப்பொருளைப் பாகஞ்செய் வதற்கு உதவியாயிருப்பது போலே, பரம்பொருளாகிய (பரவஸ்துவாகிய) அரியான இறைவனே அன்பர்கள் அறம், பொருள், இன்பம், வீடென்ற நான்கு உறுதிப்பொருள்களையும் பெறுவதற்கு உதவியாயிருப்பான்.)

*23.* *மனலோப மோகமத னால்விளைந்து மகமேரு*
*என்ன அடரும்*
*வினைநீற தாகுமபி சாரமோடு மிகுபூத*
*சங்கை முதலாம்*
*கனதீமை யாதுமணு காதுசெய்ய கமலத்து*
*நாபர் கழல்மேல்*
*நினைவாகி வாழுமவர் கட்குவண்மை நிகழ்கின்ற*
*பாரில் எனவும்;*

(இலக்குமி நாதனான இறைவனை இடைவிடாது தியானித்து வாழ்கின்ற அடியவர்களைக் கண்டு கடும்பற்று மயக்கவுணர்வு முதலிய தீய குணங்களாலும், பொல்லாத கொடிய ஒழுக்கத்தாலும் விளைந்த மகாமேருமலைபோல் அடர்ந்த பாவங்கள் சாம்பலாகும் அபிசார கர்மங்களும் (அபிசார கர்மம் - ஒருவனைக் கொல்வதற்காக அதர்வண வேதத்திற் சொல்லிய மந்திர தந்திரங்களாற் செய்யப்படுகிற சேனயாகம் முதலிய கர்மம். இது மாரணம், மோஹனம், உச்சாடனம், வித்வேஷணம்,



ஸ்தம்பநம், வசீகரணம் என்று ஆறுவகைப்படும்.) விலகிப்போம்; பூதங்களும் பேய்களும் அவர்களைப் பீடிக்கமாட்டா.)

*24.* *துளவார்தொ டைக்கண்வ ரிவண்டுகின் டுசுடர்மோ*
*லிமாயன் அருளால்*
*ஒளிகூரும் யோகியர்கள் தங்குலத்துள் உயர்வோர்*
*களைம்ப தின்மரும்*
*தளராவி தேகர்ம ரபுற்றபூமி மும்மை*
*ஒன்ப தின்மரும்*
*வளமான முந்தியுல கத்தைநண்ணி மகிழ்வொன்*
*றினார்கள் எனவும்;*

(வண்டுகள் மொய்க்கப்பெற்ற துழாய்மாலையை திருமுடியில் அணிந்த திருமாலின் அருளால், ஒளிநிறைந்த யோகியர்கள் தங்கள் குலத்திலுதித்த ஐம்பது பேர்களும், தவத்தில் தளராமனமுடைய விதேகதேசத்தரசர்கள் ஒன்பதின் மரும் ஆகிய இவர்களெல்லாம் வளமான முத்தியுலகத்தைக் கிட்டி மகிழ்ந்தார்கள் எனவும் பலபுராணங்களில் கூறப்படுகின்றன.)

*25.* *இத்தாத்தி ரிக்குள்மி கவாணையாழி யியல்வித்த*
*நன்சொல் எழில்கூர்*
*தத்தாத்தி ரேயர்த மையாச ரித்தகார்த்த*
*வீரன் எனவும்*
*நத்தார்க்கும் வேலையுல கத்துமீது நலமான*
*காமி யமெலாம்*
*சித்தார்த்த மானபடி பெற்றவேந்து திகழ்துந்து*
*மாரன் எனவும்.*

(விஷ்ணுவின் அம்சமாகிய தத்தாத்ரேய முனிவரைக் கார்த்தவீரியார்ச்சுனன் அடைந்து விரும்பிய பயன் அனைத் தையும் பெற்றான்; கடலால் சூழப்பெற்ற இவ்வுலகத்திலுள்ள காமமெல்லாம் அந்த அரியின் அருளால் தம் இஷ்டமானபடி பெற்றார்கள் துந்துமாரன் முதலான அரசர்கள் எனவும்;)

*26.* *குணிமுற்க லன்நகுட னாதியார்கள் குறையொன்றி*
*லாத தருமம்*
*துணிவுற்ற தன்மபரி பாலனோடு சுமதிஞ்சை*
*யன்மு தலினோர்*

**இணையற்ற காமமுழு தெய்தினார்கள் எழில்வேள்வி**
**செய்து மகவான்**
**அணிசொற்க நாடரர சாயினான அவ்வரியன்**
**புதன்னில் எனவும்.**

**(இன்னும், முத்கலன் முதலானாரும், நகுஷன் பல வேள்விகள் செய்து இந்திர பதவியைப் பெற்றான்; சுமதிஞ்சையன் தருமத்தோடு அரசாட்சி செய்து புண்ணியம் புரிந்து வேண்டியவற்றைப் பெற்றான் எனவும்;)**

***27.*** ***நிகரற்ற கொங்கைமிகை யாரமேவி நிறையாக***
***மத்து மயிலே***
***தகவுற்ற நாரதியம் அந்தவிண்டு தருமத்தின்***
***மன்னு மருபான்***
***நிகழத்தி யாயமத னில்தொடங்கி எழுபானோ***
***டெட்டி தெனவே***
***தொகுமத்தி யாயமள வுந்தொடர்ந்த தொடர்பின்ன***
***வாறு சொலுமால்.***

**(நிகரற்ற கொங்கையின்மேல் ஆரமும் அணிந்த ஆகம மடந்தாய்! இவ்விஷயம் நாரதீயத்திலும் விஷ்ணு தர்மம் அறுபதாம் அத்தியாயம் தொடங்கி எழுபத்தெட்டாம் அத்தியாயம் வரையிலும் காணலாம்.)**

***28.*** ***எவ்வான வர்க்குமர சோடுநக்கன் எழில்நான்மு***
***கத்தன் முதலோர்***
***தவ்வாத தங்கள்நிலை பெற்றதன்மை தகுமாலி***
***டத்தில் எனவும்***
***மெய்வாசு தேவனடி பேணுவார்கள் மிகுமுத்தி***
***சேர்வர் எனவும்***
***ஐவேத மகபார தத்திலனு சாத***
***நீகம் அறையும்.***

**(வானவர்கரசனான இந்திரன், பிரமன், சிவன் என்ற இவர்கள் தத்தம் பதவிகளைத் திருமாலிடத்திற் பெற்று வாழ்கி றார்கள். வாசுதேவரான அரியின் திருவடியைப் பேணுவார் ஒப்புயர்வற்ற முக்திப்பேற்றைப் பெறுவார்க ளென்று ஐந்தாம் வேதமான மகாபாரதத்திலுள்ள ஆநுசாசன பருவம் எடுத்தி யம்பியது.)** **(தொடரும்)**



# வேதநாயகன் விஷ்ணுவே

இதழ் 170இன்தொடர்ச்சி. ஆசிரியர்: இரும்பாநாடு ஸ்ரீ.உ.வே.சே.பத்மநாபன்.

அடுத்து ரிக்வேதம் 7ஆம் மண்டலத்திலுள்ள 99ஆவது ஸூக்தம். இந்த ஸூக்தத்தில் மொத்தம் 7 மந்திரங்கள் உள்ளன. அவற்றுள் முதல் 3 மந்திரங்கள் விஷ்ணுவைப் பற்றியவை. பின்னுள்ள 4 மந்திரங்கள் இந்திரனையும், விஷ்ணுவையும் சேர்த்துக் குறிப்பவை. இந்த ஸூக்தத்தில் உள்ள மந்திரங்களை ஒவ்வொன் றாகப் பார்ப்போம். இதில் முதல் மந்திரம் பின்வருமாறு.

*பரோ மாத்ரயா தந்வா வ்ருத$_{4}$ாந*
*ந தே மஹித்வமந்வஶ்நுவந்தி |*
*உபே$_{4}$ தே வித்$_{3}$ம ரஜஸீ ப்ருதி$_{2}$வ்யா*
*விஷ்ணோ தே$_{3}$வ த்வம் பரமஸ்ய வித்ஸே ||*

**இதன்பொருள்:** ‘‘எல்லைகள் அனைத்தையும் கடந்து, மிகப்பெரிய உருவத்தோடு வளரும் பரமனான விஷ்ணுவே! உனது பெருமையை மானிடர்கள் அறியமாட்டார்கள். தேவனான நீ உன் திருவடியால் அளந்த பூமி, வானம் என்ற இந்த இரு உலகங்களை மட்டுமே நாங்கள் அறிகிறோம். அவற்றுக்கும் மேற்பட்ட, உனது மூன்றாவது அடிவைப்பை நீயே அறிகிறாய்’’.

பகவான் விஷ்ணுவின் பரமேஶ்வரத்வம் இந்த மந்திரத்தில் தெளிவாக முழங்கப்படுகின்றது. விஷ்ணுவைப் பற்றிப் பேசுமிடங் களிலெல்லாம் பெரும்பாலும் அவனை உலகளந்த உத்தமனாகவே காட்டுகிறது வேதம். எல்லைகள் என்பது ப்ரபஞ்ச எல்லைகளைக் குறிக்கும். அதாவது படைப்பின்போது பகவான் விஷ்ணுவால் நிர்ணயிக்கப்பட்ட ப்ரபஞ்ச எல்லைகள். எல்லா எல்லைகளையும் கடந்து அவனது பேருருவம் வளர்கிறது என்பதால் அவன் எல்லா வற்றையும் கடந்த எல்லையே இல்லாத பரமன் என்பது தெளிவாகிறது. அவனால் படைக்கப்பட்டவைகளுக்கு எல்லை உண்டு. ஆனால் அனைத்தையும் படைத்தவனான அவனுக்கு

எல்லை என்பதே இல்லை. தன்னால் படைக்கப்பட்ட ப்ரஞ்சத்தையும் கடந்து பேருருவில் அவன் வளர்கிறான் என்றால் படைக்கப்பட்ட தேவமநுஷ்யாதிகளால் அவனது பேருருவின் தொடக்கத்தையும் முடிவையும் காண இயலுமோ? படைக்கப்பட்ட பிரபஞ்ச எல்லைகளையே மனிதனால் காணமுடியாது என்ற நிலை இருக்கும்போது, அவற்றையும் கடந்து நிற்கும், முதலும் முடிவும் இல்லாத பரமனின் எல்லையைக் காண மனிதன் கனவிலும் நினைத்துப்பார்க்கக்கூட சக்தியற்றவன் என்பதால் தான் ''உனது பெருமையை மானிடர்கள் அறியமாட்டார்கள்'' என்று சொல்லப்பட்டது.

தேச கால எல்லைகளைக் கடந்த அந்த பரமனான விஷ்ணு பூமியிலும் ஆகாயத்திலும் வைத்த இரண்டு அடிகளையே கண்டதாக மந்த்ரத்ரஷ்டாவான ரிஷி கூறுகிறார். மூன்றடிகளால் உலகை அளந்த பரமனின் மூன்றாவது அடிவைப்பை அந்தப் பரமன்தான் அறிவான் என்று கூறப்படுகிறது. அதாவது அந்த மூன்றாவது அடிவைப்பை தேவ மநுஷ்யாதிகளால் அறிய முடியாது என்று பொருள். **''த்$_3$வே இத$_3$ஸ்ய''** (ரிக்-1.155-5) என்று தொடங்கும் மந்திரத்திலும் இவ்வர்த்தம் சொல்லப்படுகிறது. இதனால் ஒர் உண்மை புலப்படுகிறது. அந்த மூன்றாவது அடிவைப்பை பகவான் தனது அப்ராக்ருத உலகமான பரமபதத்திலேயே வைத்துள்ளான் என்பது தெளிவான விஷயம். ஏனெனில் ப்ராக்ருத உலகைத்தான் மனிதனாலோ, தேவனாலோ அறிய முடியும். அப்ராக்ருதமான தனது உலகை பரமனே அறிவான். அந்த நித்யமான திவ்யலோகத்தை தேவமநுஷ்யாதிகள் தங்கள் கண்களால் காணமுடியாவிட்டாலும், அந்த திவ்யலோகமே விஷ்ணுவின் பரமபதம் என்று வேதமே கூறுவதால், அவ்வுயர்ந்த உலகிலேயே பரமன் விஷ்ணு தன் மூன்றாவது அடிவைப்பை வைத்தான் என்று கொள்வது சரியானதே.

ப்ராக்ருத உலகில் வசிப்பவனான இந்திரனுக்கு உதவ, தனது திவ்ய லோகத்திலிருந்து பகவான் விஷ்ணு வந்ததாக, இதற்கு முன் விளக்கப்பட்ட **'ஆயோ வியாஸ'** எனத் தொடங்கும் மந்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. அதாவது



இந்திரன் முதலான தேவர்கள் பகவான் விஷ்ணுவின் அப்ராக்ருத உலகிற்குச் செல்ல இயலாது என்பதால் பகவானே அவர்களுக்கு உதவ கீழிறங்கி வருகிறான் என்பது தாத்பர்யம். தங்கள் குறைகளை பகவானது பரமபதத்திற்குச் சென்று பகவானிடம் சொல்ல இயலாது என்பதால், இங்கிருந்தபடியே தேவமநுஷ்யாதிகள், தங்களின் குறைகளை பகவானிடம் கூறி பிரார்த்திக்கும்போது அவர்களுக்கு உதவ பகவான் தன் உலகிலிருந்து கீழிறங்கி வருகிறான். தன்னால் படைக்கப்பட்ட ப்ராக்ருத உலகை தனது சக்தியைக் கொண்டு நியமித்து வழிநடத்திக் கொண்டிருப்பதோடு, இவ்வுலகை கடந்து அப்ராக்ருதமான தன் உலகில் இருப்பதாலும் தான் கடவுள் (கடந்து உள் நிற்பவன் - அதாவது ப்ராக்ருத உலகைக் கடந்து இருப்பவனாகவும், ப்ராக்ருத உலகிற்குள் உள்ளிருந்து நியமிக்கும், அந்தராத்மாவாகவும் ஒரே சமயத்தில் அவன் இருப்பதால்) என்ற சொல் ஏற்பட்டது.

கடவுள் என்ற சொல் தமிழ்ச் சொல்லானாலும் அந்தச் சொல்லை விளக்கும் மந்திரமாக இம்மந்திரம் அமைந்திருக்கிறது என்றால் அது மிகை ஆகாது. அதாவது, கடவுள் என்ற சொல் வேதத்தின்படி பகவான் விஷ்ணுவையே குறிக்கும் என்பதும் மற்ற எந்த தேவதையையும் குறிக்காது என்பதும் இங்கு தெளிவாகின்ற விஷயம். இம்மந்திரத்தில் உள்ள **'ரஜஸீ'** என்ற சொல் பூமி, வான் என்ற இரு உலகங்களையும் குறிக்கிறது. **'ரஜ:'** என்றால் புழுதி என்ற பொருளும் உண்டு. பகவான் உலகளந்தபோது இவ்விரு உலகங்களும் அவனது திருவடிகளில் புழுதியாக ஒட்டியிருந்தன என்று தாத்பர்யம். **'ஸமூள்ஹமஸ்ய பாஹும்ஸுரே'** என்ற இடத்திலும் இவ்வர்த்தம் சொல்லப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இம்மந்திரம் யஜுர்வேதம் 2-ஆம் அஷ்டகம் 8ஆம் பிரச்னத்திலும் இடம்பெற்றுள்ளது.

**இந்த ஸூக்தத்தின் இரண்டாவது மந்திரம் பின்வருமாறு.**

*ந தே விஷ்ணோ ஜாயமானோ*
*ந ஜாதோ தே$_3$வ மஹிம்ந: பரமந்தமாப*
*உத$_3$ஸ்தப்$_4$நா நாகம்ருஷ்வம் ப்$_3$ருஹந்தம்*
*த$_3$ாத$_4$ர்த$_2$ ப்ராசீம் ககுப$_4$ம் ப்ருதி$_2$வ்யா:*

**இதன்பொருள்:** தேவனே! விஷ்ணோ! பிறந்த எவனும், பிறக்கப்போகும் எவனும் உன் பெருமையின் பரம எல்லையை அடையமாட்டான். அழகியதும் பெரியதுமான உத்தமலோகத்தை பரமபதத்தை நீ தரித்து நிற்கிறாய். பூமியின் மிகச் சிறப்பான அழகை நிலைத்திருக்கச் செய்கிறாய்.

பகவத் பரத்வத்தை மிகச் சிறப்பான முறையில் முழக்கமிடு கின்ற மந்திரம் இது. ''பிறந்த எவனும் பிறக்கப் போகும் எவனும்'' என்று குறிப்பிடுவதால் கர்மத்தால் பிறவியை அடைந்த தேவ மநுஷ் யாதிகளால் பகவான் விஷ்ணுவின் பெருமையை முழுவதும் அறிய முடியாது என்று பொருள். இந்திராதி தேவர்கள் அனைவரும் பிறந்தவர்களாகவே வேதத்தில் சொல்லப்படுகின்றது. ஆதி யந்தமில்லாத பிறவியற்ற பரமனான விஷ்ணுவின் மஹத்வத்தை பூரணமாக அறியப் பிறவியுள்ள தேவர்கள், மனிதர்கள் ஆகியோரால் முடியாது என்பதாம். பிறவியுள்ளவர்களால் அவனது மஹத்வத்தின் எல்லையை அறிய முடியாது என்று கூறுவதால், பகவான் விஷ்ணு பிறவியற்றவன் என்பது இம்மந்திரம் சொல்லும் முக்கியப் பொருளாகும். 'நாகம்' என்ற சொல்லுக்கு ''துக்கமே இல்லாத இடம்'' என்று பொருள். பெரியதும், காணத்தக்க அழகுள்ளதும் துக்கமே இல்லாததுமான இடம் பகவானின் பரமபதமே.

அதுவே இங்கு 'நாகம்' என்ற சொல்லால் அழைக்கப் படுகிறது. மற்ற இந்திராதி தேவர்களின் உலகங்களிலெல்லாம் பெரும்பாலும் ஸுகங்கள் அதிகமாக இருந்தாலும் துக்கங்களும் அங்கு ஏற்படுவதுண்டு. அசுரர்களால் அங்கு துக்கங்கள் ஏற்படுவதுண்டு. அவ்வுலகங்களில் உள்ளவர்களுக்கும் காலத்தால் ஏற்படும் விகாரமும் முடிவும் உண்டு. ஆனால் இவை எதுவுமே இல்லாத, முற்றிலும் ஆனந்தமே உருவான உலகம்தான் பகவான் விஷ்ணுவின் பரமபதம். அதனால்தான் அது ''நாகம்'' என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. தன்னலமற்ற புண்யகர்மங்கள் செய்யும் பகவத்பக்தர்களே அந்த உத்தமமான உலகை அடைகிறார்கள். தன்னலத்தை நோக்கமாகக் கொண்டு புண்ய கர்மங்கள் செய்பவர்கள் இந்திராதிகளின் உலகை அடைகிறார்கள். சிலர் இந்த 'நாகம்' என்ற சொல்லுக்கு ஸ்வர்கலோகம் என்று பொருள் எழுதுகிறார்கள். அப்பொருள் தவறானது. ஏனெனில் 'நாகம்' என்ற சொல் தரும் பொருள் ஸ்வர்கலோகத்திற்குப் பொருந்தாது.



பூமியின் சிறந்த அழகை நிலைநிறுத்துகிறான் பகவான் என்று கூறப்படுகிறது. 'பிராசீம்' என்ற சொல்லுக்கு 'பழமையான' என்று சிலரும் 'கீழ்திசை' என்று சிலரும் பொருள் எழுதுகிறார்கள். மேற்படி பொருள்கள் இச்சொல்லுக்கு இருந்தாலும் அப்பொருள் களில் இச்சொல்லை இந்தமந்திரத்தில் பயன்படுத்தப்படவில்லை. 'பழைய ஸ்தானத்தைத் தாங்குகிறான்' என்றால் 'புதிய ஸ்தாநம் எது?' என்ற கேள்வி எழும். பூமியின் 'புதிய ஸ்தாநம்', 'பழைய ஸ்தாநம்' என்ற பிரயோகங்களுக்குப் பொருத்தமான விளக்கங்கள் அமையவில்லை. 'கீழ்த்திசை எல்லை' என்று பொருள் கொள்வதும் பொருத்தமானதாக இல்லை. பூமியின் கீழ்த்திசை எல்லைகளைத் தாங்குகிறான் என்றால் மற்ற எல்லைகளை அவன் தாங்கவில்லை என்றோ அல்லது மற்ற எல்லைகளை மற்றவர்கள் யாரோ தாங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்றோ பொருள் கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். ஆகவே 'ப்ராசீம்' என்ற சொல்லுக்கு 'மிகச்சிறந்த' (Fore most) என்ற பொருளும் உள்ளதால், அப்பொருள் தான், இம்மந்திரத்தில் உள்ள இச்சொல்லுக்குப் பொருத்தமானதாக இருக்கும்.

அடுத்து, 'கடுப$_4$ம்' என்ற சொல்லுக்கு 'திசை', 'ஸ்தாநம்' என்றெல்லாம் பொருள் கொள்கிறார்கள். அப்பொருள்களும் இவ்விடத்தில் பொருந்தாது. 'கடுப$_4$ம்' என்பதற்கு 'அழகு' என்ற பொருளும் உண்டாகையால், அப்பொருளே இவ்விடத்தில் பொருந்தக் கூடியதாகும். அதாவது ''ப்ராசீம் கடுப$_4$ம்'' என்றால் ''மிகச்சிறந்த அழகு'' என்று பொருள். பூமியின் மிகச் சிறந்த அழகை பகவான் நிலைநிறுத்துகிறான் என்று தாத்பர்யம். பூமியில் வேத வைதிக கார்யங்கள் முறையாக முறையான காலங்களில் நடந்தால் வானம் பொய்க்காது மழை பொழிந்து பூமி செழித்து அழகுடன் பொலிந்து தோன்றும். இதை ஏற்படுத்துபவன் பகவானே என்பதால்தான் பூமியின் அழகை நிலைநிறுத்துபவன் அல்லது தாங்குபவன் அவன் எனப்படுகிறது. மேலும் 'கடுப$_4$ம்' என்பதற்கு சாஸ்த்ரம் அல்லது புனிதமான சட்டம் என்ற பொருளும் உண்டு. பூமியில் உள்ளோர் பின்பற்றவேண்டிய நியதிகள் என்று சில உள்ளன. அந்த நியதிகளை ஏற்படுத்தி அவற்றை பிறழாமல் பாதுகாப்பவனும் பகவானே. அதனால் ''பராசீம் கடுப$_4$ம்'' என்பதற்கு 'சிறந்த நியதி' என்ற பொருள் கொண்டு, ''பூமியின் சிறந்த

நியதியைப் பாதுகாத்து நிர்வகிப்பவன் பகவான் விஷ்ணு'' என்ற பொருளும் பொருத்தமானதாக இருக்கும். பூமியின் சிறந்த நியதி என்பது மானிடர்கள் அநுஷ்டிக்க வேண்டிய தர்மம். அதை நிலைநிறுத்தி வைப்பவன் பகவான் என்று அர்த்தம்.

**இனி மூன்றாவது மந்திரத்தைப் பார்ப்போம்.**

*இராவதீ-தே$_4$நுமதீ ஹி பூ$_4$தம்*
*ஸூயவஸிநீ மநுஷே த$_3$ஶஸ்யா ||*
*வ்யஸ்தப்$_4$நா ரோத$_3$ஸீ விஷ்ணவேதே*
*த$_3$ாத$_4$ர்த$_2$ ப்ருதி$_2$வீமபி$_4$ தோ மயூகை: ||*

**இதன் பொருள்:** ''பூமியே! வானமே! பிரார்த்திக்கும் மனிதனுக்கு அருள்புரியும் விருப்பமுடைய நீங்கள் அன்னம், பசுக்கள், தானியங்கள் இவற்றால் நிரம்பியிருக்கிறீர்கள். விஷ்ணுவே, இந்த பூவுலகையும் வானுலகையும் விசேஷமாக தரித்து நிற்கிறாய். பூமியைச் சுற்றிலும் உன் ஒளிக்கதிர்களால் தாங்குகிறாய்.''

பகவான் பூவுலகையும் தேவருகலமான வானுலகையும் தரித்து நிற்பதாலேயே அவ்விரு உலகங்களும் அன்னம், தான்யம், பசுக்கள் இவற்றால் நிறைந்து செழித்து இருக்கின்றன. பகவானின் திருவடி ஸ்பரிஸமே பூவுலகையும் வானுலகையும் செழிக்கச் செய்திருக்கிறது. பகவான் விஷ்ணு ஸர்வ வ்யாபியாகையாலே தன் ஒளிக்கதிர்களால் உலகை விளங்கச் செய்கிறான். இங்கு ''பூமியைச் சுற்றிலும்'' என்று சொல்லியிருந்தாலும், மற்ற உலகங்களுக்கும் அது உபலக்ஷணமாகையால் ஸகல உலகையையும் தன் அருள் ஒளியால் நிலைக்கச் செய்கிறான் என்று தாத்பர்யம். சென்ற மந்திரத்தில் தனது அப்ராக்ருத லோகமான பரமபதத்தை பகவான் தரித்து நிற்பதாலும் சொல்லப்பட்டது. இந்த மந்திரத்தில் ப்ராக்ருத உலகங்களான வானையும் பூமியையும் தரித்து நிற்பதாகக் கூறப்படுகிறது. 'பூமியைச் சுற்றிலும்' என்று கூறுவதால் பூமியைச் சுற்றியுள்ள அனைத்து ஒளி மண்டலங்களில் வ்யாபித்துள்ள எல்லா ஒளியும் பகவான் ஸ்ரீவிஷ்ணுவின் ஒளியின் ஒரு சிறு அம்சமே ஆகும். இவ்விஷயம் ஏற்கனவே மிகவும் விரிவாக விளக்கப் பட்டுள்ளது. இம்மந்திரம் யஜுர் வேதம் - 1ஆம் ஆரண்யகம் - 8ஆம் ப்ரச்னத்தில், 1-ஆம் காண்டம் 2-ஆம் ப்ரச்னத்திலும் வருகிறது.



**நான்காம் மந்திரம் விஷ்ணு, இந்திரன் இருவரையும் பற்றியது. அம்மந்திரம் பின்வருமாறு.**

*உரும் யஜ்ஞாய சக்ரது$_2$ரு லோகம்*
*ஜநயந்தா ஸூர்யமுஷா ஸமக்$_3$நிம் |*
*த$_3$ாஸஸ்ய சித்$_3$வ்ருஷஶிப்ரஸ்ய மாயா*
*ஜக்$_3$ந து$_2$ர்நரா ப்ருதநாஜ்யேஷு ||*

**இதன் பொருள்:** நீங்கள் (இந்திர விஷ்ணுக்கள்) வேள்விக் காக சூரியன், உஷை, அக்நி ஆகியவற்றை வெளிப்படுத்தி பெரிய உலகை உருவாக்கினீர்கள். தலைவர்களே! விருஷசிப்ரன் என்னும் கொடிய அரசனின் மாயா சக்திகளை யுத்தங்களில் அழித் தொழிந்தீர்கள்.

இந்திரனுக்கு உதவி செய்ய பகவான் விஷ்ணு தன் நித்யமான லோகத்திலிருந்து ஸ்வர்க்கத்திற்கு வருவது வழக்கம் என்பதை முன் மந்திரங்களில் பார்த்திருக்கிறோம். அசுரர்களுட னான யுத்தங்களில் பகவான் விஷ்ணு இந்திரனுக்கு ஸஹாயம் செய்தபடியால் அதை ஸாக்ஷாத்கரித்த ரிஷி இந்திரனையும் விஷ்ணு வையும் சேர்த்தே புகழ்கிறார் இம்மந்திரத்திலும் இதற்குப் பின்வரும் மந்திரங்களிலும். பூவுலகில் வேத வைதிக முறைப்படி வேள்விகள் நடந்தால்தான் வானுலகில் வாழும் இந்திராதி தேவர்கள் மனநிறைவடைவர். தேவர்கள் மனநிறைவு அடைந்தால் பூவுலகம் செழிக்கும். வேள்வி முதலிய நற்கருமங்கள் செய்ய உரிய காலம் உஷத்காலமாகும். அதாவது சூரிய உதயத்திற்கு சற்று முன்னுள்ள காலம். சூரிய உதயம் இல்லை எனில் உஷத்காலமும் இல்லை. இவை இரண்டும் இல்லாவிட்டால் வேள்வி என்ற அக்நி தோன்ற வழியே இல்லை. வேள்விகளால் தேவர்களுக்கு வலிமை ஏற்படுகிறது என்பதை அறிந்த அசுரர்கள் பூவுலகில் வேள்விகள் நடைபெறுவதைத் தடுக்க என்னென்ன செய்ய வேண்டுமோ அனைத்தையும் செய்வார்கள். தங்களின் மாயா சக்தியால் சூரியனே உதிக்காதபடி மறைத்துவிடுவார்கள். சூரியன் உதயமாகாதபடி மறைக்கப்பட்டால் உஷை போன்ற காலப்பாகுபாடுகளுக்கு வாய்ப்பே இல்லாமல் போய்விடும். சூரியனும் உஷையும் இல்லாத உலகில் வேள்வி என்ற அக்நி ஏற்படவழியில்லை. வேள்வி இல்லை எனில் உலகம் இருக்காது.

அதனால்தான் அந்த அந்த அசுரர்களுடைய மாயா சக்திகளை அழித்து சூரியனையும் உஷையையும் வெளிப்படுத்தி, வேள்வி என்ற அக்நி, தோன்ற, இந்திரனும் விஷ்ணுவும் வழி வகுத்தார்கள் என்று சொல்லப்படுகிறது. அதற்காக அவர்கள் விருஷசிப்ரன் என்ற கொடிய அசுரனின் மாயா சக்திகளை அழிக்க வேண்டியிருந்தது.

வேத வைதிக கர்மங்களே நல்ல சக்திகள் பலமடைய உதவி செய்யும். அதனால் தீய சக்திகள் தங்களின் பலத்தைப் பெருக்கிக் கொள்ள வேத வைதிக கர்மங்களை அழிக்க முற்படுவார்கள். அப்பொழுது அந்த தீயசக்திகளை முறியடித்து மறுபடியும் வேத வைதிக கர்மங்கள் உலகில் நடைபெறச் செய்ய வேண்டியது தேவராஜாவான இந்திரனின் கடமை. அக்கடமையைச் செய்வதில் அவனுக்கு இயலாமை தோன்றும்போது ஸர்வரக்ஷகனும் பரமாத்மாவுமான பகவான் விஷ்ணுவை அவன் பிரார்த்திப்பது வழக்கம். அப்பொழுது பகவான் விஷ்ணு இந்திரனோடு சேர்ந்து அத்தீய சக்திகளை அழித்து இந்திரனுக்கு உதவி செய்கிறார். ஒருவன் தேவராஜாவான இந்திரன். -தேவர்களின் தலைவன். மற்றொருவன் பகவான் விஷ்ணு. இந்திரனுக்கே தலைவன். அதனால் தான் இருவரையும் சேர்த்தே ''தலைவர்களே'' (நரா) என்று இம்மந்திரத்தில் விளக்கப்படுகிறது. 'நரா' என்பதற்கு ''நரௌ; ஹே நேதாரௌ'' என்று வ்யுத்பத்தி. அதனால்தான் 'தலைவர்கள்' என்ற பொருளில் 'நரா' என்ற சொல் உபயோகிக்கப்பட்டது.

**ஐந்தாவது மந்திரம் பின்வருமாறு:**

*இந்த$_3$ரா விஷ்ணூ த்$_3$ரும்ஹிதா: ஶஶ்ப$_3$ரஸ்ய*
*நவ புரோ நவதிம் ச ஶ்நதி$_2$ஷ்டம் |*
*ஶதம் வர்ச்சிந: ஸஹஸ்ரம் ச ஸாகம்*
*ஹதே$_2$ா அப்ரத்யஸுரஸ்ய வீராந் ||*

**இதன்பொருள்:** இந்திர விஷ்ணுக்களே! நீங்கள் சம்பரனுடைய உறுதியான தொண்ணூற்றொன்பது புரங்களை (கோட்டைகளை) இடித்து அழித்தீர்கள். வலிமை வாய்ந்த அவ்வசுரனின் நூறாயிரம் போர் வீரர்களையும் தடுக்கமுடியாதபடி ஒருவர் கூட மிஞ்சாமல் கொன்றொழித்து விட்டீர்கள். (தொடரும்)

# கண்டோம்! கண்டோம்!! கண்டோம்!!! கண்ணுக் கினியன கண்டோம்

ஆசிரியர்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ. கிருஷ்ணமாசார்யர்.

புதுக்கோட்டை - காரைக்குடி நெடுஞ்சாலையில் காரைக்குடிக்கு அண்மையில் அமைந்துள்ளது கோட்டையூர் என்னும் கிராமம். நகரத்தார் என்று அழைக்கப்படும் நாட்டுக் கோட்டை செட்டியார்கள் வசிக்கும் பகுதிக்கு செட்டிநாடு என்ற பெயர் வழங்குகிறது. கானாடுகாத்தான், கோட்டையூர் ஆகிய கிராமங்களும், தேவகோட்டை, காரைக்குடி ஆகிய நகரங்களும் செட்டிநாட்டின் ஒரு பகுதியாகும்.

கோட்டையூர் என்னும் கிராமத்தில் பிறந்தவர்தான் வையம் போற்றும் திரு. அழகப்பச் செட்டியார் அவர்கள். காரைக்குடியில் இயங்கிவரும் அழகப்பா பல்கலைக்கழகம் இவரால் நிறுவப்பட்டது. இந்த ஊரில் பிறந்த K.V.S.V. அழகப்ப செட்டியார் 1944ஆம் ஆண்டு புகழ்பெற்ற சைவத் தலமாகிய திருவண்ணாமலை திருக்கோயில் கும்பாபிஷேகத் தினை முன்னின்று நடத்தியவர். கோட்டையூரில் பிறந்த ரோஜா முத்தய்யா செட்டியார் என்பார் புகழ்பெற்ற ரோஜா முத்தையா ஆய்வுக்கூடத்தையும் நூலகத்தையும் நிறுவியவர்.

செட்டி நாடு பாரம்பரியம் மிக்க பண்பாளர்களைக் கொண்ட பகுதியாகும். இந்தப் பகுதியிலுள்ள வீடுகள் ஒவ்வொன்றும் அரண்மனைகள் போல் காணப்படுகின்றன. ஒவ்வொரு வீடும் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இந்தப்பகுதியில் காணப்படும் வீடுகள் அனைத்தும் மார்பிள் எனப்படும் பளிங்குக் கற்களால் இழைக்கப்பட்டுள்ளன. நீண்ட அகலமும், நீளமும் கொண்ட அறைகள் பலவற்றைக் கொண்டவை. பர்மா நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்

பட்ட தேக்கு மரங்களைக் கொண்டு நேர்த்தியாகக் கட்டப் பட்ட வீடுகளை செட்டிநாட்டில் காணலாம். குறிப்பாக கானாடுகாத்தான், கோட்டையூர் ஆகிய கிராமங்களில் இத்தகைய அரண்மனை போன்ற வீடுகளை இன்றும் காணலாம்.

செட்டிநாட்டு மக்கள் சிறந்த வணிகர்கள், உழைப் பாளிகள், எல்லாவற்றிற்கும்மேலே தெய்வபக்தி நிறைந்த வர்கள். இவர்கள் பல திருக்கோயில்களுக்கான திருப்பணி களையும், கும்பாபிஷேகம்,பராமரிப்பு ஆகியவற்றை இன்றும் மேற்கொண்டு வருகின்றனர். அத்தகைய தகையாளர்களில் ஒருவர் கைங்கர்ய ஸ்ரீமான். LPV. வீரப்ப செட்டியார் அவர்கள்.

திரு. LPV. வீரப்ப செட்டியார், திருமதி. V. விசாலாட்சி ஆச்சி தம்பதியினரின் ஷஷ்ட்யப்த பூர்த்தி விழா 6.7.2013 அன்று தொடங்கி 8.7.2013 அன்று புனர்பூச நக்ஷத்திரத்தில் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ.ஸ்ரீ.ஸ்ரீ. திரிதண்டி சின்ன ஸ்ரீமந் நாராயண ஜீயர் ஸ்வாமி ஆசியுடன் பாரோர் புகழும் வண்ணம் பெருஞ்சிறப்புடன் நடைபெற்றது. செட்டிநாட்டு மக்கள் வைணவத்தையும், சைவத்தையும் இரு கண்களாகப் போற்றி வருபவர்கள்.

நாட்டுக்கோட்டை செட்டியார்கள் என்றழைக்கப்படும் இவர்கள் காவிரிபூம்பட்டினத்தின் அண்மையில் அமைந் துள்ள குறையலூர், மங்கைமடம், திருநகரிப் பகுதியை சார்ந்த வணிகப்பெருமக்களாவர். திருமங்கை வளநாடு என்று இந்தப்பகுதிக்குப் பெயர் வழங்கி வந்தது. திருமங்கையாழ் வார் அவதரித்தது மண்ணியாற்றின் நீர் தங்கும் திருக்குறைய லூராகும். ஆங்கே கோயில் கொண்டிருப்பவர் வீரநரஸிம்ஹப் பெருமாள். இந்த வீரநரஸிம்ஹப் பெருமாளே இவர்களுடைய குலதெய்வமாகும். இந்த வீரநரஸிம்ஹப் பெருமாள் திருக் கோயிலை நகரத்தார்கள் சில ஆண்டுகளுக்கு முன்பு புனர் நிர்மாணம் செய்ய நிதியுதவி புரிந்துள்ளனர். காவிரி பூம்பட்டினம் ஆழிப்பேரலையால் (சுனாமி) அழிவுற்ற போது, அங்கிருந்த வணிகப் பெருமக்கள் கூட்டமாக சிவகங்கைப் பகுதிக்கு குடிபெயர்ந்தனர்.



இந்த சிவகங்கைப் பகுதியானது தஞ்சை மராட்டிய மன்னனான முதலாம் சரபோஜி காலத்தில் தனிப்பகுதியாக உருவாகியது. தஞ்சை மராட்டிய மன்னனான ஸாஹஜியின் தம்பி முதலாம் சரபோஜி காலத்தில் இராமநாதபுரத்தின் ஆட்சிப் பொறுப்பு எய்துவது பற்றிச் சச்சரவு ஏற்பட்டது. கிழவன் சேதுபதியின் சுவீகார மகன் விஜய ரகுநாதர் 1720இல் இறந்தார்; இறப்பதற்கு முன் தன் உடன் பிறந்தவனின் மகன் தண்டைத்தேவரை அரசனாக்கினார்; கிழவன் சேதுபதியின் காமக்கிழத்தியின் மகன் பவானிசங்கர் தான் அரசனாக விரும்பினார். தஞ்சை அரசர் உதவி புரிந்தார். ஆனால் பவானி சங்கர், தான் கூறியவண்ணம் பாம்பாற்றுக்கு வடபாலுள்ள நாட்டைத் தரவில்லை. ஆகவே சரபோஜி தண்டைத் தேவருக்கு உதவிபுரிந்து பவானிசங்கரோடு போர்புரிந்து சிறைப்படுத்தினார். பின்னர்ப் பாம்பாற்றுக்கு வடபகுதியைச் சரபோஜி பெற்றார். எஞ்சிய பகுதி ஐந்தாகப் பிரிக்கப்பட்டு மூன்று பகுதிகளைத் தண்டைத் தேவரும், எஞ்சிய இரண்டு பகுதிகளைச் சசிவர்ணத்தேவரும் பெற்றனர். சசிவர்ணத் தேவர் சிவகங்கைச் சீமைக்கு உரியவரானார். இதுவே சிவகங்கை சமஸ்தானம் தோன்றிய வரலாறாகும். கோட்டையூர், சிவகங்கை மாவட்டத்தின் ஒரு பகுதியாகும்.

காவிரிபூம்பட்டினத்திலிருந்து சிவகங்கைப் பகுதிக்கு குடிபெயர்ந்த நாட்டுக்கோட்டைச் செட்டியார் தம் குலத் தொழிலான திரைகடலோடி திரவியம் தேடும் வாணிபத் தொழிலை தொடர்ந்து செய்து வந்தனர். பர்மா, இந்தோனி ஷியா, மலேசியா ஆகிய இடங்களுக்குச் சென்று பொருள் திரட்டினர். அவ்வாறு திரட்டிய பொருளின் ஒரு பகுதியை இறைப்பணிக்கும், வேதபாடசாலைகள் நிறுவுவதற்கும் செலவிட்டனர். இன்றும் அந்தணர்களிடம் பெருமதிப்புக் கொண்டு அவர்களைப் போற்றி வருகின்றனர்.

இதன் வெளிப்பாட்டை கைங்கர்ய ஸ்ரீமான். LPV. வீரப்ப செட்டியார் இல்லத்தில் நடைபெற்ற மணிவிழாவின் போது காணமுடிந்தது. ஸ்ரீவைஷ்ணவர்களாய் ஒரு காலத்தில் திகழ்ந்த இவர்கள் பல்வேறு காரணங்களால் சைவ சமயத்தை தழுவி அதனைப் போற்றி ஆதரித்து வருகின்றனர். ஆனால்

கைங்கர்ய ஸ்ரீமான். LPV. வீரப்ப செட்டியார் அவர்கள் தன்னுடைய மணிவிழாவின்போது நாலாயிர திவ்யப்பிரபந்த ஸேவை நடைபெற வேண்டுமென்றும், நான்கு வேதங்களும் ஓதப்பட வேண்டுமென்றும் தம்முடைய விருப்பத்தைத் கைங்கர்ய ஸ்ரீமான். ஸ்ரீ.உ.வே. திருக்கோட்டியூர் மாதவனிடம் தெரிவித்திருந்தார். ஷஷ்டியப்தபூர்த்தி விழாவிற்குப் பூர்வாங் கமாக 5.7.2013 வெள்ளிக்கிழமையன்று ஸ்ரீ.உ.வே. திருக் கோட்டியூர் மாதவன் அவர்களுடைய திருமாளிகையில் எழுந் தருளியிருக்கும் அர்ச்சாவதார எம்பெருமானான சௌம்ய நாராயணப் பெருமாளுக்கும், உபயநாச்சிமார்களுக்கும் திருக்கல்யாணம் நடைபெற்றது. 34 கலசங்கள் ஆவாஹனம் செய்யப்பட்டு, பிரதானகலசத்தில் 108 திவ்ய தேச எம்பெரு மான்கள் மந்த்ரப்பூர்வமாக ஆவாஹனம் செய்யப்பட்டனர்.

வைதிக நெறிப்படி திருக்கல்யாண உத்ஸவம் நடை பெற்றது குறிப்பிடத்தக்கது. கூடியிருந்த மக்கள் அவ்வப் போது நடைபெறும் வைதிகச் சடங்கின் முக்கியத்துவத்தை அனைவரும் அறிந்து கொள்ளும் வண்ணம் எடுத்துரைத்து திருக்கல்யாண உத்ஸவத்தை நடத்தித்தந்தார் திருக்கோட்டி யூர் பாபு என்கிற ஸ்ரீ.உ.வே. வெங்கடேசன். அவருக்கு உதவியாக மந்த்ரபூர்வமான யாகங்களைச் செய்தவர் ஸ்ரீ.உ.வே. வாசுதேவன்.

6.7.2013 சனிக்கிழமையன்று 66 திவ்யதேசங்களில் இருந்து எழுந்தருளிய அருளிச்செயல் வல்லுநர்கள், நாலாயிர திவ்யப்பிரபந்த ஸேவையைத் தொடங்கினர். நான்கு வேதங்கள், ஸ்ரீராமாயணம், பகவத்விஷயம், அஷ்டாதச ரகஸ்யங்கள் ஆகியவற்றின் பாராயணம் சுமார் 80 ஸ்வாமிகளால் மேற்கொள்ளப்பட்டது. இந்தப் பாராயணங்கள் அனைத்தும் 8.7.2013 அன்று முடிவுற்று சாற்றுமுறை நடைபெற்றது.

7.7.2013 ஞாயிற்றுக்கிழமையன்று சமுதாய ஆன்மீக நற்பணிகள் பலவற்றைச் செய்து வருகின்ற சான்றோர்கள் இருவருக்குப் பாராட்டு விழா நடைபெற்றது. ஆழ்வார் திருநகரி ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ எம்பெருமானார்



ஸந்நிதி மடாதிபதி, 41வது பட்டம் ஸ்ரீரங்கராமானுஜ ஜீயர் ஸ்வாமி, குன்றக்குடி ஆதீனகர்த்தர் தவத்திரு. பொன்னம்பல அடிகளார், கோவிலூர் ஆதீனம் சீர் வளர் சீர் மெய்யப்ப ஞான தேசிக ஸ்வாமி ஆகியோர் முன்னிலையில் பாஞ்சஜன்யம் ஆசிரியர். ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ. அ. கிருஷ்ணமாசார்யர் மற்றும் பிள்ளையார்பட்டி ''விகாஸ்ரத்னா'' டாக்டர். சிவஸ்ரீ K. பிச்சை குருக்கள் ஆகிய இருவரும் பாராட்டப் பெற்றனர். பாஞ்சஜன்யம் ஆசிரியர் ஆற்றிவரும் நற்பணிகளுக்காக ''அறநெறிக் காவலர்'' என்னும் விருது கோட்டையூர் ஆன்றோர் அரங்கத்தால் வழங்கப்பட்டது. கீழ்க்கண்ட பாராட்டுப் பத்திரமும் வாசித்து அளிக்கப்பட்டது.

''அகிலம் அனைத்தையும் அன்பொடு காத்திடும்
ஆதவன் முதலாய் அனைவருக்கும் அருளிடும்
இன்சொல் வேத முதல்வனாய் விளங்கிடும்
ஈடும் எடுப்பும் தன்னிகரில்லான்!
உருவாய் அருவாய் அனைத்தையும் படைத்திட்ட
ஊழிமுதல்வனாய் திருமறை உரைகின்ற
எண்ணில் பல்குணத்து எந்தையாய் முந்தைய
ஏனமாய்வந்து இவ்வுலகினைத் தரிப்பவன்!
ஐம்பெரும் நிலையினன், ஆழிநற்சங்கொடு
ஒண்பெரும் வில்லும் கதையும் தாங்கி
ஓதிய வேதத்து ஒளியாய் அருள்பவன்!
நான்மறை பகரும் ஆழ்வார், ஆரியர்
பாங்குடன் காட்டிய பண்புடை அரங்கனின்
பாதமலர் நிழல் தங்கியே பார்புகழ்
நிதி நிந்திய ரிஷிகுலப் பிறப்பும்
மதிநிகர் ஞான விசாக நாள் சிறப்பும்

விதிசெய் வேத, சாஸ்த்திர - முறையுடன்
அறம் பிறழா உயர்குண நற்கல்வியும்
அறிந்தவர், சிறந்தவர், அருள்நெறி செறிந்தவர்!
கீதையை தேரினில் சொன்னவன் பெயருடை
பாதை மாறா பகலவன் போன்று நீர்!
பாரினில் அறத்தினைக் காத்திடும் பண்பரே!
வீரமாய் மிடுக்குடன் விளங்கிடும் வேந்தரே!
நாரணன் அருளுடன் நலமுடன் வாழ்கவே!
ஆரணப் பொருளாம் அரங்கனின் அருளுடன்
சீர்மிகு தலங்களை சிறப்புடன் காத்திட
கிருஷ்ணமாசாரிய பீஷ்மரே வாழ்கவே!
பக்கமாய் நின்றிடும் பாங்குடைத் தேவனார்
தக்கதாய் தலத்தினில் தனிப்பெரும் புகழுடன்
மிக்கதாய் அருள் செய்து விளங்கிடச் செய்த நீர்
தக்கவர் ''அறநெறிக் காவலர்'' என்பதாம் விருதினை
பெருமை பொங்கிட வழங்கி மகிழ்கிறோம்!''

பிள்ளையார்பட்டி ''விகாஸ்ரத்னா'' டாக்டர். சிவஸ்ரீ K. பிச்சை குருக்கள் அவர்களுக்கு ''அருள்நெறி ஆசான்'' விருது வழங்கப்பட்டது.

அன்றைய விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய குன்றக்குடி ஆதீனக்கர்த்தர் தவத்திரு. பொன்னம்பல அடிகளார் அவர்கள் சிறந்ததொரு உரையாற்றி அனைவரையும் மகிழ்வித்தார். வைணவத்தின் பெருமையை முழுதுமாக அறிந்தவர் தவத்திரு.குன்றக்குடி அடிகளார் என்பதை அன்றையதினம் அவர் ஆற்றிய சொற்பொழிவின் மூலம் அனைவரும் அறிந்து கொண்டனர். பெரும்பாலான சொற்பொழிவுகள் கேட்போர் மனதைத் தொடுவதில்லை. நாம் சொல்லும் கருத்து அதைச் செவி மடுப்போர் உள்வாங்கிக் கொண்டனரா என்று சிந்தித்துப் பெரும்பாலானோர் உரையாற்றுவதில்லை. உயர்ந்த சமுதாயச் சிந்தனைகள் பலவற்றை தன்னகத்தே கொண்டது வைணவம். இன்றைய காலகட்டத்தில் வைணவத்தின் உன்னத நெறிகள் மக்களைச் சென்றடையக் கூடுமானால் இராமானுசருக்கு இன்பம் பயக்கக்கூடிய செயல் வேறொன்றும் இருக்க முடியாது. ஏதோ வைணவர்கள்தான் வைணவத்தின் பெருமையை பேச முடியும் என்பதை இல்லையெனச் செய்து வருகிறார் தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

அன்றைய தினம் அவர் ஆற்றிய உரை அங்கே கூடியிருந்த ஆயிரக்கணக் கானோர் மனதில் வைணவத்தைப் பற்றிய மதிப்பீட்டை உயர்த்திக் காட்டியது. 'தமிழுக்கு வைணவம் ஆற்றிய தொண்டைப்போல வேறு எந்தச் சமயமும் ஆற்றிடவில்லை, சமுதாயச் சிந்தனைகளை வளர்த்தது வைணவம், இராமானுசருக்கு நிகரான மதத்தலைவர் இதுகாறும் தோன்றவில்லை, வைணவமே தமிழ், தமிழே வைணவம் என்று நாம் கொள்ளலாம் போன்ற கருத்துக்களை முன்வைத்தார் தவத்திரு குன்றக்குடி அடிகளார். மாறனேரி நம்பிகளுக்கு சரம கைங்கர்யம் செய்த பெரியநம்பியின் வரலாற்றை ஒரு பாமரனும் அறிந்து கொள்ளும் வகையில் அன்று அவர் எடுத்துக் கூறினார். 'வைணவ நெறி'க் கோட்பாடுகளையும், நம் ஆசார்யர்களின் வாழ்வில் நடந்த பல்வேறு நிகழ்ச்சிகளையும், சமுதாயச் சிந்தனையோடு எடுத்துரைத்தார் திரு அடிகளார்.

இராமானுசருடைய ஆயிரமாவது ஆண்டு விழாக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக இராமானுசர் மற்றும் வைணவத்தின் ஒப்பற்ற பெருமையை மக்களிடையே எடுத்துச் செல்வதற்கு ஆயிரம் குன்றக்குடி அடிகளார்கள் தோன்ற வேண்டும். மக்களிடையே வைணவத்தை பரப்புவதற்கு தற்போதைய ஆன்மீகச் சொற்பொழிவாளர்கள் முன்வர வேண்டும். மக்களின் அறிவுத்திறனுக்கு ஏற்ப ஒவ்வொரு கிராமமாகச் சென்று, வைணவத்தின் பெருமையையும், இராமானுசர் ஆற்றிய பணிகளையும் எளிய முறையில் மக்களிடையே எடுத்துச் சொல்ல ஓர்

எடுத்துக்காட்டாய் திகழ்பவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார். வைணவத்தின் பெருமையை எவ்வாறு எடுத்துச் சொல்வது என்பதை குன்றக்குடி அடிகளார்களிடம் இருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

திருக்கோட்டியூர் மாதவன் ஸ்வாமி, திருக்குறுங்குடி வழக்கில் பல்வேறு ஆதாரங்களை எடுத்துத்தந்து வழக்காடுவதற்கு உதவிசெய்தவர் பாஞ்சஜன்யம் ஆசிரியர் என்றும், பல்வேறு வைணவ நூல்களை பதிப்பித்து வருபவர் என்றும் பாராட்டிச் சொற்பொழிவாற்றினார்.

விழாவில் பங்கு கொண்ட மத்திய மண்டல உயர் காவல்துறை அதிகாரி திரு. ராமசுப்ரமண்யம் அவர்கள் மிகச் சிறந்த முறையில் உரையாற்றினார். மாறிவரும் சூழ்நிலையில் மக்களிடையே ஒற்றுமையை எவ்வாறு ஏற்படுத்துவது என்பது பற்றி அவர் விரித்துரைத்தார். நாம் அனைவரும் அறிந்த கதை, காக்காயிடமிருந்து பாட்டுப்பாடச் சொல்லி வடையைச் எடுத்துச் சென்ற நரியின் கதையாகும். ஒரு கிழவி வடை சுட்டுக் கொண்டிருந்தாள். அங்கு வந்த ஒரு காக்காய் வடையை தன் அலகாலே தூக்கிக் கொண்டு, ஒரு மரத்தின் கிளையில் அமர்ந்திருந்தது. அப்போது அங்குவந்த ஒரு நரி 'காக்காய் காக்காய்' நீ நன்றாகப் பாட்டுபாடுவாய் என்று நான் அறிவேன். இப்பொழுது பாடிக்காட்டு என்றது. உடனே காக்காய் பாடத்தொடங்கியது. அதனடியாக அலகில் இருந்த வடை கீழே விழுந்தது. நரி தூக்கிக் கொண்டு சென்று விட்டது. அதன்பிறகு இந்தக் கதை மாற்றம் பெற்றது. பாட்டுப்பாடு என்று சொன்னவுடன், காக்காய் விழிப்புடன் தன் அலகிலிருந்த வடையை எடுத்து, தன் கால்விரல்களுக்கடியில் வைத்துக் கொண்டு பாட்டுப் பாடியது. போனால் போகட்டும் என்று தன் கால்விரலில் இருந்த பாதி வடையைக் கிள்ளிப் போட்டது, ஆனால் தற்போது இந்த காக்காய் நரிக்கதை, மேலும் மெருகுபெற்றுள்ளது. இப்போது வடை சுட்ட கிழவியே, தானே காக்காயுக்கு ஒரு வடையையும், நரிக்கொரு வடியையும் கொடுத்து நரியின் ஏமாற்று வேலைக்கு ஓர் முற்றுப்புள்ளி வைத்தாளாம்.



ஆபத்துக்களை எவ்வாறு தவிர்த்துக் கொள்ள வேண்டுமென்பதை அனைவரும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும், சமய நூல்கள் போதிக்கும் நீதிக் கதைகள் நமக்குப் பல உண்மைகளை தெளிவுபடுத்துகின்றன என்பதையும் அவர் எடுத்துரைத்தார். விழா நிகழ்ச்சிகளை திரு. R.M.முத்தையா செட்டியார் தொகுத்து வழங்கினார்.

8.7.2013 அன்று திவ்யப்பிரபந்தம் மற்றும் வேதசாற்றுமுறை இனிதே நடைபெற்று சுமார் 70 திவ்யதேசங்களிலிருந்து மாலைப்ரஸாதங்கள் எழுந்தருளப்பண்ணப்பட்டு அவை மணிவிழாக் கண்ட தம்பதியருக்கு ஸமர்ப்பிக்கப் பட்டன. திரு. வீரப்ப செட்டியார் சைவ நெறியை பின்பற்றி வாழும் குடும்பத்தினர் ஆகையால், நகரத்தார் வழக்கப்படி அன்றைய தினம் கணபதிஹோமம் நடைபெற்றது. சுமார் 150 சிவாசார்யர்கள் வருகை தந்திருந்தனர். திருச்செங்கோடு ஸுப்ரபாதம் சுந்தரம் குருக்கள் அவர்கள் தமது இனிமையான குரலில் தேவாரப் பாடல்களைப்பாடி அனைவரையும் மகிழ்வித்தார். 80 வயது நிரம்பிய இவருடைய குரல் 20 வயதே நிரம்பிய இளைஞனின் குரலை ஒத்திருந்தது குறிப்பிடத்தக்கது. அன்றையதினம் 64 குடங்களில் புனிதநீர் நிரப்பப்பெற்று ஆயுஷ்யஹோமம், நவக்ரஹ ஹோமம், ம்ருத்யுஞ்ஜய ஹோமம் ஆகியவை நடைபெற்றன.

சனி, ஞாயிறு, திங்கள் மற்றும் செவ்வாய் ஆகிய நாட்களில் தம்பதியர் பூஜை நடைபெற்றது. விலைவுயர்ந்த பட்டுப்புடவை, வஸ்திரங்கள், திருமாங்கல்யம் ஆகியவை பூஜிக்கப்பட்ட தம்பதியருக்கு வழங்கப்பட்டன. அந்த தம்பதியருடைய ஸ்ரீபாததீர்த்தத்தை மணிவிழாக்கண்ட தம்பதியினர் பெற்று அதைப்புனித நீராக உட்கொண்டனர். 8.7.2013 அன்று 'கோ பூஜை' மற்றும் 'கஜ பூஜை' வைதிக நெறிப்படி மேற்கொள்ளப்பட்டன.

9.7.2013 அன்று புனர்பூச நக்ஷத்திரத்தில் உற்றார் உறவினர் புடைசூழ மங்கல வாத்யங்கள் முழங்கிட, வேத வல்லுநர்கள் ஆசீர்வாதம் செய்திட திரு.வீரப்ப செட்டியார் விசாலாட்சி தம்பதியினருக்கு கடங்களில் பூரித்து வைக்கப்

பட்ட புனிதநீரால் மங்கல நீராட்டு விழா நடைபெற்றது. சுமார் மூன்றரை மணி நேரம் நடைபெற்ற இந்த மங்கல நீராட்டு விழாவில் முதலில் வேதவிற்பன்னர்கள் மங்கல நீரை சொரிந்திட்டனர். திரு. வீரப்ப செட்டியாரின் தாயார் மணி விழாக்காணும் தம்பதியினருக்கு புனித நீரைத் தெளித்திட அதன்பிறகு உற்றார், உறவினர்கள் அழைப்புப் பெற்ற அனைவரும் வரிசையில் வந்து மங்கல நீரைச் சொரிந்து சென்றனர். இது செட்டிநாட்டில் நிலவிவரும் பல பாரம்பர்ய பழக்க வழக்கங்களில் ஒன்றாகும்.

மங்கல நீராட்டிற்குப் பிறகு, வேதஒலியுடன் திருமாங்கல்ய தாரணம் நடைபெற்றது. செட்டிநாட்டுக்கே உரிய பல்வேறு பழக்கவழக்கங்களை இந்த விழாவில் என்னால் காண முடிந்தது. உற்றார், உறவினர்களை மற்றை யோரிடமிருந்து வேறுபடுத்திக் காண்பதற்காக பள்ளிச் சீருடைபோல ஒரே நிறத்தில் ஒரே மாதிரியான புடவைகளைப் பெண்களும், பட்டினால் ஆன வேட்டி சட்டையை ஆண்களும் தரித்துக் கொண்டு காட்சியளித்தனர். எந்த வைதிக நிகழ்ச்சி நடைபெற்றாலும் ஒழுங்குமுறை மாறாது புன்சிரிப்புடன் வரவேற்பதையும், ஸந்மானம் அளிப்பதையும் காண முடிந்தது. சுருங்கக் கூறின் செட்டிநாட்டு மக்களின் பல்வேறு பண்பாடுகளை நாம் நம் வாழ்க்கையில் கடை பிடிக்கக் கூடுமானால் அது நாம் சார்ந்த சமூகத்தின் பண்புகளை உயர்த்திக் காட்டும் என்பதில் ஐயமில்லை.

5.7.2013 அன்று தொடங்கி திருமெய்யம் திவ்யதேசத்தில் எம்பெருமான்களுக்கு ஜ்யேஷ்டாபிஷேகம் நடைபெற்றது. திருவல்லிக்கேணி திவ்யதேசத்திலிருந்து வருகைதந்த வைகானஸ அர்ச்சகர்கள் யாகசாலை கைங்கர் யத்தை மேற்கொண்டனர். 8.7.2013 அன்று ஜ்யேஷ்டா பிஷேக வைபவம் பூர்த்தியாயிற்று. மணிவிழாக் கண்டருளும் திரு. L.P.V. செட்டியார் அவர்களுடைய கைங்கர்யமாக இந்த ஜ்யேஷ்டாபிஷேக வைபவம் நடைபெற்றது குறிப்பிடத் தக்கது.



மொத்தத்தில் கண்டோம்! கண்டோம்!! கண்டோம்!!! கண்ணுக்கினியன கண்டோம் என்று தலைப்பிட்டதின் நோக்கமே நகரத்தாரின் வாழ்க்கை அனைவருக்கும் ஓர் படிப்பினையைத் தரும் என்பதை வெளிப்படுத்துவதற்கே ஆகும். அவர்களுடைய தர்மச்சிந்தனை, தாம் திரட்டிய திரவியத்தை திருக்கோயில் திருப்பணிகள் மற்றும் மண்ட பங்கள் நிர்மாணிப்பதற்கும், யாகசாலைகளுக்கான திரவி யத்தை மனமுவந்து ஸமர்ப்பிப்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். அந்தணர்கள் மீதான காரணமில்லாத வெறுப்பு பரவியுள்ள தமிழ்நாட்டில் அந்தணர்கள் மீது மதிப்புக்கொண்ட ஒரு சமூகம் நற்பணிகளைச் செய்து வருகிறது என்பதையும் இந்த விழாவில் கலந்து கொண்ட அனுபவம் எனக்கு அறிவுறுத்தியது. ✱✱✱

**ஹைதர்அலியும், திப்புசுல்தானும் எதிர்தட்டு நாயகர்கள் (Villains) அவர்கள் கதாநாயகர்கள் (Heros) அல்லர்.**

## முதல்வரின் தவறான முடிவு!

**(தர்மசக்தி 7.7.2013 தேதியிட்ட இதழில் வெளிவந்த கட்டுரை.)**

தமிழக முதல்வர், முஸ்லீம் பயங்கரவாதிகளின் முகமூடி கட்சியான மனிதநேய மக்கள் கட்சியோடு தேர்தலில் கூட்டு வைக்கும்போதே செல்வி. ஜெயலலிதா அவர்களின் பயங்கரவாத எதிர்ப்பு மழுங்கடிக்கப்படவே இந்தக் கூட்டு உதவும் என்று எச்சரித்தோம்! இந்த ஆட்சியில் அது நடந்து விட்டது!

ம.ம.க. எம்.எல்.ஏ. முதல்வரிடம் ஹைதர் அலி, திப்பு சுல்தானுக்கு மணி மண்டபம் கட்ட வேண்டும் என்று சட்டசபையில் கோரிக்கை வைக்கவும், அதனை முதல்வர் ஏற்று அறிவித்துள்ளார். இது தமிழனுக்கு தலைகுனிவு! தமிழர்களை

கொன்று குவித்த ஹைதர், திப்புசுல்தான் ஆக்கிரமிப்பாளன், துருக்கியர்களை பாரதத்தின் மீது படையெடுக்கத் தூண்டியவன்.

பல்லாயிரம் இந்து கோயில்களை இடித்து நிர்மூல மாக்கியவன். லட்சக்கணக்கான இந்துக்களையும், கிறிஸ்தவர் களையும் வாள் முனையில் மதமாற்ற அச்சுறுத்தி, மதமாற மறுத்தவர்களை கொன்று குவித்தவன். இது பற்றி ஏராளமான ஆதாரங்கள் தமிழக வரலாற்றில் குவிந்து கிடக்கின்றன. இதனை vsrc.com இணையதளத்தில் காணலாம். தஞ்சைப் பல்கலைக் கழக வெளியீடான தஞ்சை மராட்டிய மன்னர் மோடி ஆவணத் தமிழாக்கமும் குறிப்புரையும் என்ற நூலில் (மூன்று தொகுதிகள்) ஹைதர்அலி, திப்புசுல்தான் ஆகியோரின் அடாத செயல்கள் விவரிக்கப்பட்டுள்ளன. இந்த கொடுங்கோலன் ஆங்கிலேய ஏதேச்சதிகாரத்திற்கு எதிராக, பாரதத்தின் சுதந்திரத்திற்காக போராடியவன் என்ற நற்சான்றிதழை முதல்வர் தந்திருப்பது வருந்தத்தக்கது.

இந்தப் பொய்யுரையை மானமுள்ள ஒவ்வொரு தமிழனும் எதிர்க்க வேண்டும். இப்போது எதிர்க்கத் தவறினால் முகலாயர்கள், சுல்தான்கள் பாரதத்தின் மேம்பாட்டிற்காக பாடுபட்டவர்கள் என்று இந்துக்களின் தொடைகளில் கயிறு திரித்து நம்ப வைத்துவிடுவார்கள். ம.ம.க.வின் பச்சோந்தித்தனம் ராஜ்ய சபை தேர்தலில் தெரிந்துவிட்டது. கொஞ்சமும் வெட்கமின்றி ம.ம.க.வின் இரண்டு எம்.எல்.ஏ.க்களும் தி.மு.க.வை ஆதரித்து அதிமுகவின் முதுகில் குத்தியுள்ளனர்! இனியாவது தமிழக முதல்வர் முஸ்லீம்களின் மாறாத நயவஞ்சக மனோ பாவத்தை உணர வேண்டும். தமிழக முதல்வர் ஹைதர் அலி, திப்புசுல்தானுக்கு மணிமண்டப அறிவிப்பை வாபஸ் பெற வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். இதனை எதிர்த்துப் போராட வாருங்கள்! இணைந்து போராடுவோம்! ஹைதர்அலியும் அதன்பிறகு, திப்புசுல்தானும் திருவரங்கம் பெரியகோயிலில் தங்கியிருந்து செய்த அத்துமீறல்களையும், ஒரு லட்சம் வராகன் பணம் கொடுத்தால் கோயிலைப் பாழ்படுத்தாமல் சென்றுவிடுவதாகக் கூறிய நிகழ்ச்சிகளையும் கோயிலொழுகில்



விவரிக்கப்பட்டுள்ளது. முனைவர் ஹரிராவ் இந்த நிகழ்ச்சிப்பற்றிய குறிப்புகளை தமது ஆங்கில மொழிபெயர்ப்பில் தந்துள்ளார்.

"After S. 1703, in the month of Ani of Plavanga, Haidar marched with a lac of soldiers, occupied Tondaimandalam and Colamandalam, destroying the country through which he passed, and surrounded Srirangam. A crore of in habitants could not contain themselves in the temple. Alagiyamanavala Perumal again intervened, and acting as Samayyan, the letter-bearer of Haidar, obtained a 'kavul' or lease-deed from the latter, making over Srirangam to Himself, through the chief accountant of Haidar, who was a Srivaisnava, and thus saved the temple. Haidar, who had stationed himself in the temple for six days suffered heavy losses on the seventh (on which day he had intended to plunder the temple) and ran away.

The Olugu gives the correct date for Haidar's attack on Srirangam. While advancing against Madras he suddenly attacked Trichinopoly in 1781 AD. The fort was not prepared to stand a siege. When it was about to surrender he raised the siege and marched north to meet the English forces under Eyre Coote.

After S. 1712, in Sadarana, Tippu Saheb, of the most cruel temperament, the son of Haidar, invaded with a huge army and destroyed the country alround. When he entered Srirangam, Alagiyamanavala Perumal again intervened and as a result Jiyar, Bhattar, and Vaduladesikar obtained a 'kavul' from his hands. The Perumal did not find occasion to quit the Bhupalarayan. For six days he (Tippu) remained in the temple and received many presents. On the Seventh day he called Vaduladesikar, Rangacaryar and Bhattar and asked for a lac of gold piece of his army expenditure. Bhattar agreed while Srirangaraja Vaduladesikar refused to pay. Tippu became wild at which all the inhabitants thought there was an end of them. Again Alagiyamanavalan interfered and, as a result, Tippu was

pacified through laudatory addresses made by Srirangaraja Vaduladesikar. In the same year, Sadarana, Chinnayya Mudali came to the store house of the temple to take paddy for the palace use. Srirangaraja Vaduladesikar and others made huge protests at the gateway of the store house and declared that they would sacrifice their lives, at which the paddy was not taken. The Mudali did many repairs to the walls and conducted an abhiseka for the God.

The date of Tippu's attack on Srirangam is also correctly given by the Olugu.viz, S. 1712 (1790 AD.) Tippu descended on the Carnatic towards the end of 1790. Though he threatened Trichinopoly he did not actually lay siege to it. He occupied Srirangam and put the countryside to fire and sword. When an English army approached his camp he evacuated Srirangam and retreated in a northern direction pillaging and plundering on his way."

**ஹைதர்அலியும், திப்புசுல்தானும் தமிழ்நாட்டுக் கோயில்களில் புகுந்து ஆங்காங்கு பணிபுரிந்தோரின் அவயவங்களை வெட்டிச்சாய்த்த கொடூரச் செயல்களை மோடி ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. நமது நாட்டு வரலாறு இந்துசமய விரோதிகளால் உருவாக்கப்படுகிறது. மேலும் நேர்மையான உண்மைக்குப்புறம்பில்லாத வரலாற்று நிகழ்வுகளை மறைத்து வரலாற்று நூல்கள் படைக்கப்படுகின்றன. மோடி ஆவணங்கள், மதுராவிஜயம் போன்ற நூல்கள் பாடத்திட்டங்களில் இடம் பெறுவதில்லை. அவை இடம்பெறவும் அனுமதிக்க மாட்டார்கள். இந்தியர்களுக்கு வரலாற்று உணர்வு மிகவும் குறைவு. தென்தமிழகத்தை கி.பி. 1323ஆம் ஆண்டு முதல் கி.பி. 1371ஆம் ஆண்டு ஈறாக ஆண்ட மதுரை சுல்தான்களுடைய ஆட்சி நடைபெற்றது.**

மதுரை சுல்தான்களுடைய ஆட்சி காலத்தில் தமிழ் நாட்டில் திருக்கோயில்களின் நிலைமை குறித்து மதுரா விஜயத்தில் கீழ்க்கண்ட குறிப்புகள் காணப்படுகின்றன.



''திருவரங்கத்தில் அரவணைமேல் அறிதுயில் கொள்ளும் அரங்கனது உறக்கம் கலையாதிருப்பதற்காக மேலிலிருந்து விழுந்த கற்களை ஆதிசேஷன் தன் தலைமேல் தாங்கி நின்றான். அந்தத் திருக்கோயிலில் மற்றைய கடவுளர் சிலைகளுக்கு ஏற்பட்ட ஆபத்தை சொற்களால் வர்ணித்திட இயலாது. திருக்கோயிலின் கதவுகளைப் பூச்சிகள் செல்ல ரித்துக் கொண்டிருந்தன. மஹா மண்டபங்களிலும் தோரண வாயில்களிலும் செடிகள் பச்சைக் கொடியை ஆட்டிக் கொண்டு இருப்பதைப் போன்ற தோற்றத்தை ஏற்படுத்தி யிருந்தன. ஒரு காலத்தில் மிருதங்கத்தின் ஒலி பரவியிருந்த இடத்தில் குள்ள நரிகள் ஊளையிடும் ஓசை பரவியிருந்தது. திருவரங்கனுடைய திருப்பாதங்களை வருடிச் சென்ற காவிரி யாறு தன்னுடைய போக்கை மாற்றிக் கொண்டு முகம்மதியர் கள் மேற்கொண்ட அழிவைப் பிரதிபலிப்பதுபோல பல கிளைகளாகப் பிரிந்துப் பாயுமிடங்களிலெல்லாம் வெள்ளப் பெருக்கெடுத்து விளை நிலங்களைப் பாழ்படுத்திச் சென்றது. நாட்டில் அழிவை ஏற்படுத்திய முகம்மதியர்களுக்கு எந்த வகையிலும் தான் சளைத்தவள் அல்ல என்று அறைகூவலி டுவது போல இருந்தது காவிரி நதியின் இந்தச் செயல்.

'மல்லைச் செல்வ வடமொழி மறைவாணர் வேள்வி யுள் நெய்யழல்வான்புகைபோய்★ திடவிசும்பில் அமரர் நாட்டை மறைக்கும்' பெருமை பெற்றிருந்த திருவரங்கம் திருவீதிகளில் மாமிசத்தை வாட்டுவதால் ஏற்படும் புகையும் படையெடுத்து வந்த முகம்மதியப் படைவீரர்கள் குடித்துக் கும்மாளமிடும் ஒலியுமே நிறைந்திருந்தன. ***(மதுராவிஜயம் 8ஆவது காண்டத்தில் விவரித்துள்ளபடி)*** மதுரையைச் சூழ்ந்திருந்த பசுமை நிறைந்த காடுகள் அழிக்கப்பட்டன. நெடிதுயர்ந்த தென்னை மரங்கள் வெட்டப்பட்டு அவை இருந்த இடங்களில் நீண்ட இரும்புக் கம்பிகள் பொருத்தப்பட்டன. அவற்றில் இரக்கமின்றிக் கொல்லப்பட்ட மனிதர்களின் தலைகள் பொருத்தப்பட்டி ருந்தன. ***(இபின் பட்டூடாவின் நாட்குறிப்புகளிலும் இந்தச் செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.)*** நெடுஞ்சாலைகளில் அமைந்திருந்த கிராமக் குடியிருப்புகளில் ஒலித்துக் கொண்டி ருந்த நடன மங்கையரின் சிலம்பின் ஒலி மறைந்து, காதும் மூக்கும்

அறுக்கப்பட்டு அந்தணர்களின் அவலக்குரல் ஒலித்துக் கொண்டிருந்தது. தரையில் இழுக்கப்பட்டு வந்து இரும்புக் கூண்டு களில் அடைத்து வைக்கப்பட்டபோது அவர்களிட்ட ஓலக்குரல் நெடுஞ்சாலை முழுவதிலும் ஒலித்துக் கொண் டிருந்தது. ஊர்களின் நுழைவில் அமைந்திருந்த தோரண வாயில்களில் இருந்த சிற்பங்கள் ஒரு காலத்தில் பட்டாடை தரித்திருந்தன. ஆனால் முகம்மதியரின் ஆட்சியின்போது அவைகள்மீது சிலந்தியின் வலைகள் பின்னப்பட்டிருந்தன. அரண்மனையில் அந்தணர்களைக் குளிர்ந்த மணம் மிக்க சந்தனத்தை அளித்து வரவேற்ற நிலை மாறி, அரண்மனை யெங்கும் துன்புறுத்தப்பட்ட அந்தணர்களின் கண்ணீர்த் துளிகளே வெள்ளமிட்டுக் கொண்டிருந்தன.

அழகான மங்கையர் தாமிரபரணி ஆற்றில் குளித் திடும் போது பெருகி ஓடிய நீரில் அவர்கள் மேனியிலிருந்து கரைந்து வந்த சந்தனம் எங்கும் நறுமணம் பரப்பிக் கொண்டு சென்ற நிலைமாறி, முகம்மதியர்களால் வெட்டப்பட்ட பசு மாட்டின் சிவந்த குருதி நீரில் கலந்து அந்த நீரின் வெண்மை நிறத்தை சிவப்பு நிறமாக்கிக் கொண்டிருந்தது. அழிந்து போன காடுகளில் குடிகொண்டிருந்த ஆந்தைகளின் ஒலியை விட முகம்மதியர்களுடைய இல்லங்களில் கூண்டிலே இருந்த கிளிகள் பேசிய பாரசீக மொழியின் ஒலியே எங்கும் நிறைந்திருந்தது''.

''வ்யாக்ரபுரி என்று அழைக்கப்பட்டு வந்த சிதம்பர த்தில் மனிதர்களுடைய குடியிருப்புகள் அழிந்து பட்டதால் காடுகள் மண்டி ஜீவனுடைய தெருவெங்கும் சஞ்சரித்துக் கொண்டிருந்தன. (வ்யாக்ரம் என்றால் ஸ்ம்ஸ்க்ருத மொழியில் புலியைக் குறிக்கும்.) உரிய காலங்களில் மழை பொழியாத தால் பூமி தன் வளப்பத்தை இழந்தது. அதனால் விளை பொருட்கள் பயிரிடப்படவில்லை. முகம்மதியருடைய படை யெடுப்பினால் கொல்லப்பட்டவர்கள் பலர், எஞ்சியிருந்த சிலரையும் யமன் வாரிக் கொண்டு போனான். கலியரச னுடைய ஆட்சி எங்கும் பரவியிருந்தது. தர்மத்தின் குரல் வளை நெறிக்கப்பட்டது. அடக்குமுறை அவிழ்த்துவிடப் பட்டது. மக்கள் ஏன் இன்னும் உயிர் வாழ்கின்றோம் என்று தமக்குத் தாமே நொந்துகொண்டனர். நாட்டின் இத்தகைய சூழ்நிலை மக்கள் மனத்தை நெருடியது''.

***

# விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

ஆசிரியர்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ.கிருஷ்ணமாசார்யர்.

இதழ் 170இன் தொடர்ச்சி.

'விஞ்ஞானம்' என்ற சொல்லிற்கு 'அறிவு' என்று பொருள். மெய்ஞ்ஞானத்தை அடைவதற்கு விஞ்ஞானம் எனப்படும் அறிவு தேவைப்படுகிறது. வேதவேதாந்தங்களில் விவரிக்கப்படும் ப்ரபஞ்சம், சிருஷ்டி, அழிவு, மீண்டும் உற்பத்தி ஆகியவற்றை அறிந்து கொள்ள வேண்டுமானால், விஞ்ஞானத்தின் உண்மை களைத் தெரிந்து கொள்ள வேண்டும். இல்லாவிடில் அந்த வேதாந்த ஞானம் எந்தத் தெளிவையும் அதைப் படிப்பவனுக்கு ஏற்படுத் திடாது. சொற்ஜாலத்தை மட்டும் துணையாகக் கொண்டு வேதாந்தத்தை தெளிவாக அறிந்து கொள்ள முடியாது. ஆகவே வேதாந்த விசாரத்தின் உட்செல்வதற்கு முன் விஞ்ஞானம் தரும் அரிய செய்திகளைக் கருத்தில் கொண்டிட வேண்டும்.

பிரபஞ்சம் என்றால் என்ன? என்ற கேள்விக்கு, பூமி, சூரியன், கிரஹங்கள் நம்மைச் சுற்றியுள்ள 10 ஆயிரம் கோடி நக்ஷத்திரங்களும் சேர்ந்த ஒரு கூட்டமே பிரபஞ்சமாகும். சூரியனும் ஒரு நக்ஷத்திரமே! பூமிக்கு அருகில் இருப்பதால் அது பெரிதாகத் தெரிகிறது! பல சூரியன்களும், நக்ஷத்திரங்களும் ஆகாயத்தில் சிதறிக் கிடக்கின்றன. ஆனால் அவை ஓர் அமைப்புக்குட்பட்டு சிதறிக்கிடக்கவில்லை. ஒரு நக்ஷத்திரத்திலிருந்து இன்னொரு நக்ஷத்திரத்திற்கு ஒரு குறிப்பிட்ட இடைவெளி என்பது கிடையாது.

அவையிடையே லட்சம், கோடி, ஒளி ஆண்டுகள் இடைவெளி அமைந்துள்ளது. தவிர, ஒன்று மேலே இருக்கும். மற்றொன்று கீழே இருக்கும். ஆனால் இந்த மொத்தச் சிதறலில் ஒரு வரையறுக்கப்பட்ட முறைமை உள்ளது.

நமது பிரபஞ்சமே ஒரு சக்கர வடிவத்தில் அமைந்துள்ளது. 10 ஆயிரம் கோடி நக்ஷத்திரங்கள் இந்த வடிவமைப்பில் சிதறிக் கிடக்கின்றது. இந்தச் சக்கரத்திற்கு ஏதாவது அளவுகள் உண்டா? என்று ஆராயக் கூடுமானால், ஒரு வண்டிச் சக்கரத்தில் ஒரு காலின் ஓரத்தில் சின்னதாக ஒரு எறும்பு அமர்ந்து கொண்டு, சக்கரம் முழுவதின் அமைப்பையும் கணிப்பது என்றால் எப்படி இருக்கும்? அதைப்போலத்தான். நாம் தான் அந்த எறும்பு! விஞ்ஞானிகள் தங்கள் புத்தி கூர்மையால் நம் பிரபஞ்சத்தின் வண்டிச் சக்கர அல்லது விஷ்ணு சக்கர வடிவமைப்பை கண்டுபிடித்துள்ளார்கள்.

பிரபஞ்சம் ஒரு சக்கரம் என்றோம், சக்கரத்தின் குறுக்கு அளவு தான் அதன் நீளம். இந்த விதத்தில் பிரபஞ்சத்தின் ஒரு நுனியிலிருந்து அதற்கு நேர் எதிரே உள்ள நுனி வரை அமைந்துள்ள தூரம் லட்சம் ஒளி வருடம்! ஒளி வருடம் என்றால் என்ன? ஒளி விநாடிக்கு 1,86,000 மைல் அல்லது மூன்று லட்சம் கி.மீ. வேகமுடையது. அவ்வாறு ஒளியானது ஒரு வினாடிக்கு மூன்று லட்சம் கி.மீ. சென்றால் ஒரு ஒளி ஆண்டு என்பது 3,00,000 X 60 X 60 X 24 X 365 கி.மீ. அதாவது ஒரு வருடத்திற்கு 5,88,000,00,00,000 மைல்கள் போகும். (ஐந்து லட்சத்து எண்பத்தெட்டாயிரத்து கோடி மைல்). இதுவே ஒரு ஒளி ஆண்டு என்றழைக்கப்படுகிறது. இவ்வளவு நீண்ட இடைவெளிகளில் மிதந்து கொண்டிருக்கும் நக்ஷத்திரங்கள் அசைவற்று இருக்கின் றனவா என்ற கேள்விக்கு இல்லையென்று விஞ்ஞானம் பதிலளிக்கிறது.

அந்த நக்ஷத்திரங்களும், அதைச்சுற்றியுள்ள கோள்களும் தனது மையத்தையே அது சுற்றிக் கொண்டிருக்கிறது. தன்னைத் தானே சுற்றிக் கொண்டிருக்கிறது. ஆமாம்! பூமி தன்னைத்தானே சுற்றுகிறது. சூரியனையும் சுற்றுகிறது! சூரியனோடு சேர்ந்து பிரபஞ்சத்தையும் சுற்றுகிறது. நம் பூமியை உதாரணமாக எடுத்துக் கொண்டால், 24 மணி நேரத்திற்கு ஒரு முறை தன்னைத்தானே சுற்றுகிறது. பிறகு நகர்ந்து போய் சூரியனை ஒருமுறை சுற்றுகிறது. இதற்கு ஒரு வருடம் எடுக்கிறது.பிறகு சூரியன், நக்ஷத்திரங்கள் எல்லாவற்றுடனும் சேர்ந்து நமது பிரபஞ்ச மையத்தை ஒரு முறை சுற்றுகிறது. இதற்கு எடுத்துக் கொள்ளும் நேரம் 22 கோடி வருடங்கள்!



'கல்பம்' என்று சொல்கிறார்களே, அதற்கும் இதற்கும் ஏதாவது தொடர்பு உண்டா? என்று ஆராய்ந்தால் உண்டு என்பதே பதிலாகும். கல்பம் என்பது 43 கோடியே 20 லட்சம் வருடங்கள். பிரபஞ்சம் தன்னைச் சுற்ற எடுக்கும் நேரம் 22 கோடி வருடங்கள். ஆக பிரபஞ்சம் இருமுறைச் சுற்றினால் கிட்டத்தட்ட ஒரு கல்பம் என கணக்கிடப்படுகிறது. கல்பம் கல்பமாக சிருஷ்டிகள் நடந்து கொண்டு இருப்பதாக நம் முன்னோர்கள் கூறியுள்ளனர். இதையே வேதம் பல இடங்களில் குறிப்பிடுகின்றது. ஆழ்வாரும், ''காலசக் கரத்தொடு வெண்சங்கம் கையேந்தினாய்! ஞாலமுற்றும் உண்டுமிழ்ந்த நாராயணனே!'' (திருவாய்மொழி 4-3-6) என்று குறிப்பிடுகிறார். நம் பிரபஞ்சம் போன்று கோடிக்கணக்கில் இதர பிரபஞ்சங்கள் உள்ளன என்று விஞ்ஞானிகள் கணித்துள்ளார்கள். இந்தப் பிரபஞ்சங்கள் அனைத்தும் வெற்று வெளியில் சுழன்று சுழன்று அகன்று போய்க் கொண்டிருப்பதாகவும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். திடீர் வெடிப்பு வெடித்து, (Bigbang) அதன் வேகம் இன்னும் சிருஷ்டிகளாகச் சிதறிக் கொண்டே போகிறது என்பது ஒரு சாரார் கொள்கை!

இரண்டாவது சாரார் (விஞ்ஞானிகள்) சிருஷ்டிக்கு முடிவு என்பதே கிடையாது. தோன்றத் தோன்ற மறைவு ஏற்பட்டுக் கொண்டே வருகிறது என்று கூறுகிறார்கள். நமது வேதமும் இதைத்தான் சொல்கிறது. சிருஷ்டியும், அழிவும் அனாதியாக நிகழ்ந்து கொண்டு வருகின்றன என்கிறது. நமது ஸ்தோத்திரங் களில் ஒன்று கீழே உள்ளதுபோல் கூறுகிறது. ''முன் பிரளயங்களில் நீ எப்படி சூரிய சந்திரர்களை உண்டாக்கினாயோ அதுபோலவே இந்தப் பிரளயத்திலும் உண்டாக்கி இருக்கிறாய்!''

பிரபஞ்சங்கள் யாவும் சேர்ந்தது பேரண்டம் என்று அழைக்கப்படுகிறது. நக்ஷத்திரங்கள் எப்படி நெருங்கி கூட்டங் கூட்டங்களாக உள்ளனவோ, அதுபோலவே பிரபஞ்சங்களும் கூட்டங்களாகவே காணப்படுகின்றன. நமது பிரபஞ்சம் ஒரு இருபது பிரபஞ்சக் கூட்டத்தில் உள்ளது. தனித்து இல்லை. நமது பேரண்டத்தில் தொலைநோக்கி மூலம் 100 கோடி பிரபஞ்சங்களை விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இன்னும் எவ்வளவோ இருக்கின்றன என்கிறார்கள். அண்மையில் ஹப்பிள் (Hubble)

டெலஸ்கோப் ஆயிரம் கோடி பிரபஞ்சங்களை கணித்திருக்கிறது. ஒவ்வொரு ப்ரபஞ்சத்திலும் 10 ஆயிரம் கோடி நக்ஷத்திரங்கள் உள்ளன. ஆமாம். அண்டவெளியை நோக்கும்போது நாமும் நமது வாரம், மாதம், வருடம் காலங்களும் வெகு அற்பம்! நாமே வெகு அற்பம். ஆனால் பூமியில் வாழ்பவன், தான் உலகாளப்பிறந்தவன், தன்னை விஞ்சிய அறிவாற்றல் படைத்தவன் இல்லை என்ற அஹங்கார மமகார எண்ணங்கொண்டு, பிறருக்குத் துன்பத்தை விளைவித்துக் கொண்டே இருக்கிறான். வாழ்நாள் என்பது மிகக் குறுகியது. அனைவரும் ஒரு காலத்தில் மரணம் அடைகிறார்கள். பஞ்சபூதங்களோடு இந்த உடல் கலந்து விடுகிறது. ஆனால் ஆத்மாவிற்கு அழிவில்லை. அது கோடிக்கணக்கான உலகங்களில் ஒரு உலகத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. நம் பூமியைப் போன்ற இன்னும் வளமிக்க, அறிவாற்றலில் சிறந்த மனிதர்கள் வாழும் பூமிகள் பலவுண்டு. ஆகவே, இந்த பூமியில் வாழ்பவன், தான் வாழுங்காலத்தில் நல்லதையே செய்ய முற்பட வேண்டும். 'யானே என்னுடையதே' என்ற எண்ணத்தைப் போக்கிக் கொள்ள வேண்டும்.

இந்த ப்ரபஞ்சங்களிடையே ஈர்ப்புசக்தி (Gravitational force) உண்டு. பிரபஞ்சம் ஒருநாள் அழிவுறும் இதுவே மஹாப்ரளயம். எப்படி பிறந்து விரிந்ததோ, மீண்டும் அது சுருங்கி பழையநிலை அடையும் என்று ஒரு கருத்து! இது விஷயத்தில் நம் ரிஷிகள் கருத்து வேறு! சிருஷ்டி என்பது எப்போதும் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது! அதே நேரம் அழிவும் எப்போதும் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. இந்தக் கருத்தை அண்மையில் விஞ்ஞானிகள் பலர் ஆதரித்து வருகின்றனர்.

நமது சூரிய குடும்பம் பால்வெளி எனப்படும் ப்ரபஞ்சக் கூட்டத்தில் அமைந்துள்ளது. சூரியனுக்கு ஒன்பது கோள்கள். சூரியனுக்கு கோள்கள் இருப்பதுபோல, மற்ற நக்ஷத்திரங்களுக்கும் கோள்கள் அமைந்துள்ளன. சந்திரன்களும் உண்டு. ஆனால், நக்ஷத்திரங்கள் நமக்கு வெகு தொலைவில் இருக்கின்றன. (நமது அண்மை நக்ஷத்திரம் சுமார் நாலரை ஒளி வருஷம் தூரத்தில் உள்ளது! அதாவது 5,88,000,00,00,000 மைல்களை நாலரையால் பெருக்கினால் கிடைக்கும் தொலைவில் அமைந்துள்ளது.)

(தொடரும்)